Free Circulation Germany-England

கார்த்திகை.Nov.2019

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

Successful Publishing 25 Years IN EUROPE

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

29 வது ஆண்டு நிறைவில்

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை



Königswall 16 (Am HBF) 44137 Dortmund

Tel:0231 162377

Fax:0231 147836

# போட்டியும் பொறாமையும் கூடப்பிறந்தவையா!

Dr.IN

## Non-violence from Childhood

கார்த்திகை 27

“மாவீரர் நாள்”

தியாக மறவர்களுக்கு

எங்கள் இதயஞ்சலி




இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா!



S.K.SILKS GOLD PARAADISE

Dortmund நகரில்

ஆடைகள் அனைத்தும்

என்றும் தரமும் மலிவும் நிரந்தரம்

நாடுங்கள் மகிழுங்கள்!

17th Anniversary

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647

Adler str 33 - 44137 Dortmund

U.K

செல்வராஜா

Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG

RHEINISCHE STR 52
44137 DORTMUND

Tel:0231 819288

Germany

Page.11

Gopara Gnanam

RHEINISCHE STR 62
44137 DORTMUND

Tel: Mob:0171 330 6542
Tel:0231 53482206

Page.23

StaR-Impex

Kipper Str.03
44147 Dortmund/ Germany

Tel:0231 860 26 96

S.37

# நல்லாக் கொம்பு சீவி விடுகிறார்கள்

– மாதவி




இங்கே கொம்பு சீவி விடுகிறார்கள் என்றால் கூராகச் சீவி விடுகிறார்கள் என்று அர்த்தமோ அல்லது நண்பர்களாக இருப்பவர்களை இல்லாதது, பொல்லாதது எல்லாம் சொல்லி, ஒற்றுமை நீடிக்கக் கூடாது என்று விரும்பி இரண்டு தரப்பினருக்கும் இடையில் கொம்பு சீவிவிடுகிறார்கள் என்றோ அர்த்தம் இல்லை.

நான் சொல்ல வந்தது வெறும் கொம்புச் சீவல்தான். இந்தச் சீவல் இல்லை என்றால் ஊரில் ஆண்கள், பெண்கள், எல்லோரும் அன்று காப்பிலித் தலைபோல் மயிர் உருண்டு திரண்டு சிக்காய்க் கிடக்க அலையவேண்டி இருந்திருக்கும். காரணம் இங்கு சீவப்படும் கொம்பில்தான் அன்று தலை வாரும் சீப்புச் செய்தார்கள். இன்று சீப்புச் செய்ய ஆயிரம் வழிகள் உண்டு. இருந்தும் பழமை பேணுகிறோம் என்று உயிர்களை வதைக்கிறார்கள்.

பழைமை பேணுவது என்றால் எவ்வளவு நல்ல காரியங்கள் உண்டு. முதல் உலகம் மாசுபடாமல் காக்கலாமே. வயலில் தெருவில் என்று எங்கு பார்த்தாலும் மாடுகள் அன்று வேலை செய்தன. இன்று எல்லாமே இயந்திரமயம். அதனால் மாடுகளுக்கு வேலை இல்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. பசுமாட்டைச் சொல்லவில்லை. அது பால் தருவதால் அதன் மதிப்பே வேறு. எருத்து மாடுகள் தனியே இனப்பெருக்கத்திற்காக மட்டுமே பயன்படுவதுபோல் அலைகின்றன.

ராஜஸ்தான் மாநிலத்தில் (Mandawa) மண்டவா நகரில் தெருத்தெருவாக மாடுகள் நடந்து திரிவதைக் காண முடிகின்றது. வாகனம் செல்வது என்றால் முதல் மாடுகள் அனுமதி தரவேண்டும். அவ்வளவு நெருக்கமாக மாடுகள் செல்லும்.

எருதுகள் வேலையின்றி அலைகின்றன, அதனை எப்படி கொல்லாமல் பயன்படுத்தலாம் என்பதற்கு எடுத்த முடிவுதான் இந்த கொம்பு சீவல். உயிருடனே மாடு இருக்க, கொம்பைச் சீவி எடுத்துப் பின் மருந்து கட்டிவிடுவார்கள். கொம்பு சீவிய மாடுகள் சீழ் வடிய, குருதிகொட்ட, கொட்டகைக்குள் கட்டி விடப்பட்டு இருக்கும். ஒரு கொம்பு சீவிய மாடுகளும் இரு கொம்பு சீவியமாடுகளும் அங்கு நிறைந்து காணப்படும். கொம்பு வாங்கும் வணிகர்கள் மாட்டுத்தொழுவத்திற்கு சென்று அவர்களே தமக்கு நல்ல கொம்புகளைக் கொண்ட மாட்டினைத் தெரிவு செய்வார்கள்.

ஊனமுற்ற மாடாகவும், இருக்கலாம், ஒட்டி வதங்கிய மாடாகவும் இருக்கலாம், கொம்பு மட்டும் பெரிதாக இருந்தால் போதும் சீவல்தான். இந்த கொம்பு சீவும் வளாகத்தில் ஒரு அழகிய கொட்டிலில் அலங்கரிக்கப்பட்ட மாடு ஒன்று படுத்திருக்கிறது. அது அதிஸ்டக்கார மாடு. அந்த மாட்டுக் கொம்புக்கு அழகிய வர்ணம் பூசப்பட்டு, பொட்டோடும் பூவோடும் ஆனந்தமாய் படுத்து உறங்க, அங்கு வருபவர்கள் உண்டியலில் பணத்தைப்போட்டு பின் மாட்டின் தலையில் தொட்டு வணங்கி, ஆசி பெற்று, அது மட்டுமல்ல மூன்று தடவை மாட்டினைச் சுற்றிவிட்டு அப்படியே நேராக கொம்பு வெட்டச் செல்வார்கள்.

ஆளுக்கு ஆள் காசு கொடுத்து கொம்பு சீவி அறுத்துத் செல்கிறார்கள். அலங்கரிக்கப்பட்ட மாட்டினைத் தொட்டு வணங்கி ஆசி பெற்றவனும், அறுக்கிறான், ஆண்டவனை நினைப்பவனும், ஆண்டவனை மறப்பவனும் அறுக்கின்றான். தலை சீவ யார் இப்ப மாட்டுக்கொம்பு கேட்டது. தண்ணீர் பிடிக்க மட்டும் பிளாஸ்டிக் குடம் கேட்கிறது. தலை வாரத்தான் கொம்பு தேவையோ என மாடுகளுக்கு பேச்சு வந்தால் முதல் இதனைத்தான் கேட்கும்.

இது ஒரு புறம் இருக்க மாடுகளை தேசிய மிருகமாக அறிவிக்கும்படிச் சொல்லி Rajasthan High Court judge கூறியுள்ளார். அது மட்டுமல்ல மாட்டுச் சிறுநீர் சிறந்த மருந்தாகும். அதனைக் குடித்து வந்தால் பல நோய்கள் தீரும் என்று சொல்வதுடன் நிற்காமல், சிறுநீரை (Gomutra) போத்தல்களில் அடைத்து 15 ரூபாவில் இருந்து 350 ரூபா வரை விற்பனைக்கும் விட்டுள்ளார்கள். பசு தாய்க்குச் சமன். மாடு மனிதனுக்கு ஒரு வைத்தியசாலை போன்றது என பலவற்றை ஆதராத்துடன் காட்டியும் உள்ளார்கள். மாட்டுச் சிறநீரின் பயன்கள் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதனை பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

மாடு மேய்ப்பவன் கிராமத்தில் பெரியவன் என்ற கௌரவம் ராஜஸ்தான் மக்களிடையே உண்டு. அதனால் இரவில் மாடுகளை அழைத்துக் கொண்டு பட்டிக்கு செல்லும் வேளை, தூய வெள்ளை ஆடை அணிந்து வெள்ளைத் தலைப்பாகையுடன் மிடுக்காக மாடுகளின் நடுவே நடந்து வருவார்கள். இதனை மாலைப் பயணத்தின்போது காணக்கூடியதாகவும் இருந்தது. பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மாட்டினை தாயாக மதிப்பவர்; வணங்குபவர். தெருக்களில் அலையும் மாட்டுக்கும் மோடி அவர்களால் ஒரு விடிவு வரலாம் என மக்கள் அங்கு எதிர்பார்க்கின்றார்கள்.
















**வெற்றிமணி**

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**

**ஓசை 279**



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் **மு.க.சுப்பிரமணியம்**

(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

**பிரதம ஆசிரியர்**

"ஓவியக்கலைவேள்"

**கலாநிதி**

**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

**Vettimaniy Ltd**

Company No: 8876276


# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கப்போவது தமிழர்களா?

- கொழும்பிலிருந்து ஆர். பாரதி -

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில தினங்கள் மட்டுமே உள்ள நிலைமையில் பிரசாரங்கள் உச்சகட்டத்தை அடைந்துள்ளன. கடந்த மாதம் நடைபெற்ற எம்பிலிப்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலின் முடிவுகள் ஜனாதிபதி தேர்தல் எவ்வாறு அமையும் என்பதற்கான ஒரு முன்னோட்டமா என்ற கேள்வியும் எழுகின்றது. எம்பிலிப்பிட்டிய தேர்தலில் ராஜபக்ஷவின் பொது ஜன பெரமுன பெருவெற்றி பெற்றிருக்கின்றது. இது நாட்டுமக்கள் அனைவருடைய உணர்வுகளினதும் பிரதிபலிப்பு எனவும், ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றிக்கான கட்டியம் எனவும் ராஜபக்ஷ தரப்பினர் சொல்லத் தொடங்கியுள்ளனர். ஆனால், அதனை ஏற்க ஐ.தே.க. தயாராகவில்லை.

எம்பிலிப்பிட்டிய ராஜபக்ஷக்களின் கோட்டையான தென்பகுதியில் அமைந்துள்ள ஒரு பிரதேச சபை. கடந்த பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்ற போது தவிர்க்க முடியாத சில காரணங்களால் இந்த பிரதேச சபைக்கு மட்டும் தேர்தல் நடத்தப்படவில்லை. அக்டோபர் இரண்டாம் வாரத்தில் அது நடத்தப்பட்டது. இங்கு ராஜபக்ஷக்களின் பொது ஜன பெரமுன வெற்றி வெறும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. அதனால், நாடுமுழுவதிலும் காணப்படும் உணர்வுகளின் பிரதிபலிப்பாக இதனைக் கருத முடியாது என்பது ஐ.தே.க.வின் கருத்து. அது எப்படி அமைந்தாலும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி கடந்த வாரங்களில் இடம்பெற்ற சில சுவாரசியமான சம்பவங்களை இப்போது பார்ப்போம்.

கோத்தபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சார கூட்டம் கடந்த புதன்கிழமை அனுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டது. தடுப்புக் காவலில் இருக்கும் இராணு வத்தினர் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்ற வகையில் கோதபாய தெரிவித்த கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

தடுப்புக் காவலில் இருக்கும் பெரும்பாலான இராணு வத்தினர் குற்றச்சாட்டுகள் நிரூபிக் கப்பட்ட நிலைமையில் சிறைகளில் உள்ளார்கள்.

அவர்களை விடுதலை செய்வது என்பது நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தலையிடும் ஒரு செயற்பாடாக அமையும் என்ற வகையில் ஐதேக தரப்பின் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

இதையடுத்து வியாழக்கிழமை தன்னுடைய பிரச்சாரத்தை கொழும்பு, காலிமுகத் திடலில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சஜித் பிரேமதாச, நான் பதவியேற்ற பின்னர் பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நியமிக்கப் போவதாக அறிவித் திருந்தார். சரத்பொன்சேகா தனியான ஒரு கட்சியை ஆரம்பித்து இருந்தாலும் தற்போது ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயல்படுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்படு வதற்கு ரணில் விக்கிரமசிங்க முன்வந்த போதிலும் கூட அதனை அங்கீகரிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துவிட்ட நிலைமையில், சாதாரணமானவர் எம்பியா கவே அவர் இருக்கின்றார்.





சஜித் பிரேமதாச கோத்தபய ராஜபக்ஷா

இந்த நிலைமையில் தான் பதவியேற்றார் சரத் பொன்சேகா பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படுவார் என சஜித் அறிவித்திருப்பது முக்கியமானதாக கருதப்படுகின்றது. சஜித்தின் இந்த அறிவிப்புக்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகிறது முதலாவது சிங்கள கடும்போக் காளர்கள் கவர்வது அவரது நோக்கம். இரண்டாவது அரசியல் ரீதியான ஒரு இராஜதந்திர நகர்வும் இதன் பின்னணியில் இருந்துள்ளது.

ஐதேக வின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பிரதமர் ரணிலுக்கு சஜித்துக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலைமையில், ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே சரத் பொன்சேகா எடுத்திருந்தார். அதனை அவர் பகிரங்கமாகவே வெளியிட் டிருந்தார். சஜித்துடன் அவருக்கு உள்ள முரண்பாட்டை இது வெளிப்படுத்தியது. பொன்சேகாவுக்கு எந்த ஒரு அமைச்சையோ முக்கியமான பொறுப்புகளை கொடுப் பதற்கு சஜித் விரும்பவில்லை என்று சொல்லப்படு கின்றது.

சஜித் ஜனாதிபதி வேட்பாளர் என அறிவிக்கப்பட்ட பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த ஒதுங்கும் நிலைப் பாட்டிலேயே சரத்பொன்சேகா இருந்தார். சஜித்துடன் தன்னால் வேலைசெய்ய முடியாது என அவர் கருதினார். இதனை சரியான முறையில் அறிந்து கொண்டால் ராஜபக்ஷ தரப்பு, அவரை தம்முடன் இணைத்துக் கொள்வதற்கான நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. "பழையதை மறப்போம்.

புதிய ஒரு பயணத்தை ஆரம்பிப்போம்" என்ற வகையில் பொன்சேகாவுக்கு செய்தி அனுப்பப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. முக்கியமான அமைச்சுப் பதவி ஒன்றை தருவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் ராஜபக்ஷக்கள் தரப்பில் பொன்சேகாவுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்டு ராஜபக்ஷவுடன் இணைவதற்கான பேரம் பேசலில் பொன்சேகா ஈடுபடுகின்றார் என்ற தகவல் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்தது. உடனடியாகவே சஜித் பிரேமதாசவை அழைத்த ரணில் இந்த நிலைமை களை விளக்கி இருக்கின்றார்.

தொடர்ச்சி 04ம் பக்கம்.




03ம் பக்கத் தொடர்ச்சி



பாதுகாப்பு அமைச்சு பொன்சேகாவுக்கு வழங்கி அவரை உடன் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார். இதனை ஏற்றுக் கொள்வதற்கு முதலில் சஜீத் விரும்பவில்லை என கூறப்படுகின்றது. இருந்த போதிலும் பொன்சேகா விலகிச் சென்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் விளக்கிக் கூறியதை அடுத்து அதனை ஏற்றுக்கொள்ள சஜித் முன்வந்தார்.

இது தொடர்பில் பகிரங்கமாக அறிவிப்பு ஒன்று கொடுக்கப்பட வேண்டும் என பொன்சேகா தரப்பு ஐதேகவை வலியுறுத்தியதாக தெரிகின்றது. 17 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பிரச்சாரக் கூட்டத்தில் சஜித் வெளியிட்ட அறிவிப்பின் பின்னணி இதுதான். “பாதுகாப்பு அமைச்சராக பொன்சேகா நியமிக்கப்படுவார்” என்ற சஜித்தின் அந்த அறிவிப்புக்கு பலத்த வரவேற்பு கிடைத்திருக்கின்றது.

ஏப்ரல் 21ஆம் தேதி கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இடம்பெற்ற ஐஎஸ்ஐ குண்டுத் தாக்குதலை தொடர்ந்து பலமான ஒருவர் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்து அனைவரிடமும் மேலோங்கியிருந்தது. அதற்கு பொருத்தமானவராக இருவர் அடையாளம் காணப்பட்டு இருந்தார்கள். ஒருவர் கோத்தபாய ராஜபக்ஷ. மற்றவர் சரத் பொன்சேகா. கோத்தாவுக்கு எதிரான போட்டியில் இறங்கி இருக்கும் சஜித்தைப் பொறுத்த வரையில் சரத் பொன்சேகாவை முன்னிறுத்துவது அவருக்கு வாய்ப்பான ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும்.

தவிர்க்க முடியாத ஒரு கட்டமாக பொன்சேகாவை முன்னிலைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தாலும் கூட தமக்கு வாய்ப்பான ஒன்றாகவே அது அமைந்திருக்கின்றது என்பதை பின்னர்தான் சஜித் கண்டுகொண்டார். அதனால் தான் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பிரச்சாரக் கூட்டங்களில் பொன்சேகாவின் பெயரை அவர் உச்சரித்து வருகிறார்.

## “சேம் சைட் கோல்”

இதேவேளையில் கோத்தபாய ராஜபக்ஷ சில சமயங்களில் “சேம் சைட் கோல்” போட்டு விடுகின்றார். கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிப்பதற்கு தடுமாறிய கோதாபய ராஜபக்ஷ, சரத்பொன்சேகாவின் சார்ப்பாக பதிலளித்திருக்கின்றார். சரணடைந்து காணாமல் போனவர்கள் பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், “இதற்கு பதில் சொல்ல வேண்டியது நானல்ல இந்தப் போரை வழி நடத்திய இராணுவ தளபதி இதற்கு பதில் சொல்ல வேண்டும் நானும் எனது அண்ணனும் இந்த போரை நடத்தவில்லை. இராணுவத் தளபதிதான் இதனை வழிநடத்தினார்” என்ற வகையில் பதிலை கூறியிருக்கின்றார்.

பொறுப்புக்கூறும் விடயத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக இவ்வாறான பதிலை அவர் சொல்லி இருந்தாலும் கூட, இதன் மூலமாக இராணுவத்தின் போர் வெற்றிக்கு சரத் பொன்சேகா தான் காரணமானவர் என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்வளவு காலமும் போரை வெற்றிகரமாக வழிநடத்தியவராக மகிந்தவும், கோத்தாபயவுமே சிங்களவர்களால் கொண்டாடப்பட்டார்கள். அவர்கள் தமது தேர்தல் வெற்றிக்கும் அதனைத்தான் பயன்படுத்தினார்கள். இப்போது அதற்கு மாறாக, கோத்தபாயவின் இந்த ஒப்புதல் சஜித் பிரேமதாஸ தன்னுடைய பிரச்சாரத்தை முன்னெடுப்பதற்கு பெருமளவுக்குத் துணைபுரிகின்றது.

பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றிய சஜித், இதுதொடர்பாக குறிப்பிட்டதை காணக்கூடியதாக இருந்தது. “இறுதியில் போர் வெற்றியின் நாயகன் சரத் பொன்சேகா தான் என்பதை கோத்தாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டு விட்டார். உண்மைகளை நீண்டநாட்களுக்கு மறைக்க முடியாது. பொன்சேகாவை தான் நான் பதவி ஏற்றவுடன் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்க போகின்றேன்” என்ற வகையில் சஜித் பேசியபோது, மக்களின் பலத்த ஆர்ப்பரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளையில், வடக்கில் இடம்பெற்றுள்ள முக்கியமான அரசியல் நகர்வு தென்னிலங்கை அரசியலிலும் எதிரொலிக்கின்றது. யாழ் பல்கலைக்கழகத்திற்கு அன்மையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நான்கு நாட்களாக இடம்பெற்ற இந்த பேச்சுவார்த்தைகளில் தமிழரசுக் கட்சி, ஈபிஆர்எல்எ.்.ப், ரெலோ, புளொட், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தார்கள். இறுதியில் இணக்கப்பாடு ஏற்பட்டபோது ஐந்து கட்சிகளின் தலைவர்கள் அந்த ஆவணத்தில் கைச்சாத்திட்டார்கள். கஜேந்திரகுமார் மட்டும் இறுதிக் கட்டத்தில் இணக்கப்பாட்டை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என கூறியது அதிலிருந்து வெளியேறினார்.

தமிழ் தேசத்தை அங்கீகரித்து அதற்கு தனித்துவமான இறைமை உண்டு என்பதையும், தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் அங்கீகரித்து சமஷ்டி முறையின் கீழ் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது உட்பட 13 கோரிக்கைகளை வலியுறுத்துவதாக இந்த ஆவணம் அமைந்திருக்கின்றது.

5 தமிழ் கட்சிகள் இணைந்து முன்வைத்துள்ள ஆவணம் தொடர்பாகவும் தமது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் பிரதான கட்சிகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்றது. 5 தமிழ் கட்சிகளும் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் நேரடிப் பேச்சில் ஈடுபடுவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள். இந்தப் பேச்சுக்கள் சர்ச்சைக்குரியனராகவே இருக்கப்போகின்றது. தேர்தலின் முடிவுகளைத் தமிழர்கள் தீர்மானிப்பார்களா என்பதையும் இந்தப் பேச்சுக்கள்தான் முடிவு செய்யும்.


## யாழிலிருந்து சென்னைக்கு 35 நிமிடங்களில் பயணம்!!




### இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா!

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் நேற்று வியாழக்கிழமை(17) சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கான பயணிகள் விமானசேவை விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து முதற்கட்டமாக வாரத்திற்கு ஏழு விமானங்கள் பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ளன.
யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குப் பயணநேரம் 35 நிமிடங்களெனக் கணிக்கப்பட்டுள்ளது.
இதற்குத்தானே இவ்வளவு காலமும் ஆசைப்பட்டோம். இருந்ததைப் பறித்து இப்போ தருகிறார்கள். இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா!




Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Luckyfly
SUMMER
2020
HOLIDAYS
BOOK NOW!
INDIA TOUR
இந்தியாச் சுற்றுலா
Jan.2020
Ab:599€
Colombo
இந்தியாச் சுற்றுலா
குழுக்களாகவும், தனியாகவும் செல்லலாம்.
சிறப்பான வாகனவசதிகள்
தங்குமிட வசதிகள் **** HOTELS *****HOTELS
விசாக்கள் அனைத்தும் சிறப்பாகச் செய்து தரப்படும்.
நீங்கள் விரும்பும் இடங்களை
நீங்களே தெரிவுசெய்து
எமது சிறந்த சேவையில்
மகிழுங்கள்
தாஜ்மஹால் சுற்றுலா
Offnungszeiten
Mo-Fr.10.00-19.30
Sa.10.00-15.00
Mo-Sa Mobile: 24.00
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
Mob:No: 0179 1484 892
சீரடிப் பயணம் சிறப்பாக
அமைத்துத் தருகின்றோம்
தமிழ்நாடு திருத்தலச் சுற்றுலா
கேரளா சுற்றுலா
நோய்தீர்க்கும் ஆயுள்வேதம்
Graphic Design Vettimaniy Ltd
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171


எமக்கு என்றும் ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்!
TKS
BEST FOODS
எமது 5வது வருட சிறப்பு மலிவு விற்பனையில் குலுக்கல் மூலம் பரிசில்களைப் பெற்றுக்கொண்டோர் விபரம்
1ம் பரிசு
2ம் பரிசு
3ம் பரிசு
4ம் பரிசு
5ம் பரிசு
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137, Dortmund Germany

# நடுவில பல பக்கங்களை காணோம்





**கனகசபை அகிலன்**

அம்மையையும் அப்பனையும் ஆறுதலாகச் சுற்றி வந்து அந்த அரிய ஞானப்பழத்தை விநாயகர் தனதாக்கிக் கொண்டதும், மயில்மேல் அவசரமாக உலகெல்லாம் வலம்வந்தும் அப் "பழம்" கிடைக்காததால் கோபமடைந்து, எம்பெருமான் முருகன் கோவணத்துடன் பழநியாண்டவரானதும் அனைவருக்கும் தெரிந்த "பழக் கதை", பழங்கதையும் கூட !

இதற்கும் நான் எழுத வந்த விடயத்திற்கும் என்ன சம்பந்தம் என நீங்கள் நினைக்கலாம்? மேல் கூறிய கதையில் ஒருவரின் பயணம் அவ்வளவு சுவாரஸ்யமானதாக இருந்ததாகத் தெரியவில்லை ஆனால் முடிவு அவருக்கு நிறைவைத் தருவதாக இருக்கின்றது. மற்றவரது பயணம், உலக்கைச் சுற்றி வந்ததால் சுவாரசியமாக இருந்திருந்தாலும், அவர் முடிவில் கிடைத்த ஏமாற்றத்தில் முற்றாக மூழ்கி, தன் பயணத்தின் போது நடந்த களிப்பான நிகழ்வுகளையும் இரசிக்கத் தவறிவிட்டார். எங்களில் அநேகமானோரின் வாழ்க்கையை இந்த இரண்டு வகைக்குள்ளும் அடக்கி விடலாம், பயணத்தையும்முடிவையும் இரசிக்கும் இன்னொரு வகையினருள் நீங்கள் அடங்குவீர்களெனில் சிறப்பு!

இன்று, நல்ல முடிவினால் மட்டும் திருப்தி அடைபவர்களே அதிகம், உதாரணத்திற்கு, முக்கியமான கால்பந்தாட்டப் போட்டிகளை எடுத்துகொள்வோம், இப் போட்டிகளின் முக்கிய நோக்கமே ஒன்றரை மணித்தியாலத்திற்கு இரசிகர்களை சந்தோசமாக வைத்திருப்பது, ஆனால் முப்பது வினாடிகளிலேயே தாம் ஆதரவளிக்கும் அணி கோல் அடித்துவிட்டால் "இந்தப் போட்டி இப்போதே, என் அணி வெற்றிநிலையில் இருக்கும்போதே, முடியக்கூடாதா" என்று எண்ணுபவர்கள், ஏங்குபவர்கள் பலர்! நல்ல முடிவிற்காக நல்ல பயணத்தை இரசிக்காமல் விட்டுக்கொடுக்க அவர்கள் தயார்.

பக்கத்து வீட்டுப் பையன் பத்து மாதத்திலேயே நடக்கத் தொடங்கி விட்டான் எனது பிள்ளை பதினைந்து மாதம் வந்தும் இன்னும் பல்லுக் கொழுக்கட்டை சாப்பிடவில்லையே என்று படபடக்கும் பெற்றோர் எத்தனை பேர் ? பல வருடங்கள் எம் உடலைத் தாங்கி நடக்கப்போகும் கால்கள் சற்று ஓய்வெடுக்கட்டுமே...பற்களும் தான்! பிள்ளை கருவில் இருக்கும் போதே ரியூசன் வகுப்பிற்கு அனுமதி எடுத்து வைத்தவர்கள் எத்தனை பேர்? வாழ்வின் ஒவ்வொரு நிலைகளிலும், முடிவை எனது பிள்ளை மற்றோரை விட முந்தி அடைந்து விட வேண்டும் என்ற ஆதங்கம் பிள்ளை கருவில் உள்ள போதே பலருக்கு உருப்பெற்று விடுகின்றது. அருவரியில் ஆரம்பிக்கும் ஓட்டம், தொழில், திருமணம் என்று இடைவெளியின்றி இப்படித் தொடர்கின்றது, பலர் வாழ்க்கையை கடமையாகத்தான் வாழ்கின்றார்கள். அப்பாடா எப்படியோ பிள்ளைக்கு திருமணம் செய்துவிட்டோம் கடமை முடிந்ததென பெற்றோர் பெருமூச்சு விட்டு முடியும் முன் பேரப்பிள்ளைகள் வந்து அவர்கள் மடிகளில் விழுகின்றன...ஓய்வு ?

பல அழுத்தங்களால், அவசர அவசரமாக எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு, பலர் இப்போது சமூக வலயத்தளங்களில் தான் எம் கடந்த காலங்களை பகிர்ந்து கொன்றிருக்கின்றோம், பின் பக்கமாக பிரயாணம் செய்கின்றோம், வெற்றுப் பக்கங்களை நிரப்ப எத்தனிக்கின்றோம். ஐந்தில் எழுதிய "அ" வை ஏழில் எழுதினால் என்ன குடியா மூழ்கி விடப்போகின்றது? டபுள் புரொமோசன் எடுத்து, உற்ற நண்பர்களையெல்லாம் விட்டுவிட்டு, வகுப்புத் தாவியவர்கள் எல்லாம் இப்போது எவ்வளவு தூரம்...? கொஞ்சம் ஆறுதலாகத்தான் எல்லாவற்றையும் செய்திருக்கலாமே, வாழ்க்கையின் ஒவ்வொரு படியையும் இன்னும் கொஞ்சம் அதிகமாக தடவிச் சென்றிருக்கலாமே ...?

யாழ் இந்துக் கல்லூரியில் என்னுடன் படித்த நண்பனொருவன், சில வருடங்களுக்கு முன் பாடசாலைக்குச் சென்று, தான் படித்த வகுப்பறையில், நாற்காலியில் இருந்து பலத்தையும் இரைமீட்டு, களிப்படைந்து ஒரு புகைப்படத்தை முகநூலில் பதிவு செய்திருந்தான். அந்த நண்பன், தான் அன்று பள்ளிக்காலங்களில் நிரப்பாத சில பக்கங்களை நிரப்பச் சென்றிருக்கலாம். படிக்கும் காலத்தில் வகுப்புகளுக்கு நாம் அவ்வளவு விருப்பத்துடன் செல்வதில்லை, எப்போதும் அங்கும் இங்குமாக எங்கயோ ஓடிக் கொண்டிருப்போம், ஒரு இடத்தில நிற்பது குறைவு - மனதில் பல விடயங்கள், அழுத்தங்கள் - மதில்களில் மாத்திரந்தான் எமக்கு நிரந்தர அமைதி!

ஒருவன் ஒரு பந்தை கையில் வைத்திருந்தால் அதை கெட்டியாக விழாமல் வைத்திருப்பான், இரண்டு பந்துகள் வந்தால் இரு கரங்களையும் உபயோகிக்கலாம், நூறு பந்துகள் வந்தால் என்ன செய்வது ? மிகுதி தொண்ணூற்றெட்டு பந்துகளையும் நிலத்தில் தான் வீழ்த்தியாக வேண்டும். எம்மில் பலர் எந்தப் பந்தையும் விழவிட விருப்பமின்றி அலைந்து திரிகின்றோம் - இறுதியில் முக்கியமான இரு பந்துகளையும் சேர்த்து விழுத்தி விடுகின்றோம். எனவே உங்களுக்கு மிக முக்கியமான அந்த இரு பந்துகளையும் ஆரம்பத்திலேயே தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள், மிகுதியை நீங்களாகவே விழுத்திவிடுங்கள், உங்கள் மனமும் இலகுவாக இருக்கும் வாழ்க்கைப் பயணமும் திருப்தியாக அமையும்.

ஒரே நேரத்தில் ஆலாய்ப் பறந்து பல இடங்களில் நிற்க வேண்டுமென பலர் எப்போதும் ஓடிக்கொண்டே இருப்பார்கள், இன்னும் சிலர் இவர்களைப் பார்த்து, புகழ்ச்சியடையத் தாமும் ஓடுவர். பல இடங்களில் ஒரே நேரத்தில் தரிசனம் தருபவர் கடவுள் ஒருவரே, நீ கடவுள் அல்ல, அவரின் ஒரு சாதாரண படைப்பு, நீ சாதாரண வாழ்க்கை வாழ்வதில் தப்பேதும் இல்லை, நீ இறக்கும்போது உன்னை எவரும் அறிந்திராவிட்டாலும் தப்பில்லை ஆனால்...முடிவில் நீ உன்னைக் கட்டாயம் முழுமையாக அறிந்திருக்க வேண்டும், உன் வாழ்க்கைப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் ஆறுதலாக திருப்பிப் பார்த்துச்சென்றிருக்க வேண்டும், சரியாக அப்பக்கங்களை நிரப்பியிருக்க வேண்டும், அப்படிச் செய்தாயெனில் அதனால் நீ அடையும் திருப்திக்கு ஈடேதுமிருக்காது!

முடிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமூகமாகவே இன்றைய சமூகம் இருக்கின்றது, எமது மூதாதையர்கள் இப்படி வாழவில்லை, ஆடிப்பாடி வேலை செய்தார்கள் , அலுப்பின்றி வாழ்ந்தார்கள், பயணத்தையும் முடிவையும் வெகுவாக இரசித்தார்கள். அந்த மன நிலைக்கு இனிவரும் இளம் சமுதாயத்தையும் நாம் திரும்பக் கொண்டு செல்ல வேண்டும். வாழ்க்கைப் பயணத்தின் சுவாரஸ்யத்தையும், முக்கியதையும் எம் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறவேண்டும், முடிவே முழுதுமென்று கூறி அவர்களை வழிநடத்தக்கூடாது ! நாமும் அரக்கப்பறக்க அந்தரத்தில் ஓடி எம்மை பின் தொடர்பவர்களையும் எம் வழியில் ஓட வைக்கக்கூடாது !




# சைவநெறி தவறாது வாழ்ந்து காட்டிய கா.சிவபாலனின் பூதவுடல் யாழ்.மட்டுவிலில் அக்கினியுடன் சங்கமம்: பெருமளவானோர் பங்கேற்பு



அமரர் காசிநாதர் சிவபாலன்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 2017 ம் ஆண்டு வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களுடன் கா.சிவபாலன்

பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் மிக நீண்டகாலம் ஆன்மீகப் பணியாற்றியவரும், சைவநெறி தவறாது வாழ்ந்து காட்டிய பெருந்தகையுமான நைஷ்டிகப் பிரமச்சாரி சிவத்திரு-காசிநாதர் சிவபாலனின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை (18.10.2019 )பிற்பகல் யாழ். மட்டுவிலில் அக்கினியுடன் சங்கமமானது.

யாழ்.அச்சுவேலி இடைக்காட்டிலுள்ள அவரது மருமகனின் இல்லத்தில் இன்று காலை-09 மணியளவில் அன்னாரது இறுதிக் கிரியைகள் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகத்தினர், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர், விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள், ஆன்மீகவாதிகள், வைத்தியர்கள், தாதியர்கள், பல்துறைசார்ந்தவர்கள், அன்னாரது சகோதரர்கள் உள்ளிட்ட உறவினர்கள், அவரது சொந்த மண்ணான மட்டுவில் கிராம மக்கள், இடைக்காடு கிராம மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டு மலர்மாலைகள் அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறையின் மூத்த விரிவுரையாளர் திருமதி-நாச்சியார் செல்வநாயகம், வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விஜயசுந்தரம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் எஸ்.விக்னராஜா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான கேசவன் சயந்தன் ஆகியோர் அஞ்சலி உரைகளாற்றினர்.
அஞ்சலி உரையாற்றிய அனைவரும் சிவத்திரு கா.சிவபாலனின் தெய்வீக ஆன்மீகப் பணிகளையும், அவரது தனித்துவமான குணவியல்புகளையும் மெச்சிப் பேசினர்.

அதனைத் தொடர்ந்து இன்று பிற்பகல்-01.30 மணியளவில் சிவத்திரு சிவபாலனின் இறுதியாத்திரை யாழ். அச்சுவேலி இடைக்காட்டிலிருந்து அவரது பூர்வீக மண்ணான தென்மராட்சி மட்டுவிலை நோக்கி ஆரம்பமானது.

இறுதியாத்திரையின் முன்னே அவரது பூதவுடலைத் தாங்கிய ஊர்தியின் முன்பாக திருவாசகம் மற்றும் திருமுறைகள் ஒலிக்கவிடப்பட்டன. பிற்பகல்-02.30 மணியளவில் அவரது பூதவுடல் அவரது பூர்வீக மண்ணான மட்டுவிலைச் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள இந்துமயானத்தில் அன்னாரது தகனக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றது. இதன்போது சுவிஸிலிருந்து வருகை தந்த அன்னாரின் பூதவுடலுக்கு அவரது மருமகனான ச.ஸ்ரீரமணன் கொள்ளி வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் உள்ளிட்டவர்களும் அன்னாரது பூதவுடலுக்கு கண்ணீருடன் இறுதி அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து அவரது பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானது.
கடந்த- 26.03.1952 இல் யாழ்.மட்டுவிலில் சிவத்திரு காசிநாதர் ஆசிரியர் தம்பதிகளின் புத்திரனாகப் பிறந்த சிவபாலன் கடந்த-40 ஆண்டுகளாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் சிறப்புற ஆன்மீகப் பணியாற்றினார். கடந்த ஆறு ஆண்டுகளாக தேவஸ்தான வளாகத்தில் அமைந்துள்ள சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆராய்ச்சி நூல்நிலையத்தின் பொறுப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

- செ. ரவிசாந்

## வெற்றிமணியின் இதய அஞ்சலி

ஆலயத்திற்கு வரும் அன்பர்களின் பேரன்பையும் மதிப்பையும் பெற்றவர். பார்த்தமாத்திரத்தே அவர்களை யார் என அடையாளம் கண்டு, அவர் அவர்களுக்கு தேவையானவற்றை உடன் செய்து மகிழ்பவர். ஆலயத்தில் அகமும் புறமும் ஆண்டவனைக்கண்டு மகிழ்ந்த சேவையாளன்.

சிவ சின்னத்துடன் சிரித்த முகத்துடன் வரவேற்கும் சிவபாலன் மறைந்துவிட்டார் அவர் அன்புக்கினியவர் உள்ளத்தில் என்றும் இருப்பார்.
அன்பு நண்பனின் மறைவிற்கு வெற்றிமணி தனது அஞ்சலியைச் செலுத்துகின்றது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக






பாடசாலைக்கு முன்னால் நின்று பார்க்கும்போது கந்தசுவாமி கோவிலின் முன்புற தரிசனம் தோன்றும். பாடசாலைக்கும் கோவிலுக்கும் இடையே 50 மீட்டர்கள் தூரம் இருக்கும். நேரிய பாதை. கோபுரத்தின் ஒரு பகுதியையும், எட்டுக்கால் மண்டபத்தின் ஒரு கரையையும் பாடசாலைக்கு முன்னால் நின்றபடியே பார்க்கக்கூடியதாக இருக்கும். தினமும் அந்த தரிசனத்துடன் தான் எல்லா மாணவர்களும் பள்ளிக்குச் செல்வார்கள்.

கோபாலன் கோவிலுக்கு ஒரு கும்புடு போட்டுவிட்டு பாடசாலைக்குள் செல்கின்றான். நான்காம் வகுப்புப் படிக்கின்றான். நெற்றியிலே திருநீற்றுக் கீற்று, மத்தியிலே சந்தணப்போட்டு. பாடசாலைக்கென்று சீருடை எதுவும் இல்லை. மேலே கோடு போட்ட சட்டையும், அரைக்களிசானுமாக அவனின் கோலம். காலில் செருப்பு இல்லை.

பாடசாலை நேரங்களில் கோவில் மணி, பாடசாலை மணியின் ஓசையிலிருந்து வேறுபட்டுக் கிணுகிணுக்கும். விழாக்காலங்களில் பூசை நேரங்களில் ஏற்படும் ஆரவாரம், சங்கொலி, மணி ஓசை காதுக்கு இதமானவை.
“அடேய் கோபாலா… கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மதிய வேளையில் பூசை முடிய அன்னதானம் கொடுக்கின்றார்கள்” நாகநாதன் அவன் காதிற்குள் முணுமுணுத்தான்.

“அதற்கென்ன? நான்தானே தினமும் சாப்பாடு கொண்டு வருகின்றேனே!” என்றான் கோபாலன்.
“கோபாலா… நீ கொண்டுவருவது சாப்பாடு. இது அன்னதானம். கோயில் அன்னதானம். படு சுப்பராக இருக்கும். நாங்கள் இரண்டு வெள்ளிக்கிழமைகள் சாப்பிட்டுவிட்டோம். இன்றும் போகின்றோம். விரும்பினால் வா” நாகநாதனுடன் ஒட்டியபடி நின்ற சூரியகுமார் புளுகித் தள்ளினான்.

மதியம் வரும்வரை கோபாலன் மனதில் ஒரு போராட்டம் நடந்தது. படிப்பில் கவனம் செலுத்தவில்லை. இடையிடையே நேரம் கிடைக்கும் போதெல்லாம் சூரியகுமாரும் நாகநாதனும் கைகளால் ஜாடை செய்து நாவை ஊறச் செய்தார்கள்..
வீட்டுச் சாப்பாட்டை எவ்வளவு நாட்கள் தான் சாப்பிடுவது?

மதியம் நாற்பத்தைந்து நிமிடங்கள் சாப்பாட்டிற்காக விடுவார்கள். பாடசாலைக்கு அருகே இருப்பவர்கள் வீட்டிற்குச் சென்று உணவருந்தி இளைப்பாறி வருவார்கள். கோபாலன் தன் நண்பர்கள் புடைசூழ கோவிலுக்குச் சென்றான். பாடசாலையில் அவன் ஒரு குட்டி இளவரசன். படிப்பில் முதன் மாணவன். எல்லாருக்கும் முன்னோடி. கோபுரதரிசனம் முடித்து கோயிலிற்குள் நுழைந்தான் கோபாலன். கோவிலில் மதியப்பூசை நடந்துகொண்டிருந்தது. மெய்மறந்து புலன்களை ஒருங்கு சேர்த்தான். பூசை முடிந்து பிரசாதம் வழங்கியதும், அடியார்கள் கிழக்குப்புற அறைக்கு முன்பதாக வரிசை கட்டி, பின்னர் சம்மாணமிட்டு அமர்ந்தார்கள். கோபாலன் உட்பட ஐவர், ஏற்கனவே உட்கார்ந்தவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்தார்கள். வாழை இலைகள் பரிமாறப்பட்டன. வாழை இலையில் ஆவி பறக்கும் சுடுசோற்றை ஒருவர் பரிமாற, பின்னாலே இருவர் கறிகளைப் பரிமாறினார்கள். மரவள்ளிக்கிழங்கு, கீரை, தக்காளிக்குழம்பு, பருப்பு, பப்படம், மிளகாய்ப்பொரியல், தயிர் என பலவகைக்கறிகள். உருக்கிய நெய் எடுத்து ஒருவர் பருப்பினுள் விட்டுச் சென்றார். வாசம் மூக்கை ஒரு தூக்குத் தூக்கியது. மணக்க மணக்க சாப்பாடு சுவையாக இருந்தது. சாப்பிட்டு முடிய வாழை இலையைப் பார்த்தான் கோபாலன். சுடுசோற்றின் அடையாயளம் மெல்லியமண்ணிறமாக இலையில் வட்டமிட்டிருந்தது. கையை எவ்வளவுதான் கழுவிய போதும் நெய்யின் வாசனையை மறைக்க முடியவில்லை.

பள்ளி போய்ச் சேரும்போது ஐந்து நிமிடங்கள் பிந்திவிட்டன. செல்லம்மா ரீச்சரின் வகுப்பு ஆரம்பித்துவிட்டது. ஊரில் கோபாலனின் வீட்டிற்கு பத்துவீடுகள் தள்ளி செல்லம்மா ரீச்சர் இருக்கின்றார். அவர் இவர்கள் ஐவரையும் வரிசையில் நிற்க வைத்து கேள்வி மேல் கேள்வி கேட்டார்.

“நாங்கள் கோவிலுக்குப் போய் வருகின்றோம்” நாகநாதன் விறைப்பாகச் சொன்னான்.
“பூசை பாத்தீர்களா?” “ஓம் ரீச்சர்” கோரஷாக எல்லாரும் சொன்னார்கள்.

நாகநாதனிற்குக் கிட்டப் போனவர், ”எங்கே உன் நெற்றியில் திருநீறு சந்தனத்தைக் காணவில்லையே” சொல்லியபடியே அவன் காதை முறுக்கினார். பின்னர் எல்லோரையும் ஒரு முறைப்புப் பார்வை பார்த்துவிட்டு அவர்களின் கைகளைத் தூக்கி முகர்ந்து பார்த்தார்.

“உம்… போய் இருங்கோ” “கோவில் விஷயமாச்சு. ரீச்சர் பயந்திட்டா. இல்லாவிட்டால் எல்லாருக்கும் பூசை விழுந்திருக்கும்” சூரியகுமார் கோபாலனின் காதிற்குள் முணுமுணுத்தான்.

பாடசாலை முடிந்து, மாணவர்களுடன் அங்கும் இங்கும் விளையாடி கோபாலன் வீடு போய்ச் சேர்ந்தான். இடையில் செல்லம்மா ரீச்சரை எதிர்கொண்டான். பவ்வியமாக தலையைக் கவிழ்த்து மரியாதை செலுத்தியபடி அவரைக் கடந்து போனான்.
“இன்று ரீச்சர் ஏன் இந்த வழியால் வருகின்றார்? அவரின் வீட்டிற்குப் போகும் பாதை இதுவல்லவே!” மனதிற்குள் கேள்வி எழுந்தது.

வாசலில் அம்மா காத்து நின்றார். “கோயிலில் போய் சாப்பிட்டாயா?”

ஆம், இல்லை என்று கோபாலன் பதில் சொல்லும் முன்னர், பின்னாலே மறைந்திருந்த அப்பா துவரம் கம்பினால் விளாசத் தொடங்கினார்.
“இனிமேல் போவியா? இனிமேல் போவியா?” கேட்டுக் கேட்டுத் துரத்தியபடி கோபாலனின் காலுக்குக் கீழ் பூசை விழுந்தது. வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடினான் கோபாலன். மூன்றாவது ரவுண்டில் அப்பாவை ஏமாற்றிவிட்டு அருகே இருந்த பனை வடலிக்குள் ஓடி ஒளிந்து கொண்டான் கோபாலன்.

“ஏன் கோவிலுக்குப் போய் சாப்பிடக் கூடாதா?” கோபாலனின் மனதினுள் ஆயிரம் கேள்விகள்.
“ரீச்சர் பயந்திட்டா. இல்லாவிட்டால் எல்லாருக்கும் பூசை விழுந்திருக்கும்” என்றானே சூரியகுமார்.
அப்பா அம்மாவை ஏன் சாமிக்குப் பயப்பிடவில்லை வடலிக்குள் இருந்தபடி யோசித்தான் கோபாலன். காலில் வலி எடுத்தபோது குனிந்து பார்த்தான். சுடுசோற்றின் அடையாளம் வாழைஇலையில் வட்டமிட்டிருந்தது போல, அப்பாவின் பூசை அடையாளங்கள் அவனது காலில் கோலமிட்டிருந்தன.
“பெரியவர்களுக்கு ஏன் சில விடயங்கள் புரிவதில்லை” அவன் மனதில் பூதாகாரமாக ஒரு கேள்வி எழுந்தது.



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

# லண்டனில் " ஊடகத்திரு எஸ்தி 50+ " நூல் வெளியீடு



இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளரில் ஒருவரும், ஊடகப்பரப்பில் ஐம்பது ஆண்டுகளைத் தாண்டியும் தொடர்ந்து பணியாற்றிவருபவரும், கனடா தமிழர் தகவல் முதன்மை ஆசிரியருமான திரு எஸ்.திருச்செல்வம் அவர்களின் ஐம்பது ஆண்டு ஊடக வாழ்வைச் சித்தரிக்கும் கட்டுரைகளைத் தாங்கிய 'ஊடகத்திரு எஸ்தி 50+" நூல் வெளியீட்டு விழா கடந்த மாதம் 13ஆம் திகதி லண்டனில் ஹரோ நகர மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

மருத்துவப் பேராசிரியர் சேர். சபாரட்ணம் அருள்குமரன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாக இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். திருமதி ரூபி குமார் விழா நெறியாளராக பணியாற்றினார். திருவாளர்கள் வி. இராமநாதன், கே. பாலேந்திரா, நிராஜ் டேவிட், ஈ.கே.ராஜகோபால், பிறேம் சிவகுரு, ஆர்.ஆர்.ராஜ்குமார், திருமதி நவஜோதி யோகரட்ணம் ஆகியோரின் உரைகளை அடுத்து இளையதம்பி தயானந்தாவும், கோபி இரத்தினமும் நூலின் உள்ளடக்கங்கள் பற்றி விமர்சன உரை வழங்கினர். போர்க்காலத்து தாயக ஊடகவியலாளர்கள் சந்தித்த அவலங்களை உரையாற்றிய பலரும் எடுத்துக் கூறினர். திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் தமது நிறைவுரையில் இலங்கை இந்திய இராணுவங்களால் தாயக ஊடகவியலாளர்கள் அக்காலத்தில் எதிர்கொண்ட சவால்களை விரிவாக எடுத்துக் கூறினார். பிரதம விருந்தினருடன் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், சுரேஷ் கிருஷ்ணா - சசிகலா தம்பதிகள் மற்றும் திரு. கருணைலிங்கம் ஆகியோர் முதற்பிரதிகளைப் பெற்றனர். ஊடகவியலாளர்கள், படைப்பாளிகள், சமூகவியலாளர்கள் என பல்துறையினரும் கலந்து மண்டபம் நிரம்பிய விழாவாக இந்நிகழ்வு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.





## அராலி அம்மன்கோவில்

தாயகத்தில் அராலி அம்மன்கோவில் மாகா கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக 01.09.2019 நடைபெற்றது. வாயில் கோபுரம் சிற்ப அலங்காரத்துடன் கம்பிரமாக காட்சியளிப்பதைப் படத்தில் காணலாம்.

ஆயிரக்கணக்கான அடியவர்கள் கலந்துகொண்டு அன்னையின் அருள்வேண்டி வழிபட்டனர்.



15.09.2019 வெற்றிமணி வெள்ளிவிழா அரங்கில் ஆடற்கலாலய மாணவர்கள் தந்த அற்புத நடனம் ஒன்று





# முதுமையில் நொய்மை
## [பலவீனம், இயலாமை]

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

" பொறு பொறு. நான் எழும்பிறன். நீ பிடியாதை. என்னை சும்மா விடு" என்னுடனான மருத்துவ ஆலோசனையை முடித்துக் கொண்டு வெளியே செல்வதற்காக கதிரையில் இருந்து எழ முற்பட்ட போது அவரது பேரன் உதவ முன் வந்தார்.

அப்போதுதான் அவர் அவ்வாறு சொன்னார்.

அவரது வயது 85 தான். இந்த வயதிலும் அவரால் மற்றவர் உதவியின்றி கதிரையிலிருந்து எழுந்திருக்கவும் நடக்கவும் முடிகிறது. மாறாக அதே நாளில் என்னிடம் வந்திருந்த மற்றொரு பெண்மணியை அவளது மகன் கைபிடித்து அணைத்து நடத்திக் கொண்டு வந்திருந்தார். உட்காருவதற்கும் எழுந்திருப்பதற்கும் அவளால் முடியவில்லை. முழுக்க முழுக்க மகனிலேயே தங்கியிருக்க நேர்ந்தது. இத்தனைக்கும் அவளது வயது 62 மட்டுமே.

முதுமையில் இயலாமை ஏற்படுவது நாம் எதிர்பார்க்க வேண்டிய ஒன்றுதான். அதே நேரம் முதுமை என்பதை வருடங்களால் மட்டும் கணிக்க முடியாது. அதனால்தான் 85 வயதில் அவரால் சுயமாக இயங்கவும், 62 வயதில் அவள் மற்றவர்களில் தங்கியிருக்கவும் நேர்கிறது. இருந்த போதும் இதில் ஆண் பெண் என்ற வேறுபாடு கிடையாது.

85 வயதில் பெண் திடகாத்திரமாகவும் 62 வயதில் ஆண் சோர்ந்து கிடக்கவும் நேரலாம். அதே நேரம் வயது காரணமில்லை என்பதையும் முற்கூறிய உதாரணத்திலிருந்து புரிந்து கொள்ள முடியும் வயது என்பது வாழ்கின்ற காலத்தை வருடங்களில் கணிக்கிற ஒரு முறை மட்டுமே. ஆனால் முதுமையும் நொய்மையும் வயதினால் மட்டும் ஏற்படுகின்றவை அல்ல. முதுமையில் ஏற்படும் அத்தகைய தளர்ச்சியை, ஒரு நோய்க் குறியாக இப்பொழுது மருத்துவத்தில் அடையாளம் காண்கிறார்கள். முதுமையில் ஏற்படும் இத்தளர்ச்சியை பலவீனம், இயலாமை, நொய்மை என பல்வேறு பதங்களால் அழைக்க முடியும் ஆங்கிலத்தில் Frailty என்கிறார்கள்.

ஒருவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர் நொய்மை அடைந்துள்ளார் என்பதைஎவராலும் சொல்ல முடியும். ஒருவர் எவ்வாறு நடந்து வருகிறார். திடமாக நடக்கிறாரா. மெதுவாக அடியெடுத்து வருகிறாரா, தள்ளாட்டம் இருக்கறதா. மிக மெதுவாகநடக்கிறாரா, கதிரையில் எவ்வாறு இருக்கிறார், இருக்கவும் எழுந்திருக்கவும்சிரமம்படுகிறாரா. பேச்சு எவ்வாறு இருக்கிறது போன்ற பலவற்றை வைத்து எம்மைஅறியாமலே ஒருவரது நிலமையை கணித்துக் கொள்கிறோம்.

ஆயினும் மருத்துவத்தில் அவ்வாறு எழுந்தமாட்டில் சொல்ல முடியாது. சில சுட்டிகளைவைத்தே கணித்தறிந்து தெளிவாகச் சொல்ல முடியும்.
கைகளால் ஒன்றைப் பற்றும் போது உள்ள உறுதித்தன்மை தளர்தல், எல்லா விதச்செயற்பாடுகளிலும் ஆற்றல் குறைதல், நடையின் வேகம் குறைந்து போதல், உடற்செயற்பாடுகள் குறைந்து போதல், காரணமின்றி எடை குறைதல் ஆகியவற்றைநொய்மைக்கான சுட்டிகளாகக் குறிப்பிடலாம். நொய்மையால் பாதிக்கபட்டவர்களது கைகால் அசைவியக்கம் விரைவான தாக இருக்காது. மிக மெதுவாகவே கை கால்களைஅசைக்கவும் செயற்படுத்தவும் முடியும். அனிச்சையான செயற்பாடுகள் மிகவும் மந்தகதியிலேயே இயங்கும்.உதாரணமாக ஒரு சிறு கல் தடக்கினால் கூட அவரால் தன்னைச் சமநிலைப்படுத்தமுடியாது போகலாம். ஏதிர்பாராமல் விழுந்து தலையையோ இடுப்பு எலும்பையோஉடைத்து விடக் கூடும். முழங்கால் வலி அல்லது கணுக்கால் வலி போன்ற மூட்டுநோய்கள் இல்லாமலே இந்த நிலை ஏற்படுகிறது. இவ்வாறு உடல் உறுதி குறைவதுமட்டுமின்றி அவர்களால் துன்பத்தை பொறுக்க முடியாத மனநிலையும் ஏற்படுகிறது.

இவை காரணமாக அவர்களால் தன்னிச்சையாக இயங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை விரைவில் ஏற்படுகிறது. இதன்காரணமாக குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் சுமையாக மாறிவிடுகிறார்கள். மிகவும்கவலைக்குரிய விடயம் என்னவெனில் அவர்களது ஆயுட் காலத்தையும் நொய்மைகுறைவடையச் செய்வதாகும்.

மரபியல் காரணங்கள், உடல் உழைப்பற்ற ஆரோக்கியமற்ற வாழ்க்கை நடைமுறைகள்,நீரிழிவு மூட்டுவாதம் போன்ற வேறு நோய்களின் தாக்கம் இருப்பது, சூழல் போன்றவைஇவ்வாறு தளர்ச்சி அடைவதற்குக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

எங்கள் உடலில் நோய்களுக்கு எதிராகப் போராடும்அமைப்பு (Immune system) இருக்கிறது. எந்நேரமும்செயற்பட்டுக் கொண்டே இருந்து எமது உடலில்கிருமிகள் தொற்றுவதைத் தடுக்க முயல்கிறது.

அவ்வாறு செயற்படும் போது இருதயம், தசைகள்,எலும்பு போன்ற பல்வேறு உடற்தொகுதிகளிலும்அழற்சியும் வீக்கமும் ஏற்பட்டு அவை நாளடைவில் நொய்ம்மையாக மாறக் கூடும்.மற்றொரு காரணம் வயசாகும் போது எமது தசைத்தொகுதியானது நலிவடைவதாகும். 18 வயதில் இருந்ததுபோல வயசாகும் போது தோள் மூட்டு,புஜங்கள், தொடை போன்றவற்றில் உள்ள தசைகள் உறுதியாக இருப்பதில்லை. நலிவடைந்து அளவில்குறைந்து தொய்ந்து விடுகின்றன. இதனால்தான் பலமுதியவர்கள் மிகவும் மெலி வடைந்த தோற்றத்தைக்கொண்டு இருக்கிறார்கள். தசைகளின் அளவு குறைவடைவதால் அங்கங்களின் செயற்பாடுகள்தளர்ந்துவிடுகின்றன.

மற்றொரு முக்கிய காரணம் முதுமையடையும்போதுபாலியல் ஹோர்மோன் களின் அளவு உடலில் குறைந்துபோவதாகும். பெண்களில் ஈஸ்ரோஜனின் அளவும் ஆண்களில் டெஸ்டஸ்ரோனின் அளவும் வயதாகும்போதும் போது திடீரெனக் குறைகின்றன. இதுவும் உடல் நலிவடைவதற்கு மற்றொரு காரணமாகும்.
நொய்மைக்கு மருத்துவ ரீதியாக செய்யக் கூடியவைஎவை.?

நொய்மை ஏற்படுவதை ஆரம்ப நிலையிலேயேகண்டறிந்தால் அதற்கான அடிப்படைக் காரணங்களைஅறிந்து அது மோசமடையாமல் தடுக்கலாம். உதாரணமாக தசைத் தொகுதியானது நலிவடையத் தொடங்கியிருந்தால் அதைத் தடுப்பதற்கான சுலபமான சிலபயிற்சிகளை செய்வது நன்மை பயக்கும். தசைகளைநீட்டி மடக்கும் சிறிய சிறிய பயிற்சிகளைச் செய்வதன் மூலம் தசைகளை வலுப்படுத்தலாம்.

தொடர்ச்சி 12 பக்கம்




RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Wolbecker 27
48155 Münster
Tel:0251 13 65 194

Helmholtz Str 11 | 46045 | Oberhausen
Telefon : 0208 20 28 29

Johannes Str 35 | 53225 | Bonn Beuel
Telefon : 0228 4037 7846
Fr. und Sa. 11.00 bis 19.00 Uhr

## "மாவீரர் நீங்கள், மறந்தோமா நாங்கள் "

நிறஞ்சினி செல்வராஜன்



மாவீரர் நாள்...தம் நாட்டிற்காய் உயிர்த்தியாகம் செய்த வீரர்க்கான நினைவுநாள்.இவ்வாறு கார்த்திகை 27 இன் மதிப்பை நமக்கெல்லாம் தெரிந்ததுவே.
இல்லை! நமக்கும் எம் சமுதாயத்திற்கும் இது மனதிலில்லை. தேசிய வியாதி எனப்படும் மறதியால் விலக்கப்பட்டது.

சமூகத்தால் விலக்கப்பட்டு, ஏனைய உதவியின்றி, நிலையான வாழ்வாதாரமின்றி அடிப்படைத் தேவைக்காய் தள்ளாடும் நம் தியாகிகள். மேடையில் உருக்கமாக பேசியவரோ முன்னர் தமது எல்லையில்லா ஆதரவை கொடுத்தவரோ, பலா் திரும்பிப் பார்க்கவில்லை.

ஒரு சிறு கதை சொல்கிறேன் கேளுங்கள்: போரின் உச்சக்கட்டத்தில் மருத்துவ துறையின் மூலம், மேதகு பிரபாகரனின் அணியில் சேர்ந்து கடைசிவரை பாரிட்டார் ஒரு வீரப்பெண்மணி. அவ்வாறு ஒருநாள் கண்ணி வெடியின் தாக்கத்தால், அவரது கால்லொன்று சிறிதாகி, எலும்புகளும் உள்ளே சிதறி இருக்கின்றன.

அவரது கணவர் போராளியாய் போரிட்டு, போரின் தாக்கத்தால் தலையில் காயமடைந்து இன்று அவ்வப்போது நினைவை இழக்கும் நிலை உருவாகியது. அத்துடன் குறுகிய நேரம் வெயிலில் வேலை செய்தாலும், மயங்கி விழுவது சகஜம் ஆகி விட்டது.

இவ்வகையில் இருவரும் வேலை இல்லா கையறு சூழ்நிலையில் வாழ்கின்றனர். பிள்ளைகளுடன் மழை வெயில் காற்றிற்கெதிராய் பாதுகாபில்லா, தகர வீட்டில் வாழ்ந்து,ஏதோ தம்மால் முடிந்தவாரு ஜீவிற்கிறார்கள். எம் முன்னால் மாவீரர்.

இந்தப்பெண்மணி ஒன்றைமட்டும் கேட்கிறார், அவரது சிகிச்சைக்காய் உதவி. அதன் மூலம் தன் காலின் தாக்கத்தை செரி செய்து, வேலை தேடி, சொந்தக்காலில் வாழ்வை அமைப்பேன் என்றும் பிறர் பணவுதவிகள் தேவையற்றன என்றும் உருக்கமாக பேசுகிறார்.

இக்கதை கற்பனையால் எழுந்ததல்ல, நம் சமூக நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் கண்ணாடி. இப்பேட்டியில் தன் கதையை சொல்லும் போதெல்லாம் கலங்காமல் துணிவாய் பேசிய அக்கண்கள், "எங்கள் அண்ணன் ஜமேதகு வே. பிரபாகரன்ஸ என்றும் எங்களை சொந்தக்காலில் நிற்கவும் சுயமாக வாழ்வும் கற்பித்து, எப்போதும் எங்களை தலை குனியாமல் மரியாதையாகத் தான் வைத்திருந்தார். இன்று அவர் நம்முடன் இருந் திருந்தால் இச்சமுதாய ஒதுக்குதல் தடுத்தினுப்பார்!", என்று கூறுகையில் கலங்கின.

இனி தாமே கூறுங்கள், இதற்கெல்லாம் நாமும் பங்களிக்கவில்லையா? பார்த்தும் பார்காதது போல் இருக்கிறோமா அல்லது அறியாமையில் வாழ்கிறோமா?

வெளிநாட்டில் நாம், இந்நிலை ஒருவருக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மாவீரர் சமுதாயத்தை சார்ந்த வேதனை என்று வலியுறுத்த வேண்டும். இங்கிருந்து பணவுதவியை அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள், ஆனால் தாயகம் செல்லும் பொருட்டு இவர்களுக்கு நம்மால் முடிந்த உதவியினை செய்தாலே போதும். நம் தாயக உறவுகளின் கண்களைத் திறந்து, இவை மாற்றான் அல்ல ஒதுக்குவதை விட்டுவிடுங்கள் என்று கூறுங்கள்.

நடந்தவை இறந்த காலத்துடன் புதையட்டும் இனி வரும் காலத்தை நாடி, ஒற்றுமையாக வாழக் கற்போம். ஒற்றுமையே வலிமை...கடினமான இச்சூழலில் இதுவே நம் இனத்தின் தேவையாகும். மேலும் எமக்காய் உயிரையும் கொடுக்க எண்ணியவர்க்காய் நாம் ஆற்றவேண்டிய சிறு நன்றிக்கடனாக பார்த்து, நம்மவரை நலனுறக்காப்போம்.

---

### முதுமை...

11 ம் பக்கத் தொடர்ச்சி

எலும்புகள் பலவீனம் அடைந்திருந்தால் அவற்றைத்தடுப்பதற்கான விற்றமின் டி, கல்சியம் போன்றமருந்துகள் உதவக் கூடும். அத்துடன் மேற்கூறியவாறு பயிற்சிகள் செய்வதும் அவசியமாகும்.
ரூமட்ரொயிட் ஆத்திரைடிஸ் போன்ற மூட்டு வாத நோய்கள் இருந்தால் அவற்றிக்கான சிகிச்சைகளை சரியானமுறையில் தொடர வேண்டும்.

இவற்றைத் தவிர நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம்,கொலஸ்டரோல், இரத்த சோகை, இருதய நோய்கள்,சுவாச நோய்கள் போன்றவையும் நொய்மைக்கு காரணமாகலாம். சில சாதாரண பரிசோதனைகள் மூலம்அவற்றைக் கண்டறிய முடியும். அவற்றிற்கானசிகிச்சைகளை உரிய மருத்துவரின் கண்காணிப்பின் கீழ்ஒழுங்காக செய்ய வேண்டும். இருந்த போதும் பலநோயாளிகளை அவர்கள் தீவிரமான நொய்மைநிலைக்கு சென்ற பின்னரே காண முடிகிறது. அந்தநிலைக்கு சென்றவர்களுக்கு சடுதியான ஆபத்துகள்ஏற்படாமல் காப்பதே முக்கியமானது. முக்கியமாகஅவர்கள் விழுந்து விடுவதைத் தடுக்க வேண்டும்.

முடியாமல் கிடக்கிற இவர் பேசாமல் கிடவாமல் அங்கினை இங்கினை தட்டுத் தடுமாறி நடந்து திரிஞ்சுவிழுகிறார். சும்மா கிடவுங்கோ என்றால் கேக்கிறாரே என்பதுதான் பல பிள்ளைகளின் குற்றச் சாட்டாக,ருக்கிறது.

பேசாமல் கிடந்தால் நொய்மை இன்னும் தீவிரமடையவே செய்யும். செயற்பட்டுக் கொண்டே இருப்பதுதான் உடலை நலிவடையாமல் காப்பாற்றும். நடமாடுவதும் மற்றவர்களுடன் ஊடாடுவதும் அவர்களதுமன மற்றும் உடல் நிலைகள் மேலும் மோசமடையமல் தடுத்து உற்சாகமாக இயங்க வைக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.



எனவே அவர்கள் விழாமல் நடப்பதற்கு உதவியான உபகரணங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும். கைத் தடிகள், வோக்கேர்ஸ்போன்றவை நிறையவே உதவும்.
இவை எல்லாவற்றையும் விட வருமுன் காப்பதே சிறப்பானதாகும். நொட்டு நொறுக்கு உணவுகளைத் தவிர்த்து போசாக்கான உணவுகளை உண்பதும், நாளாந்தம் உடற் பயிற்சிகளில் ஈடுபடுவதும் பெரும்பாலான நோய்களிலிருந்து எம்மைக் காப்பதுடன் முதுமையில் நொய்மைக்கு ஆட்படாமல் ஆரோக்கியமாக இயங்கவும் வழி செய்யும் என்பதை நாம்மறந்துவிடக் கூடாது.






# வாழ்க்கை என்பது என்ன? காலத்தோடு களித்து கரைந்து போ!!

பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்ட காலமே வாழ்க்கை. ஆயினும் ஒரு சொல்லில் சொல்லிவிட வேண்டுமாயின் வாழ்க்கை என்றால் ”உயிர்வாழ்தல்”. வாழும் முயற்சி என்பது ”தப்பிப்பிழைத்தல்” அதாவது ”வாழும்போராட்டம்” எனவும் கருதலாம்
எனவே வாழ்க்கை ஒரு சவால். எதிர்கொள்ளப்பட வேண்டிய சவால். சவால் எனப்படுவது வெறுமனே கடுகடுப்பானதல்ல. அதனை கொண்டாட்டமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

உண்மையில் வாழ்க்கை என்பது வரையறுத்துக்கூற முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. ஏனெனில் நாம் வாழும் இந்த வாழ்க்கை சரிவர யாராலும் புரிந்துகொள்ளப்படவில்லை வாழ்க்கை என்பது மாற்றமடையும் ஒன்றாக, நிச்சயத்தன்மையற்றதாகவே இருக்கின்றது.
உலகில் மில்லியன் கணக்கான உயிரினங்கள் வாழ்ந்தாலும் அவை தமக்கேற்றாற்போல் இந்த உலகினை நுகர்கின்றன. எனவே ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்க்கைமுறையும் வேறுபடுகின்றது. என்னதான் வாழும் முறையில் வேறுபாடு காணப்பட்டாலும் அவை எல்லாவற்றிற்கும் பொதுவான தன்மை ஒன்றுதான். அது ”உயிர்வாழ்தல்” என்னும் அடிப்படைத் தன்மையை பூர்த்திசெய்தல். ஒரு தன்மை உயிர்ப்புடன் இயங்க வேண்டுமானால் உயிரற்ற இன்னோர் தன்மையை சார்ந்தே இயங்கவேண்டும் இது இயற்கையின் அடிப்படை விதி. ஆகவே வாழ்க்கை என்பது உயிருள்ள உயிரற்ற தன்மைகளின் சிக்கல் நிலையாகும். இந்த சிக்கல் நிலையினை சிறப்பாக எந்த உயிரி எதிர்கொள்கின்றதோ அந்த உயிரி இவ்வுலகில் நிலைபெறுவதற்கு இயற்கை சரியான விதிகளை உருவாக்கி வைத்துள்ளது.

உதாரணமாக மனிதன் இவ்வுலகின் ஆதியிலிருந்து இதற்காக பரிணமித்து வந்திருப்பது அசாத்தியமானதாகும். வெவ்வேறு உயிரினங்களும் பரிணமித்து பல பாதைகளை கடந்து வந்திருந்தாலும் மானிட பரிணமிப்பு வித்தியாசமானது. எத்தனையோ சூழ்நிலைகள் நெருக்கடிகள் போராட்டங்கள் என்பவற்றை மில்லியன் கணக்கான ஆண்டுகளாக சுமந்து இந்த பரிணமிப்பு நிகழ்ந்திருக்கின்றது. இதுதான் வாழ்க்கை. போராட்டம், போட்டி, இசைவாக்கம் இன்னும் பல எத்தனையோ தன்மைகளை இந்த இயற்கை மனிதனுக்கு கற்றுக்கொடுத்திருக்கின்றது. வாழ்க்கை என்றால் என்னவென்று உணர்த்துவதற்காக. இவற்றைவிட மனிதனும் நிறைய விடயங்களை கற்றுக்கொண்டிருக்கின்றான் இயற்கை உணர்தியதை விடவஞ்சனை, பொறாமை, கோபம், குரோதம், பழிஉணர்ச்சி இவ்வாறாக பல எதிர்மறையான விடயங்களும் கூட. ஆனாலும் இவையெல்லாம் மேம்பட்ட மனித வாழ்க்கையின் அடிப்படை தன்மைகளினை பூர்த்தி செய்யுமா என்பது சந்தேகம்தான்.
இயற்கையானது மனிதனை ஆரோக்கியமான சூழ்நிலைகளிலேயே வைத்திருக்கின்றது. ஆனால் மனிதன் இன்று இயற்கையையும் பிற உயிரினங்களினையும் நோய்வாய்ப்பட்ட நிலைக்கு தள்ளிக் கொண்டிருக் கின்றான். தனது சுயநல வாழ்க்கைமுறையால். ஆனால்



கரிணி

பிற ஐந்தறிவு உயிரினங்கள் இன்னும் தூய தன்மையில் இந்த வாழ்வினை எதிர்நோக்கி இயற்கையுடன் ஒன்றித்திருக்கின்றன.

இயற்கையின் நுண்ணறிவு மிகவும் பெற்ற உயிரினமாக மனிதன் பிரகாசிக்கின்றான். ஆகவே தனது வாழ்க்கை முறைகள் மற்றும் தூய நேர்மறையான தன்மைகளின் மூலம் தன்னையும் தன்னைச்சுற்றியுள்ள ஜீவராசி களினையும் பாதுகாக்க வேண்டிய பாரியதொரு கடமையைக் கொண்டிருக்கின்றான்.

அறிவியலில் அதிகமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செல்லும் மனிதன் உணர்வியலில் மழுங்கிப் போகின்றான். இயற்கையுடனான பிணைப்பிலிருந்து சற்று தொலைவில் சென்றுகொண்டிருக்கும் மனிதன் மீண்டும் உணர்வியலோடு ஒன்றித்து இயற்கையோடு ஒன்றுபடுதல் வேண்டும். இது சாத்தியம் தான் ஒவ்வொரு மனிதனும் தனது சுய தன்மையினை உணர்ந்து செயற் படுவானாயின் அதுவே ஒரு பாரிய ஊற்றாக மாறி இந்த உலகினை சொர்க்கமழையில் நனைக்கும்.

இயற்கையினை சார்ந்த வாழ்வே அதன் படைப்புத் தன்மையில் முழுமை பெறும். பிறப்பில் இருந்து இறப்பிற்கு, குழந்தை பருவத்தில் இருந்து முதுமைவரை உள்ள பருவ மாற்றநிலைகள் இயற்கையின் நிர்ணயத்தின் படி நிகழ்கின்றது. ஆனால் அந்தந்தப் பருவங்களில் ஆரோக்கியத்தை, வளர்ச்சியை, முன்னேற்றத்தை, வாழ்வியலை நிர்ணயிப்பது தனக்கு தானே அன்றி வேறில்லை. ஐந்தில் வளைவதுதான் ஐம்பதின் வலுவை நிர்ணயம் செய்கின்றது. அதுபோன்றுதான் யாவும் இன்றைய உழைப்பின் பயனைத்தான் பின்பு அறுவடை செய்ய முடியும். இன்றைய விதை என்ன, எத்தகையது என்பதுதான் அறுவடை காலத்தையும், அதன் பயனையும் பெற்றுத் தரும்.

இயல்பான வாழ்வுக்கென உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படை தேவைகளைத் தவிர வாழ்வதற்கு அடிப்படைத் தயார் நிலைகள் சில உண்டு. அவற்றில் பாதுகாப்பு, ஆரோக்கியம், உடல்,உள உறுதி, துணிவு, தெளிவு, தெரிவு செய்தல்(உண்ணக்கூடிய உணவு முதற் கொண்டு தேவையான அனைத்தும்), புரிதல், பங்கெடுத்தல் (இனம், இயற்கை போன்ற விடயங்கள்) , திடமானஇருப்பை உறுதிப்படுத்தல் என்பனவற்றைக் கூறலாம். ஆடை, அடையாளம், சமயம், கலாச்சாரம் என்பன மனித நாகரிகத்தின் வளர்ச்சியேயன்றி அவை வாழ்தலுக்கான அடிப்படையானவை அல்ல. உயரிய நாகரிகம் என்பது இயற்கைக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாது பிற உயிரியின் வாழும் உரிமையில் இடையூறு அற்று இருந்து தாமும் நலமோடு வாழ்வதே.

தொடர்ச்சி 14 பக்கம்




13 ம் பக்கத் தொடர்ச்சி




இந்த நாகரிகம் மனிதன் தவிர்ந்த ஏனைய உயிரினங்களில் பெருமளவாகவே காணப்படுகின்றது. வாழ்வு முற்றிலும் சரியாக அமையப் பெற்றது அல்ல என்பது பணிவாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. சந்ததிக்கு சந்ததி அதன் தன்மை மாற்றமடைந்தே செல்லும். இதுவரையும் அப்படியே நிகழ்ந்தும் உள்ளது. வாழ்க்கை வாழப்பட வேண்டும். இருப்பினும் வாழ வேண்டுமெனில் அதன் அடித்தளமாக துணிவும் முயற்சியும் தேவை. உயிர்வாழ உணவு உண்பதற்கே முயற்சியும், செயலும் வேண்டும்.

துணிவோடு தனக்கு தானே எழுதும் விதிக்கு உதாரணமாக ஒரு கழுகினை எடுத்துக் கொள்வோம். ஒரு கழுகின் வாழ்க்கை வட்டம் நாற்பது வருடங்களில் முடிவடைந்து விடுகின்றது. உடல் முதிர்ச்சியடைந்த கழுகுகளின் நகங்கள், அலகு போன்றவை பலமிழந்து வழமை போல் வேட்டையாட முடியாமலும், நன்கு பறக்கமுடியாதபடி சிறகுகளும் கனத்துப் போகின்றன. இதன் பிறகு ஏற்படப்போவது பட்டினியும், மரணமுமே. ஆனால் எல்லா கழுகுகளும் இந்த விதிக்கு உட்பட்டுவிடுவதில்லை.

சில கழுகுகள் இந்த அடிப்படை விதிக்கு எதிராகப் போராடுகின்றன. தம் வாழ்நாட்களை நீட்டி தப்பிப் பிழைப்பதற்காக தன் பலவீனமான பாகங்களை கொஞ்சம் கொஞ்சமாக பிய்த்து எறியத் தொடங்குகிறது. பாதுகாப்பாக தனது கூட்டில் இருந்து கொண்டே முதலில் தன் அலகினை பாறையில் உடைத்து புது அலகு வளரும்வரை காத்திருந்து பின் தன் நகங்களை பிய்த்து எறிகின்றது. பின்னர் பலமிழந்த இறகுகளை ஒன்றொன்றாக பிய்த்து எறியத் தொடங்குகிறது. இப்படியாக மிகப் பெரும் வலியோடு போராடி புதிய இறகுகள், புதிய அலகு, புதிய நகங்கள் என 150 நாட்கள் வலியோடு போராடி புதிய அங்கங்களோடு புத்துணர்வான வாழ்வை மீண்டும் பெற்று மேலும் முப்பது வருடங்கள் தன் வாழ்நாளை நீட்டிக் கொள்கிறது கழுகு.

இந்த வல்லமையினையும், துணிவினையும் பிறப்பிலிருந்தே கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே வலிமையான கழுகின் குஞ்சு வலிமை குறைந்த தன் சக குஞ்சை கொன்று உண்ணும். இதை தாய் கழுகும் தடுக்காது. வலியது வாழும் என்பது இங்கு தொடங்குகிறது. பின் பறக்கத் தொடங்கும் முன்பே தன் குஞ்சை கழுகு உயரத்தில் இருந்து தூக்கி போடுகிறது. நிலத்துக்கு அருகில் குஞ்சு வரும்போது தாய் கழுகு பிடித்துவிடும் இப்படியாக தப்பிப்பிழைக்க வேண்டும் என்ற பயத்தில் கழுகின் குஞ்சு பறக்கப் பழகுகிறது. இது வாழ்வின் தப்பிப் பிழைத்தலுக்கான கடும் போராட்டங்களில் ஒன்று.

அடுத்து திறமை என்பது ”வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்தல்” முக்கியமாக எல்லா உயிரினங்களிடையேயும் இதன் தன்மையினைக் காணமுடிகிறது. வாழ்வதற்கான வாய்ப்பினை ஒவ்வொரு நாட்களும் வழங்குகிறது. அதை பயன்படுத்த வேண்டியதே திறமை. ஒரு நாள் என்பது பகலும் இரவும் சேர்ந்தது இரவில் பகலுக்கு வேண்டியோ பகலில் இரவுக்கு வேண்டியோ காத்திருக்க கூடாது. அந்தந்த பருவங்களில் அந்தந்த தன்மைகளை அனுபவிப்பதே மிகச் சிறப்பு, மனிதனை தவிர ஏனைய உயிரிகள் பெரும்பாலும் நிகழ்காலத்திலேயே வாழ்கின்றன. நிகழ்காலத்தை இழக்கும்போது வாழும் காலம் குறைந்தே போகிறது எனலாம். எதிர்காலத்தை நேரடியாக சந்திக்கும் போது அது நிகழ்காலம் ஆகின்றது. ஆக எதிர் காலம் என்பதே இல்லை. இருந்தாலும் அதை சந்திக்கப் போவதில்லை. சந்திக்கும், உணரும், அனுபவிக்கும் எதுவாயினும் அது நிகழ் காலம் மட்டுமே. நிகழ் காலத்தை உணர்ந்து அனுபவிக்காது வீணடிப்பதைவிட காலத்தை உணர்ந்து பயணிப்பதே அதற்கான சிறந்த பலனை வழங்குகின்றது.

காலத்தின் போக்கில் ஒரு கட்டமைப்பு அழகாக உண்டு. அதற்கென ஒரு சுழற்சி உண்டு அதில் சிறிதளவு ஏற்படுத்தப்படும் இடையூறு சிறிது சிறிதாக வளர்ந்து அதன் மொத்த சமநிலையினையும். சீர்குலைக்கும்.

இயற்கையின் நீதிமன்றம் என்ற ஒன்று இருப்பின் அதன் குற்றவாளிக் கூண்டில் மனித இனம் மட்டுமே அடைபட வேண்டியிருக்கும். இன்றைய நிலையில் நாகரிக வளர்ச்சியில் மனிதன் கால்போன போக்கிற்கு சென்று தன் வாழும் காலத்தில் சிக்கல்களை எதிர்கொள்கிறான். அவனுடைய சுய இருப்பு ஆட்டம் காண்கிறது. காலத்திற்கு அவன் விடுக்கும் சவால், இயற்கைக்கு எதிரான முயற்சிகளில் இறுதியில் பல்வேறு பக்கவிளைவுகளை சந்தித்துக் கொள்கிறான். ஏனைய விலங்குகளோடு ஒப்பிடுகையில் மனிதனே கொடிய விலங்காக உள்ளான். பல்வேறு உயிரினங்கள் மனித குலத்தின் அட்டூழியங்களைச் சகித்துக் கொண்டு வேதனையோடு தம் வாழ்நாளை கழிக்கின்றன. நிலம், நீர், காற்று, போன்றவற்றை அசுத்தமாக்கும் உரிமை இயற்கைக்கு மிகவும் எதிரான செயலாகும். ஒரு உலகத்தில் பிறந்து தனது மனித இனங்களுக்கு எதிராகவே உருவாக்கப்பட்டிருக்கும் அணுகுண்டுகள் யாவுமே இப் பூமிக்கு எதிராக செய்யும் மாபெரும் குற்றச் செய்கையாகும். தனக்கு பிறகு உருவாகும் உயிரினங்களை பற்றிய கரிசனை அற்ற நிலை உச்சக்கட்ட சுயநலம். இந்த துணிவும், அரக்கத்தன்மையும் மனிதனுக்குள் உருவானது படைப்பின் பெரும் சாபக்கேடு. உணவுத் தேவையினைத் தவிர வாழும் உயிரிகள் மற்றும் இயற்கைக்கு இடைஞ்சலாக இருப்பது மனிதன் இப்பூமியில் வாழும் தகுதியை இழந்து விட்டான் என்றே கூறலாம். இவ்வுலகு மனிதர்களுக்கானது மட்டுமல்ல .

இருப்பினும் இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சென்ற மனிதர்களில் மகத்தான வாழ்வியல் முறையினை பொக்கிசமாக தருவித்து சென்றவர்களும் அதனை தேடி அதன்படி வாழ முயல்பவர்களும், இயற்கையோடு ஒன்றி நகர்ப்புறங்களை விட்டு ஒதுங்கி வாழும் ஆதிவாசிகளும் இப்பூமியில் இன்றும் வசித்துக்கொண்டிருக்கின்றார்கள்.வலியது வாழும்.

இருப்பினும் காற்றும், நீரும், வானும், மண்ணும் போல, அன்பும், அரவணைப்பும், அழகும், இனிமையும் போல வாழும் வாழ்வும் பொதுவானது. எல்லைகள் அற்று பரந்து விரிந்து, கலந்து, உணர்ந்து செறிந்து, கரைந்து கலைந்து போவது வாழ்வு.

வாழ்க்கை ஒரு அற்புதமான கொண்டாட்டம்.






# எவ்வளவு நேரம் வணங்குகிறோம் என்பதா? முக்கியம் இல்லவே இல்லை என அடித்துக்கூறிய சீரடி!

சிவப்பிரியன்

கடந்த 08.10.2019 வியதசமி தினத்தில் இந்தியாவில் மகாராஷ்ரா மாநிலத்தில் சீரடி நகரம் பெரும் விழாக்கோலம் பூண்டது. அன்று சீரடி பாபா அவர்கள் சமாதி எய்தியதினம். எந்தவித முன்திட்டமோ அல்லது அன்று சமாதியடைந்த தினம் புனிதமான நாள் என்று கருதியோ அன்று அங்கு செல்லவில்லை. ஆனால் யாவும் இயல்பாகவே நடந்தது.

07.10.2019 திங்கள் காலை டெல்லியில் இருந்து சீரடி விமானநிலையத்தில் வந்து இறங்கினோம். தாயகத்தில் பலாலி விமானநிலையத்தைவிட பாதியும் இல்லை. ஆனால் பலாலி விமானநிலையத்தை ஞாபகப்படுத்தும் வண்ணம் மண்வாசமும் சூழலும் அமைந்திருந்தது. கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற முதுமொழி ஒவ்வொரு காலகட்டத்திலும் அதன் பொருள் எதோ ஒருவிதத்தில் பொருந்தத்தான் செய்கிறது.

இங்கு மக்களின் வருவாய் இந்தக்கோவிலைச் சுற்றியே அமைந்துள்ளது. ஒரு கோவிலுக்காக ஒரு விமான நிலையத்தையே உருவாகியுள்ள ஒரு கிராமம் அது என்றால் மிகையாகாது. விமான நிலைய வாசலில் ரைக்சி வியாபாரம் ஆரம்பித்து கோவில் எல்லை வரை தொடர்கிறது.

கோவிலை அடைந்ததும் சீரடியின் புனிதம் மலர்கிறது. செருப்புக்கள் பாதுகாப்பாக வைக்க சில இடங்கள் உண்டு 15, முதல் 20 ஆயிரம் என மக்கள் கூடும் இடத்தில் இது சாத்தியமா எனக்கேட்டால் சாத்தியம் என்றே கூறலாம். கோவிலுக்கு வரும் மக்கள் அனைவரும் செருப்பு பாதுகாக்கப்படும் இடத்தில் வைப்பது குறைவு, அப்படி வைத்தாலும் அங்கு நிற்பவர்கள் நீங்கள் சிறுதொகை கொடுத்தாலும் சிரித்த முகத்துடன் வாங்குவார்கள். கோவிலுக்குள் வியாபாரம் இல்லை. மீதி மக்கள் செருப்புக்களை கரையோரமாக வைத்துவிட்டுப் போகிறார்கள். பின்பு வந்து மாட்டுகிறார்கள். ஆனால் எவரது செருப்பும் தொலைந்ததாகத் தெரியவில்லை. இது ஒரு அதிசயம்தான்.

இன்னுமொன்று எவரும் கைத்தொலைபேசி எடுத்துச்செல்லமுடியாது, கமரா மற்றும் விடியோ எடுக்கமுடியாது. இச்செயல் எமக்கு தாயகத்தில் அன்று பார்த்த மக்களை கண்முன் நிறுத்தியது. வணங்கும் போதும் இருகைகளுக்குள் பாம்பு படம் (Foto) எடுப்பதுபோல் எந்தக்காட்சியும் அங்கு இல்லை. இதனை புலம்பெயர்ந்து வாழும் நாமும் ஆலயங்களில் கடைப்பிடிக்கவேண்டும். கைத்தொலைபேசி அவசியம் ஆனால் படம் எடுப்பது அவசியம் அல்ல.

சாதாரணமாக மக்கள் வரிசையாக நின்று போவது என்றாலும் காரியாலயத்தில் பாஸ் எடுக்கவேண்டும். அதனை எடுத்துக்கொண்டு வரிசையில் நின்று பாபாவிற்கு ஆராதனை நடைபெறும் இடம்செல்லவேண்டும். அதற்கான ஒழுங்கு பிரமாதமாக அமைந்திருக்கிறது. அதிகாலை 3.00 மணிக்கு சென்று பாஸ் எடுத்து வரிசையில் நின்றால் ஒவ்வொரு கட்டம் கட்டமா மக்கள் நகருவார்கள். முன்னே பாஸ் ஸ்கேன் செய்ப்பட்டு பாதுகாப்புக்கருதி விமான நிலையத்தைப்போன்று சோதனையும் இட்டு உள்ளே விடுவார்கள். இதன் மூலம் அடியவர்களது எண்ணிக்கையும் தெரியவரும். அதற்கேற்ப உள்ளே அனுமதிப்பார்கள்.

என் வாழ்வில் அதிக நேரம் (கிட்டத்தட்ட4 மணிநேரம்) வரிசையில் நின்றது அன்றுதான். ராஜா தியேட்டரில் அன்று சிவாஜி நடித்த தங்கை படத்திற்கும், ராணி தியேட்டரில் அடிமைப்பெண்ணிற்கும் வரிசையில் நின்றதை இங்கு சேர்க்கவில்லை. வரிசையாக நின்று உள்செல்ல அதிக நேரம் செல்வதால் மக்களுக்கு வசதியாக இடை இடையே இருப்பதற்கு வாங்கும், தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்ட ஒதுக்குப்புறமும் சிறுநீர் கழிப்பதற்கு இடமும் யதார்த்தமாக அமைத்தும் உள்ளார்கள். மக்களை ஒழுங்கு படுத்த கடமையில் ஈடுபட்டு இருக்கும் பொலிசாரும் ஆலயத் தொண்டர்களும் அன்பாக மக்களை விரைவுபடுத்தியவண்ணம் இருந்தனர். பாபாவின் இடத்தை அடைந்ததும் நான்கு மணிநேரம் காத்திருந்து 30 விநாடிக்குள் வணங்கி திருப்தியுடன் சென்ற மக்களின் பண்பு மனதைத்தொட்டது. அதிக நேரம் வணங்குவதும், நீட்டோலையாக வேண்டதல்களை கேட்பதும் அங்கு இடம்பெற்றதாக அத்தினத்தில் காணமுடியவில்லை. ஒரு விநாடிக்குள் இந்த உலகை வந்தடைந்த எமக்கு வேண்டுதல்களுக்கு மட்டும் ஏன் இந்தளவு நேரம் என்று கருதி மக்களை விரைவுடுத்தியிருக்கலாம். தரிசனம் என்பது மணிக்கணக்கில் அல்ல அது மனக்கணக்கோடு கூடியது.

தொடர்ச்சி 26 ம் பக்கம்




பார்க்கும் இடம் எங்கும் செவ்வந்தி மாலை


**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளோம்

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de


Frankfurt நகரில்....
Jaffna Bazar
Jaffna Bazar
உங்கள் பழைய நகைகளைத் தந்து
2019 ஆண்டின் புதிய டிசைன் நகைகளைப் பெறுங்கள்!
தங்க நகைகள்
தரமானவை மட்டும்
என்றும் எம்மிடம்
கிடைக்கும்
KADHIR
Laila
Basmati Rice
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்
வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்
Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425

# Non-violence from Childhood



Bavvatharani Ravindran
Nallur



Non-violence is a great human value. All the other species that are found in the earth totally depend on other living beings.  If we look at the food cycle of the species, we can see how they depend on other animals for their living. The whales hunt fish, pests live on the trees sucking the tree's food, the wildflowers hunt living beings

The early human beings lived beside the rivers and found shelter in caves. They had to depend on the fruits, leaves and nuts. They even hunted birds and animals for food, dress and to cover their needs. At the same time the humans knew how they can live without harming other species by following non -violence. There were sages, saints, rishis and other Brahmins who remained vegetarians and followed the great human value called non-violence.

It is when Mahatma Ghandi elaborated and demonstrated how a country can be liberated from other rulers by fasting and Sathyagraha that the world came to know about non- violence. Mahatma fought for the liberation of India from the British rulers through non-violence and Sathyagraha.

The great Tamil scholar Thiruvalluvar has written a chapter on non-violence. In it we find verses such as follows:

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்.”

Meaning: If one refrains from eating non vegetarian food the whole world will worship him.
We have witnessed how all the saints, avatars and deities have lead man in the right path through religious literature. Today man has explored not only the earth and other planets, he has found the very minute and astonishing technology too. We read in the twentieth Century short stories about how one can see and talk to each other through a gadget. Today it is not very surprising to see someone who is geographically far away in a mobile phone.

The present generation is fortunate to live in supremely developed IT and Technology, enjoying and living without much strain. Everything is in their doorstep. In this wonderous world in each family from the baby to the granny everyone is occupied handling Mobile phones, Tab, Laptop or TV. All these inventions were already found by the great Rishis as they followed vegetarian food from their birth, nurtured other species and loved all living beings and observed non-violence and kept the five elements such as water, fire, air, earth and the space in their control.

Only during fasting days and temple festivals people avoid non - vegetarian food. This itself proves that they are aware of the great value non -violence. Today people have no time to think about whether they can lead a life without committing sin.  Therefor we can see that every day, every moment humans are ignoring non-violence.





In earlier times the grandparents and parents guided the small ones to follow human values such as telling truth, respecting elders, obeying parents and following non- violence. As human is the highest breed of creation, he can understand the feelings of other beings. Man can show love and care others. He can preserve the beautiful creation of this world without polluting, harming, destroying and corrupting it.

The right time has come now for all to preserve and follow the great human values from the birth of the child, as the world is suffering from nonviolence such as being addicted to narcotics and alcohol, child abuse, sexual harassment, raping ,murder smuggling ,robbery and so on. The parents and teachers have to play a great role in enabling the young children to follow this great value non-violence to nurture the earth and the living beings and to obtain love from mother earth and other planets reciprocatively.






# அறம் படம் வந்தும் கரம் கொடுக்கா சுர்ஜித்தின் துயர்.



அறம் என்று அன்று படம் ஒன்று வந்தது. இன்று அதே நிலையில் நியம் இங்கு நிகழ்ந்தது. இரண்டு வயது குழந்தைக்கு இயற்கை செய்த கொடுமையா? இல்லை இந்த அரசாங்கம் காட்டிய அலட்சியமா?

இரண்டே வயதாகும் சுர்ஜித் என்ற குழந்தை, இந்தியாவில் திருச்சியில் நடுக்காட்டுப்பட்டி என்ற கிராமத்தில் 25.10.2019 வெள்ளிக்கிழமை ஓடிவிளையாடும் போது ஏற்பட்ட ஓர் உச்சக்கட்ட அபாயம் தான் இது. தந்தை செய்த தவறில் மாட்டிக்கொண்ட தனையன் என்பது சுர்ஜித் விடையத்தில் உண்மையாகின்றது.



மூன்று நாட்களாக(27.10.2019 இன்று மதியம் 2 மணி வரை) அந்தக் குழந்தை 25 அடியில் இருந்து சிறிது சிறிதாக நழுவி உள்ளே இறங்கி கொண்டு உள்ளது. இப்போது வரை அனைத்து வழிகளையும் முயற்சித்துப் போராடிக் கொண்டு இருக்கும் தீயணைப்புப் படை, மற்றும் ஒட்டு மொத்த இந்தியாவும் நம்பிக்கை மற்றும் பிராத்தனையைக் கைவிடவில்லை. நீங்களும் உங்கள் ஒரு பிராத்தனையை அந்தக் குழந்தைக்கு கொடுங்கள். இனிமேல் எந்த ஒரு சுர்ஜித்திற்கும் இந்த ஒரு நிலை ஏற்படக் கூடாது. அதற்காய்ப் பிராதியுங்கள்.



நடந்தது என்ன?
மழை பொய்த்து போன மண்ணில், விவசாயித் தந்தை போட்ட துளைதான் அந்த ஆழ்துளைக் கிணறு. துளை போட்டும் நீரில்லாக் காரணத்தால் அதை மூடுவதற்கு இன்னும் ஆயிரக் கணக்கில் செலவழிக்க வேண்டுமா?

என்று எண்ணிய தந்தை கல்லையும் மண்ணையும் போட்டு கவனயீனமாக மூடியது முதல்க் குற்றம். கிணறு சரியாக மூடப்பட்டதா? என்று கவனிக்காத அரசாங்க அதிகாரிகள் இரண்டாம் குற்றவாளிகள். விழுந்த குழந்தையைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்காமல் இருந்த மத்திய அரசாங்கம் மூன்றாம் குற்றவாளி. ஆனால் இப்போது அந்தத் துளையில் இருந்து 3 மீட்டரை அருகில் இன்னுமோர் துளை போடப்படுகின்றது அதன் வழியாக உள்ளே சென்று 4 இஞ்சித் துளையில் சிக்கி வெளியில் வரமுடியாமல் அலறும் குழந்தைக்கு அருகாமையில் துளையிட்டுச் சென்று காப்பாற்ற முயலும் குழுவிற்கு எங்கள் பிரார்த்தனையையும் கொடுத்து காப்பாற்ற வழிபடுவோம்.
நாளை இன்னோர் குழந்தை இன்னலில் அவதிப்படக் கூடாது.

அதுவே நமது பிரார்த்தனையாக இருக்கட்டும்.
தகவல், ஈழன்.



# „The Urge to sound White"

Ram Paramanathan

The phenomenon of second-generation immigrants, changing their names in order to make them easier for white people to pronounce is not unlikely. Indeed I see it as an ingrained defense mechanism to bigotry. Racists in Germany often depict migrants as „lazy" and as „people who live from our taxes" but at the same time they'll say „Migrants are taking away our jobs!". Both these accusations and many more implode on to each other, however, second-generation immigrants do not want to be linked with any of them. In order to never be noticed as migrant, or not to be „othered", we tend to change our names, lifestyles, accents and realities into more whitely perceivable ones. Lets elaborate on a more prominent example below.

It hasn't been a long time since Michelle Obama finally dared to show off her natural hair, a step that she would have never taken while she was First Lady of the United States. Her hair was always been kept straight, to undermine her ethnicity. I also observed her styling sense become more colorful, more daring and more familiar to African-American culture, certainly after her Time as FLOTUS. The contrast to her past was the most drastic when she wore the Balenciaga Glitter Canvas Boots to a yellow dress on her book tour. A styling decision, that she would have never made as the wife of the first black president with a majority of white supporters. In order to not stir any racial conflicts, Michelle Obama was made to look more proper and polished or in other words more „white-pleasing". Beyoncé is also a very prominent example.



Beyoncé

In my adolescence, I have always made sure that I never smelled like Tamil food, rarely ever had non-white acquaintances and made sure that neither my German, English, French or Norwegian would ever have a Tamil accent. It doesn't just stop with the appearance, to take part in white groups, I have laughed off racist jokes and slurs or I have often been an accomplice when other racial minorities were bullied. In various parts of my life, the only quality I could offer to white people in order to accept me as one of their peers was, me allowing them to make fun of my kind. At the same time though, out of fear that I could ever turn into a Joke, I made sure there were no stereotypes I reproduced.

Today, when white colleagues or friends tell some racist joke, I say: „What about me then?", their answer will be: „Well but you are not like the others!". This might be because I performed my whiteness to a level, where my ethnicity might have been forgotten. Surely I would be reminded again that I am Tamil, and that I look different, when I enter the Subway and people start holding on to their bags. Our dreams of a color-blind world, where we would be perceived as a human, a Diva or a Goddess, would end the minute we and our already handpicked audience leave the farce of racial equality to enter the real, unfair world of bigotry. Read more about this in my upcoming blog "Mangojuice".

## வெற்றிமணி வெள்ளிவிழா வெற்றிபெற அனுசரனை வழங்கியவர்களுக்கு நன்றி!

*Foto: www.konessfotos.de*



Lucky Fly — EurAsian Tours



தமிழர் அரங்கம் Dortmund — BCN TRAVELS — S.K.Silks Gold Paradise




K.K.L Textilien Schmuck Haushaltsware — HK Hammacher Fahrschule



சுமித்திரன் (IBC Germany) — Jasmine Silk House — PALAZIO Events — ஆசியா சமுத்திரம்



Nandy's — TKS Best foods STAR IMPEX *Amma's food* நிறுவனத்தின் பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டனர்.



"வெற்றிமணி எங்கள் இதயக்கனி" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட 16 கேடயங்களை *Gopara Gnanam* நிறுவனத்தினர் அன்பளிப்புச் செய்தனர்


# Easy Holiday
## Travels & Tours



உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்

தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan

Mob:0152 1365 4331 - 0152 04153138

எம் மக்களின் அபிமானம் வென்ற

Easy Holiday
Travels & Tours

தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்

- விமானச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதிகள்
- வாகன வசதிகள்
- வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
- ஹோட்டல் வசதிகள்



Emirates ETIHAD Gulf Air QATAR

Westring 36
44623 Herne
Germany

Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com






**நம்மிடம் என்னென்ன இருக்கிறது என்பதைப் பட்டியலிட்டுப் பாராட்டத் துவங்கினால், ஏமாற்றங்களின் குரல் அமுங்கி விடும். பொறாமையின் பற்கள் உடைந்து விடும்.**

சேவியர்

# போட்டியும் பொறாமையும் கூடப்பிறந்தவையா!

”கலைஞர்களுக்குள் போட்டி இருக்கலாம், ஆனால் பொறாமை இருக்கக் கூடாது” என்பது மிகப் பிரபலமான ஒரு சினிமா வசனம். எந்த ஒரு கட்டுரையை வாசித்தாலும் சரி, எந்த ஒரு உரையைக் கேட்டாலும் இந்த இரண்டு வார்த்தைகளையும் பெரும்பாலும் சேர்த்தே தான் பயன்படுத்துவார்கள். போட்டி என்ற வார்த்தையை உச்சரித்தாலே அடுத்து பொறாமை எனும் வார்த்தை மனதில் குதித்து வருமளவுக்கு இந்த இரண்டு வார்த்தைகளும் ஒட்டிப் பிறந்த சயாமிஸ் இரட்டையர்களைப் போல நிலை பெற்றுவிட்டன. ஏன் இந்த இரண்டும் இணைந்தே திரிய வேண்டும் ? கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்தால் சுவாரஸ்யமான சிந்தனைகள் மனதுக்குள் முகம் காட்டுகின்றன.

ஒரு அழகான இளம் பெண் சாலையில் நடந்து போய்க்கொண்டிருக்கிறாள் என வைத்துக் கொள்ளுங்கள். ஓரமாக நின்று பார்க்கின்ற மற்ற பெண்களின் மனதில் முதலில் ஒரு ரசனையின் வாசம் எழும். ”ஆஹா.. செம அழகா இருக்கா !”. அதன்பின் அவளைப் போல நாமும் மாறவேண்டும் எனும் அழகுப் போட்டி இதயத்தில் வந்தமரும். அப்படி மாற முடியாமல் போகும் போது, அவளது வசீகரத்தை நாம் அடைய முடியவில்லையே எனும் ஆதங்கம் முளைவிட்டு, பொறாமையாய் கிளைவிட்டுத் திரியும்.

**”ஐஸ்வர்யா ராய் எவ்ளோ அழகு” என பெண்கள் பொறாமைப் படுவதில்லை.**

பிறரோடான ஒப்பீடுகள் தான் போட்டிக்குத் தூண்டுதலாகவும், பொறாமைக்கு தூண்டு கோலாகவும் இருக்கிறது. ”ஐஸ்வர்யா ராய் எவ்ளோ அழகு” என பெண்கள் பொறாமைப் படுவதில்லை. பக்கத்து சீட்ல அமர்ந்து வேலை செய்கின்ற பெண் எவ்ளோ அழகா இருக்கா ! என்று தான் பொறாமைப் படுவார்கள். கூடவே இருப்பவர்கள், தொடர்ந்து பயணிப்பவர்கள், மிகவும் பழகியவர்கள் இவர்களெல்லாம் நாம் அடைய முடியாத இடத்தை அடைந்தால் நமக்குள் அந்த பொறாமையின் புலிநகம் பிறாண்டுகிறது.

பொறாமை இல்லாத மனிதர்கள் இல்லை என்றே சொல்லி விடலாம். பெரும்பாலும் மனதின் ஏதோ ஒரு ஓரத்தில் ஒரு பொறாமைக் குட்டிச்சாத்தான் உட்கார்ந்து கொண்டே தான் இருக்கும். பலர் அதை வெளிப்படையாய் காட்டுவார்கள். சிலர் அதை சாதுர்யமாக மறைத்து விடுகிறார்கள். சந்தேகம் இருந்தால் உங்கள் வாழ்க்கையைக் கொஞ்சம் திருப்பிப்பாருங்கள் (ரீவைன்ட் செய்து பாருங்கள்.) உங்களுடைய அலுவலகத்தில் உங்களை விட சிறியவர், அல்லது உங்களுடைய நிலையில் இருப்பவர் உங்களை விட அடுத்த நிலைக்கு பதவி உயர்வு பெற்றுச் செல்லும் போது உங்கள் மனநிலை எப்படி இருக்கிறது ? நீங்கள் கைகுலுக்கிப் பாராட்டும் அந்த நிகழ்வில் எத்தனை சதவீதம் உண்மையின் ஈரம் உறைந்திருக்கிறது ?

”அவனுக்கெல்லாம் இந்த புரமோஷன் கிடைச்சிருக்கு. இதுக்குக் காரணம் என்னன்னா...” என நாம் அடுக்குகின்ற கிசு கிசு மட்டம் தட்டுதல்களில் வெளிப்படுபவை அக்மார்க் பொறாமையே ! நாம் அடைய வேண்டும் என நினைக்கின்ற இடத்தை இன்னொருவர் அடைந்து விட்டாரே என நினைப்பது. அடையவேண்டும் எனும் இலக்கை நோக்கி ஓடும்போது போட்டி வலிமையானதாக இருக்கிறது. அடைய முடியாமல் போகும் போது அந்த இயலாமை பொறாமையை விளைவிக்கிறது.




பொறாமை தனக்குத்தானே விடும் அம்பு

ஓடுவது ஒரு இலக்கை நோக்கி எனும் போது போட்டியாய் இருப்பது, ஒரு நபரை நோக்கி எனும் போது பொறாமையாய் மாறி விடுகிறது. அடுத்தவன் அந்த இடத்தை அடைந்து விடக் கூடாது எனும் சிந்தனை போட்டியின் சுவாரஸ்யத்தையும், ஆரோக்கியத்தையும் குழி தோண்டிப் புதைத்து விடுகிறது. இணைந்தே பயணிக்கின்ற இருவரில் ஒருவர் உயர்ந்த இடத்தை அடைந்தபின், அந்த இருவரின் இயல்புகளிலும் பெரிய அளவில் மாற்றம் உண்டாகி விடுகிறது.

போட்டி ஒரு மனிதனை வெற்றியாளனாய் மாற்றிக் கொண்டே இருக்கிறது. பொறாமை ஒரு மனிதனை நோயாளியாய் மாற்றிக் கொண்டே இருக்கிறது. அதையே அறிவியல் ஆய்வுகள் சொல்கின்றன. பொறாமை படுகின்ற நெஞ்சில் ஏராளமான நோய்கள் வந்து குடியேறுகின்றன. உயர் குருதி அழுத்தம் முதல், கேன்சர் வரையிலான நோய்களுக்கு பொறாமையின் பாசி படிந்து கிடக்கின்ற இதயம் ஒரு காரணம் என்கின்றன ஆய்வுகள்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



# போட்டியும் பொறாமையும் கூடப்பிறந்தவையா!




எனவே பொறாமை உங்கள் மனதில் பாதம் பதித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டால், அதை உடனே அகற்ற வேண்டிய வழிகளைப் பின்பற்ற வேண்டும். பொறாமை என்பது சீற்றம் கொண்ட சிங்கத்தைப் போல. சிங்கத்தைக் கூடவே வைத்துக் கொண்டு யாரும் குடும்பம் நடத்துவதில்லை. அதை விரட்டி விட்டால் தான் வீடு நிம்மதியாக இருக்கும். எனவே பொறாமையை விரட்ட முயற்சியை எடுக்க வேண்டும்.

பொறாமையானது நம்மை நோக்கி நாமே எய்கின்ற அம்பைப் போன்றது. ஒருவர் மீது பொறாமைப் படும்போது நாம் நம்மையே எய்கிறோம். அடுத்த நபருக்கு அது தெரிவது கூட இல்லை. அவரு பாட்டுக்கு அவரு வேலையை செய்துட்டே இருப்பாரு, நாமோ பொறாமையெனும் கூர் முனையினால் நம்மை நாமே காயப்படுத்திக் கொண்டு கீழே விழுந்து கிடப்போம். பல வேளைகளில் இது நம்மை சுய பச்சாதாபத்துக்கும் இட்டுச் செல்கிறது. “நம்மால முடியாது“ , நாம இதுக்கெல்லாம் லாயக்கில்லை, நாம அதை யோசிக்கவே வேண்டாம், நமக்கு திறமை இல்லை  இப்படிப்பட்ட சிந்தனை கள் நம்மை மூழ்கடிக்க இந்த பொறாமையும் ஒரு காரணம் என்கிறது உளவியல்.

நமது பொறாமைக்குக் காரணம் ஒருவேளை நமக்கே தெரியாமல் இருக்கலாம். ஒருவேளை சின்ன வயதில் நிகழ்ந்த வாழ்க்கை அனுபவங்கள், பொறாமையையும் வெறுப்பையும் மனதுக்குள் பதியமிட்டிருக்கலாம். அது காலப்போக்கில் நமது இயல்பாய் மாறியிருக்கும். அப்படிப்பட்ட சூழலில் அந்த பொறாமையின் ஆணிவேரைக் கண்டறிவது மிகவும் அவசியமானது. அதைக் கண்டடைவதும், புரிந்து கொள்வதும், அதை விட்டு விலக முடிவெடுப்பதும் முதன்மைத் தேவைகள்.
வாழ்க்கையில் நம்மிடம் இருப்பதைப் பாராட்டத் துவங்கினாலே, பொறாமை பெரும்பாலும் விடைபெற்று ஓடிவிடும். நோய் நொடியில்லாமல் ஒருவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்பதே அதிகபட்ச மகிழ்ச்சிச் செய்தி. அடிப்படை வசதிகளோடு வாழ்க்கையை கொண்டாட முடிந்தால் அது மிகப்பெரிய ஆறுதல் செய்தி. இப்படி நம்மிடம் என்னென்ன இருக்கிறது என்பதைப் பட்டியலிட்டுப் பாராட்டத் துவங்கினால், ஏமாற்றங்களின் குரல் அமுங்கி விடும். பொறாமையின் பற்கள் உடைந்து விடும்.

நம்மைத் தாண்டி ஒருவர் ஓடும்போது தான் பெரும்பாலும் பொறாமை வேர்விடும். எல்லாரும் தனித்தனி இயல்புடையவர்கள். ஒவ்வொருவருக்கும் தனித் தனி திறமைகள் உண்டு. அவரவர் பாதையில் அவரவர் பயணிக்கின்றனர். நான் எந்த இடத்தில் இருக்க வேண்டும் என்பதை இறைவன் நிர்ணயிக்கிறார். இருக்கின்ற தளத்தில் சிறப்பாய் பணி செய்வது மட்டுமே எனது வேலை, இல்லாத தளத்தை நோக்கி ஏக்கம் கொள்வதல்ல எனும் சிந்தனையை  மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும். அது பொறாமையை புறக்கணிக்க உதவும்.

தனது மகிழ்ச்சி உறவுகளோடு இருப்பது தான், கரன்சிகளோடு கிடப்பதல்ல என்பது அவரது தேர்வாக இருந்தது.
நமது வாழ்க்கையில் எது நமக்கு முக்கியம் என்கின்ற பிரையாரிட்டி, முதன்மை விஷயங்களை நாமே கட்டமைத்துக் கொள்ள வேண்டும். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவருக்கு சமீபத்தில் இரண்டு வேலை வாய்ப்புகள் வந்தன. ஒன்று குறைந்த சம்பளம் ஆனால் இடமாற்றம் தேவையில்லை, குடும்பத்தோடு இருக்கலாம் எனும் வசதி. இன்னொரு வேலைவாய்ப்புக்கு பக்கத்து மாநிலத்துக்குச் செல்ல வேண்டும். ஆனால் சம்பளம் மூன்று மடங்கு. “செம வாய்ப்பு, பெரிய பதவி, எக்கச்சக்க பணம் கொஞ்ச நாள் குடும்பத்தை விட்டுட்டு வெளியூர் போ” என்று அறிவுரை கூறினார்கள் நண்பர்கள். அவரோ, உள்ளூர் வேலையைத் தேர்ந்தெடுத்தார். தனது மகிழ்ச்சி உறவுகளோடு இருப்பது தான், கரன்சிகளோடு கிடப்பதல்ல என்பது அவரது தேர்வாக இருந்தது.
ஒவ்வொரு விஷயமும் அவரவர் தேர்வு. ஒன்று சரி, ஒன்று தவறு என்பதை நிறுவுவதல்ல நமது நோக்கம். எதை முதன்மையாய் வைக்கிறீர்களோ அதைப் பொறுத்தே உங்கள் பொறாமையும், போட்டியும் இருக்கும் என்பது தான்

## மகிழ்ச்சி உறவுகளோடு இருப்பது தான், கரன்சிகளோடு கிடப்பதல்ல

சேவியர்

அதே போல போட்டிகள் பொறாமையாக மாறி பல்லிளிப்பதற்கு தன்னம்பிக்கைக் குறைபாடு ஒரு முக்கியமான காரணம். நம்மைப் பற்றிய உயர்வான எண்ணங்கள் நமக்கு இருந்தால் பெரும்பாலும் பொறாமை பின்வாசல் வழியாக ஓடியே போய்விடும். என்னால் சாதிக்க முடியும், எனக்கு அந்தத் திறமை இருக்கிறது, எது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நான் மதிப்பு மிக்கவன் போன்ற சிந்தனைகளை தன்னம்பிக்கையின் பாடசாலையில் தான் பார்க்கமுடியும். அத்தகைய சிந்தனைகள் நம்மிடம் இருந்தால் நாம் பொறாமையெனும் பொறியில் சிக்கிக் கொள்வதில்லை.

போதுமெனும் மனம் பொறாமையை வெல்ல இன்னொரு மிக வலிமையான ஆயுதம். ”நீ முன்னாடி போறியா ? போய்க்கோ”, ”நீ பின்னாடி வரியா, பரவாயில்ல வா…” என்பது போன்ற சமநிலை மனநிலை இருப்பவர்களிடம் பொறாமை காணப்படுவதில்லை. வாழ்க்கையை எதிர்கொள்ளும் மனநிலையும், தன்னம்பிக்கையும் அவர்களிடம் நிரம்பியிருக்கும். எவ்வளவுதான் சவாலான சூழலாய் இருந்தாலும் இயல்பாய் எடுத்துக் கொள்ளும் மனிதர்கள் புயலடித்தும் சரியாத மரமாய் வளம்பெறுவார்கள்.

நல்ல உடல் ஆரோக்கியம், உடற்பயிற்சி செய்வதெல்லாம் பொறாமை சிந்தனையை மாற்றும் என கூறி வல்லுநர்கள் வியக்க வைக்கின்றனர். மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல இது முதலில் தோன்றுகிறது. ஆரோக்கியமான மனம், நல்ல சிந்தனைகளை கொண்டு வருகிறது. நெகடிவ் சிந்தனைகளை உற்சாகமான மனம் அனுமதிக்க மறுக்கிறது. எனவே, பொறாமை தாண்டிய அழகிய வாழ்க்கைக்கு உடலும் ஆரோக்கியமாக இருக்க வேண்டியது தேவையாகிறது.

இணையாத இரு கோடுகளாய் தான் பயணிக்கும்.

வாழ்க்கை அழகானது. போட்டி என்பது ஆரோக்கியமானது. அந்த போட்டி என்பது நம்மோடு நாமே நடத்துகின்ற போட்டியாய் இருப்பது சிறப்பானது. என்னை நான் மெருகேற்ற அந்த போட்டி உதவும். என்னோடு என்னை நானே ஒப்பிட்டுக் கொள்வேன். எனது திறமைகள் ஒன்றோடொன்று போட்டியிடும். எனது இயல்புகள் ஒன்றை ஒன்று சவால் விடுக்கும். அதில் பொறாமைக்கு இடமில்லை. ஒரு கிளை அதிகம் கனி கொடுக்கிறது என்பதற்காக மறு கிளை பொறாமைப் படாது, மரம் ஒன்றாக இருக்கும்போது. அத்தகைய சூழலில் போட்டியும் பொறாமையும் இரட்டைப் பிறவிகளாய் இருக்காது, இணையாத இரு கோடுகளாய் தான் பயணிக்கும்.

கடைசியாக, வாழ்க்கை என்பது எதை நாம் பெற்றுக் கொண்டோம் என்பதை வைத்து அளவிடப்படுவதில்லை. எதை நாம் விட்டுச் செல்கிறோம் என்பதை வைத்தே அளவிடப்படும். தனக்காய் சேர்த்துக் கொள்வதிலல்ல, பிறருக்காய் செலவழிப்பதில் தான் உண்மையான வாழ்வின் ஆனந்தம் நிரம்பியிருக்கும். அப்படி பிறருக்காய் கொடுப்பதில் போட்டி போடுவோம்.பிறரை வாழவைப்பதில் போட்டி போடுவோம். பிறரை ஆனந்தமாய் வைத்திருக்க போட்டி போடுவோம். அப்போது நமது வாழ்க்கை ஆனந்தமாய் மாறும்.



# வாசகனாய் வாழ்த்துகின்றேன்

பொன்.புத்திசிகாமணி.யேர்மனி.





மு.க.சு சிவகுமாரன்

பொன்.புத்திசிகாமணி.யேர்மனி.

பல கலை வித்தகன்.!
கடின உழைப்பின் உயரம்!
வெள்ளி விழாக் கண்ட "வெற்றி மணி"
தந்த கலாநிதி திரு மு.க.சு சிவகுமாரன் அவர்கள்!

தாயகத்தில் குரும்பசிட்டியில் பிறந்து படித்துப் பட்டம்பெற்று ஆசிரியராகி கடமை புரிந்த வேளையில்,போர்க்காற்று இவர் பக்கமும் வீசவே யேர்மனியில் குடியேறினார்.கலை இலக்கியத்தில் பெருமளவு நாட்டம் பெற்றவர் இவர்.கலாநிதிப் பட்டத்துடன் பல விருதுகளைப் பெற்றவர்.

இவரைப்பற்றி இன்னும் நிறையவே பேசலாம்.
அந்த அளவிற்கு தகுதி படைத்த கலை மகன். பரம்பரை, பரம்பரையாக கலை இலக்கியத்தில் கைகோர்த்து நடந்து வரும் வரலாறு இவருடையது.

தொண்ணூறுகளில் இவருடன் எனக்குப் பழக்கமுண்டு.அப்போது நான் கொக்சவலாண்ட் தமிழர் ஒன்றியத்தலவராக இருந்தேன். நாங்கள் ஆரம்பித்து நடாத்தி வந்த ஐந்து பாடசாலைகளின் போட்டி நிகழ்ச்சிகளுக்கு நடுவராக இவரை அழைத்திருந்தோம்.எந்த மறுப்பும் சொல்லாது வந்து சிறப்பாக செயல் படுத்தித் தந்தவர்.



ஓவியர் கண்ணனாகவும், பத்திரிகை ஆசிரியராகவும் எனக்கு அறிமுகமாயிருந்தார்.

அறிவிருந்தும், அமைதியான சுபாவம் அவருடையது. அதனால் பார்த்தவர்களுக்கு அவரைப் பிடிக்கும்.

வண்ணத்துப்பூச்சி சஞ்சிகை நடத்திய சிறுவர் ஓவியப் போட்டியில்
நடுவர்களாக ஓவியர் கண்ணா,திருமதி கீதா ஞானகிருஷ்ணன்.
சிறுவர் அமுதம் ஆசிரியர் திரு.சின்ன இராஜேஸ்வரன்,
முன்னாள் அறுவை சஞ்சிகை ஆசிரியர்
திரு.எஸ்.லோகநாதன் ஆசிரியர் திரு.எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர். 1993

இலக்கியத்துறையில் மாத்திரமல்லாது நுண்கலைத்துறையில் அவர் ஆற்றிவரும் சிறப்பான செயற்பாடுகள் பெரும்பாலானவர்கள் அறிந்த தொன்றாகும். இத்துறையில் யேர்மனியிலும் தடம் பதித்து வருபவர். நுண்கலைப் பட்டதாரி இவர்.
நவீன யுகத்தில் எவ்வாறு பத்திரிகையை வெளிக்கொண்டு வரவேண்டும் என்கிற யுக்தியை அறிந்து ,அதன் பிரகாரம் வடிவமைத்து அநேக வாசகர்களைத் தன தாக்கிக் கொண்டவர்.தற்காலத்தில் ,முன் பக்கக்கவர்ச்சியே அதனை எடுத்துப் பார்க்கவைக்கும் என்கிற உண்மையை நடைமுறையில் செயல்படுத்தி அதில் வெற்றியும் கண்டவர்.இவரால் எழுத்தாளராக அறிமுகமாகி இருக்கும் புதியவர்கள் அநேகம்.

பார்த்தவர்கள் கையில் எடுத்துப் புரட்டிப் பார்க்கும் போது தரம் மிக்க ஆக்கங்களைப் பார்த்து பிரமிக்கிறார்கள்.புதிய எழுத்தாளர்களின் அறிமுகம் அவர்களால் கிடைக்கும் நவீன இலக்கியங்கள்.பத்திரிகையை மேலும் வளம்படுத்தி வருவதைக்காணலாம்.

உலகில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் "வெற்றி மணி"யின் ஓசையை படிப்படியாக ஒலிக்க வைத்துக் கொண்டு வருபவர்.
தந்தையால் வெளிக்கொணர்ந்த சஞ்சிகையை தன் கையில் எடுத்து இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்புற வெளிக்கொணர்ந்து விழா எடுக்கும் இவரின் கடின உழைப்பை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.
காலத்தைப் பொன்போல் கருத்தில் கொண்டு கலை இலக்கிய வளர்ச்சியுடன், தாயகத்தில் மாணவர் கல்விக்கும் முன்னேற்றத்திற்கும் முடிந்தவரை உதவி வருபவர்.சிறந்த சமூக சேவையாளன்.

இவரால் வெளியீடு செய்திருக்கும் பதிப்புகள் பல.
அமைதியான சிறந்த நகைச்சுவையாளன்,நகைச்சுவையை விரும்பி ரசிப்பவர்.இவரால் எடுக்கப்படும் இவரது விழாக்களில் புதுமை இருக்கும்.நிகழ்வுகளில் சுவை இருக்கும்."விருதும்,விருந்தும்" என்று இவர் நடாத்திய விழா ஒன்றில் நானும் கலந்து ,விருந்துண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

பல தடவை இவரைப்பாராட்டியும் இருக்கிறேன்.கதை வசனம்,ஒளிப்பதிவு, இயக்குனர் என்று இவருக்கு இன்னொரு பக்கமும் உண்டு. தான் எவ்வாறோ!தனது பிள்ளைகளையும் அதற்குள் புகுத்தி அவர்கள் மூலமும் பெருமை சேர்த்து வருபவர்.இவர் மனைவியும் இவருக்கு உதவிகளைச் செய்து ஊக்கப் படுத்தி வருகிறார்.
தந்தையும்,தாயும் ஆசிரியர்கள் என்பதால் அவர்கள் சென்ற பிரதே சங்களுக்குச் சென்று அந்தந்த பிரதேசங்களோடும், அங்கு வாழ்ந்த மக்களோடும் இன்றும் வாழ்ந்து வருபவர்.

இந்தப் பிரதேசங்களில் வன்னி மண்ணும் ஒன்று.நான் வன்னியைச் சேர்ந்தவன் என்பதால் என்னுடன் உரையாடத் தவறுவதில்லை."காதலியார் சம்மளங் குளத்திற்குப் போயிருக்கிறீர்களா?
ஆம் போயிருக்கிறேன்.ஒட்டு சுட்டானில் இருந்து நெடுங்கேணி செல்லும் பாதையில் இரண்டு மையில் வலப்பக்கமாகப் போகவேண்டும் என்றேன்.

"அங்கே சின்னவயதில் அப்பா படிப்பிச்சவர். எங்கட குவாட்டஸ் வயலுக்கு நடுவில் இருந்தது. வயல் வரப்பால் போகும் போது, இரண்டு பக்கமும் செந்நெல் விளைந்து முறுகிக் கிடக்கும்.பாலும்,தயிரும்,தேனும் என்று வளம் நிறைந்த பூமி.பண்டாரவன்னியனின் காதலி குருவிச்சை நாச்சியார் இங்குதான் இருந்ததாகச் சொல்லுவார்கள்.

அதைவிட எங்களுக்குச்சொந்தமான அச்சகம் ஒன்று தண்ணீரூற்றில் இருந்தது என்றார்"எனக்குத்தெரியும் மாங்குளம் வீதியில் இருந்தது.நான் இரண்டு தடவைக்கு மேல் நோட்டீஸ் அடிக்கப் போயிருக்கிறேன்."சக்தி அச்சகம் "என்று பெயர். அச்சு இயந்திரத்தை முதன் முதலில் அங்குதான் பார்த்தேன் என்றேன்.இங்கெல்லாம் நான் வாழ்ந்திருக்கிறேன். என்பார்.

தமிழ் உலகத்திற்கு இவர்கள் வழங்கி வரும்.சேவையும் உழைப்பும் மிகப்பெரியது. சிலர் தப்பாகப் பேசியதையும் நான் கேட்டிருக்கிறேன். "நல்ல உழைப்பு மனுசனுக்கு"இதையெல்லாம் பொருட்படுத்தாது. அவற்றை உரமாக்கி இரவிரவாக கண்விழித்து பத்திரிகையை வடிவமைத்து.,

அதனை வாசகர்களிடம் சேர்க்க தூக்கிக்கொண்டு கடைகடையாகத்திரிஞ்சு சேர்ப்பிக்கின்ற கஸ்ரம்.அவருக்குத்தான் தெரியும்.
சில ஆண்டுகளுக்குப் பின் நடைபெறும்,வெற்றிமணி விழாக்களில் எம்மால் பாராட்டாக அவருக்குக் கிடைக்கிறது. இதுவே இவருக்குக் கிடைக்கும் அதிகூடிய வெகுமதியாகும்.
அண்மையில் பிரமாண்டம் கண்ட இவரது "வெற்றிமணி"வெள்ளி விழா மேலும் ஒரு மைல் கல்லாகும்.அவர் உற்சாகத்துடன் வீறு நடைபோடுவார்.அதில் எந்த சந்தேகமும் இல்லை .இவ்வேளை நாமும் வாழ்த்துவோம்.








நெடுந்தீவு முகிலனின்




லட்சியம் இல்லாத வாழ்க்கை வாழ்க்கையே இல்லை.
ஏதோ ஒரு இலக்கு குறிக்கோளாக இருக்க வேண்டும்.
அதை நோக்கிய பயணத்தில் தான் வாழ்க்கையின்
இனிமை இருக்கிறது.
முடிவிடம் எது என்று தீர்மானித்து விட்டாலே போதும்...
அதற்கான பாதையை இலகுவாக கண்டுபிடிக்கலாம்.

இடையூறுகள் இல்லையென்றால் போராட முடியாது.
போராட்டம் என்பது இரத்தம் சிந்துவது மட்டுமல்ல...
வியர்வை துளிகளிலும் தங்கியிருக்கிறது.

கண்ணீர் துளிகளை நம்பி விடாதே
அது உன்னை கோழை ஆகிவிடும்.
விட்ட தவறுகளை மறந்து விடக்கூடாது.
அதனை சீக்கிரம் திருத்திக் கொள்ள வேண்டும்
சுய பரிசீலனை என்பது !
எல்லாவற்றுக்கும் உன்னை நீ தயார்படுத்துவது.

இலக்கை நோக்கி நீ புறப்பட ஆரம்பித்தால்...
உன்னை யாராலும் இடைமறித்து விட முடியாது.

வலிகளை தந்து கொண்டே இருக்கும் ஒரு கொடிய நோய்
மறக்க முடியாத நினைவுகள்.
அது உங்களை உள்ளே உருக்குவது வெளியே தெரியாது.

முகத்தின் புன்னகையை வைத்து
யாரின் சந்தோஷத்தை கணக்கிட கூடாது.
சிலருக்கு நிம்மதியை கூட
கண்ணீர் உருவாக்கி விடுகிறது.
இதற்கான நிரந்தர தீர்வு என்பது துயரத்தைத் தந்த
அந்த உறவை மறந்து விடுவதுதான்!

உண்மையான அன்பை வெளிப்படுத்தியவர்களுக்கு
ஞாபகங்களை அழிப்பது அவ்வளவு சுலபமானது அல்ல

எவராலும் கடந்த காலங்களை
மீட்டிப் பார்க்க முடியாமல் இருக்க முடியாது.

ஆனால் இதற்கு ஒரு வழி இருக்கிறது.
நாட்களை வீணடிக்காமல் இன்னொரு உறவை தேடுவது
- அதற்காக அவசரப்படக்கூடாது.
இதுவரை ஏமாற்றப்பட்டதற்கான காரணங்களை
கண்டறியுங்கள்.
சந்தேகங்களை முகத்துக்கு நேரே கேளுங்கள்
கண்ணைப் பார்த்துப் பேசுங்கள்.
அனுபவம்தான் நல்ல நண்பன்
அவனால் உங்களை சீர்திருத்த முடியும்.
உங்களை ஏமாற்றியவரே இங்கு அழகான வாழ்க்கையை வாழ்கிறார்.
உங்களால் முடியாதா..?
மாற்றத்தின் மகத்துவம்
கொடிய நினைவுகளை மறப்பது தான் !




வெற்றிமணி வெள்ளிவிழா அரங்கில் 15.09.2019 இடம்பெற்ற வூப்பெற்றால் ஈஸ்வரா சலங்கை ஒலி நாட்டியாலயம், மாணவர்களது ஒரு நடனத்தோற்றம்.



# குப்பையும் அவரவர் கருத்துக்களும்



ஏலையா க.முருகதாசன்

குப்பை என்றவுடன் தமிழருக்கு உடனடியாக ஞாபகம் வருவது. வீடுகளிலும் வீட்டு வளவுகளிலும் தேவையற்றவையென கூட்டி எடுத்து வளவின் ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் சுத்திவர ஓலைகளால் கூடுகட்டி அதற்குள் போட்டு வைக்கும் குப்பையைத்தான்.இலங்கைத்தமிழரிடத்தில் பேச்சு வழக்காகவும் வட்டார வழக்காகவும் குப்பைக்குச் சமனான சொல்லாக இருந்து வருகின்ற இன்னொரு சொல் கஞ்சல் என்ற சொல்லுமாகும்.

தமிழர் சமூகத்தைக் கடந்து உலக மக்களின் அன்றாட வாழ்க்கையாயினும் சரி அல்லது அவர்களோடு தொடர்புடைய பொருட்களாயினும் சரி தேவை யற்றவை என வரும் போது அவை குப்பை கஞ்சல் எனப் பெயர் கொண்டு அவை வேண்டற்ற பொருட்களாகிவிடுகின்றன.

மனிதர்களால் தேவையற்ற என ஒதுக்கப்பட்டவை நவீனத்துவ உலகினால் தேவையானவை என உருமாறி தேவையான பொருளாக மாறியுள்ளன.

எனவே குப்பை என்று எதையுமே ஒதுக்கவிட முடியாது.அனைத்து உலகளாவிய மக்களின் வாழ்வு உணவோடும் அந்த உணவைத் தருகின்ற விவசாயத்தோடும் பின்னிப் பிணைந்திருப்பதை தவிர்க்கவோ நீக்கவோ முடியாது.உயிர் வாழ்தலுக்கு விவசாயம் இன்றியமையாதது.பயிர்களுக்கு உணவாவது குப்பைகளும் கஞ்சல்களுமேயாகும்.

விவசாயத்திற்கு மனிதர்களால் குப்பை கஞ்சல் என்று ஒதுக்கிவிடப்படும் இலைகுளைகளும்,வீட்டுக் கஞ்சல்களும் ஆடு மாடுகள் பறவையினங்களின் கழிவுபப்பொருட்கள் எனவும் மனிதர்களின் மலம் சிறுநீரு போன்றவைகூட நவீன இயந்திரங்களினால் வடித்தெடுக்கப்பட்டு பலபடிமுறை சுத்தகிரிப்புக்குப் பின் விவசாயத்திற்கு பன்படுத்தப்படுகின்றன.

எனவே குப்பை என்ற பொதுச் சொல் மனிதர்களினால் தேவையற்றவை என கழிவுப் பொருட்களாக ஒதுக்கப்படுபவை எனச் சுட்டி நிற்பவை குப்பைகளே என நாம் நினைக்கிறோம்.ஆனால் அவை தேவையானவையே.

அதே போல் அது குப்பை இது குப்பை என நூல்களையும், பத்திரிகை களையும், சஞ்சிகைகளையும், ஆக்கங்களையும், தொலைக்காட்சி களையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் ஒதுக்கிவிடும் நிலையையும் பார்க்க் கூடியதாகவிருக்கின்றது.

ஒவ்வொரு எழுத்தாளனும் அல்லது ஒவ்வொரு வாசகனும் ஏதோ ஒருவிதத்தில் தனக்கான ஒரு பார்வையைவைத்துக் கொண்டே இன்னொரு எழுத்தாளனுடைய ஆக்கங்களையோ நூல்களையோ விமர்ச்சிக்கிறான். சிலவேளைகளில் ஒன்றுக்கும் உதவாத குப்பையென்று சொல்லி விடுவார்கள்.அதே போல மேடை நிகழ்ச்சிகளாகட்டும் தொலைக்காட்சி களாகட்டும் அவற்றைக் குப்பையென்று சொல்பவர்களும் உண்டு. ஆகா இதுவல்லவா உண்மையான வரலாறு என்று விதந்த புகழ்துரைக்கப்படும் வரலாற்று நூல்களைக்கூட ஒட்டுமொத்த வரலாற்று நூலாசிரிய உலகமும் ஏற்றுக் கொள்வதில்லை.கடுமையாக கண்டித்து விமர்சிக்கப்படுவதும் உண்டு, குப்பை என்ற சொல்லாடல் மூலம் நிராகரித்துவிடுவதும் உண்டு.பெரும் இதிகாச நூல்களும் சரித்திர இலக்கிய நூல்களும்கூட பொய் புனைந்த குப்பை என விமர்சிக்கப்படுகின்றன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக்கூட ஆகா அருமையான நிகழ்ச்சி என ஒரு புறத்தினர் மகிழ்ந்து கொண்டாட, இன்னொரு புறத்தினர் அதுவெல்லாம் ஒரு நிகழ்ச்சியா எனக் புறக்கணித்து குப்பை என ஒதுக்குவதும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றது.

மேடை நிகழ்ச்சிகளைக்கூட பலர் இது ஒரு தரமான நிகழ்ச்சியா என ஒதுக்க, சிலரோ ஆகா அற்புதம் எனப் பாராட்டுபவர்களும் உண்டு.
மக்கள் அனைவரும் அவர்களோடு சூழ்ந்து நிற்கும் அனைத்து கலை இலக்கியச் செயல்பாடுகளாக இருக்கட்டும்.சமூகம், பொருளாதாரம், அரசியல் என இன்னோரென்ன கட்டமைப்புகளாக இருக்கட்டும் ஒட்டுமொத்தமாக அவற்றை ஏற்றுக் கொண்டது இல்லை.ஒரு சாரார் ஒன்றுக்குமே பிரயோசனமற்ற குப்பை என்று ஒதுக்கும் போது இன்னொரு சாரார் அவற்றை ஏற்றுக் கொள்வார்கள் அங்கீகரிப்பார்கள். இதுதான் உலக இயல்பு. குப்பை என்று எதுவுமே இல்லை.




# வெள்ளையராய் மாற

# ஆசை ஆசை ஆசை







எனது முழங்கால் உடைந்ததால், மருத்துவரான எனது நண்பி எனக்காக தனது மருத்துவமனையில் உள்ள MRI பரிசோதனை நிலையத்தில் ஒரு Appointment எடுத்துக் கொடுத்தார். ஜெர்மனிய சுகாதார கட்டமைப்பின் சீர்கேட்டால் இந்த நண்பி இல்லாவிடின், உடைந்த முழங்காலுடன் 2மாதம் MRI SCAN எடுக்கும் வரை காத்திருந்திருக்க வேண்டும். இவரை அறிந்ததால், இவர் பணிபுரியும் மருத்துவமனையில், விபத்து நடந்த அடுத்த நாளே MRI பரிசோதனை செய்யமுடிந்ததாக இருந்தது. எனது நண்பியின் அழகான தமிழ்ப்பெயர் „சிந்துஜா“, ஆனால் இவர் என்னை வரவேற்புநிலையத்தில் Cynthia அனுப்பியதாகச் சொல்லும்படி சொன்னார். ஏன் இந்தப் பெயர் மாற்றம் என்று MRI-SCAN Tube (குழாயுக்குள்) 15நிமிடம் யோசித்தேன்.

வெள்ளையர்களுக்கு சிந்துஜாவில் வரும் „ஜ“ சொல்லக் கடினம் என்பதால், சிந்த்யா என உச்சரிப்பதை தான் அனுசரிப்பதாக சொன்னார், சிந்துஜா. „எனது பெயரில் வரும் எழுத்துக்களை பார்த்தாலே, இவர்களுக்கு தலை சுத்துகிறது“ என விளங்கப்படுத்தினார்.

புலம்பெயர்ந்த (இளையோர்கள்) மேலாதிக்க இனங்களின் சௌகரியத்திற்காய் தமது பெயர்களை மாற்றிக்கொள்வதற்கு ஓரிரண்டு எடுத்துக்காட்டுக்கள் இல்லை. ஒருவிதத்தில் பல இளைஞர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள நடை, உடை, பாவனை என்பவற்றை வெள்ளை இனக்கலாச்சாரித்திற்கு எற்ப மாற்றிக்கொள்வது சாதரணம் ஆகிவிடுகிறது. „வெளிநாட்டவர்கள் வேலைக்குப்போகாது எமது அரசாங்கப் பணத்தை சுரண்டுபவர்கள்!“ எனச் சொல்லும் வாயாலேயே „வெளி நாட்டவர்கள் எமது வேலைவாய்ப்புக்களைப் பிடுங்குகிறார்கள்“ எனத் திட்டும் ஜெர்மனியர் களிடையே, குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்கு பொருந்துபவர்களாக இனமறியப் படாமல் இருக்க எடுக்கும் முயற்சிகள் இவை. முக்கியமாக வெளிநாட்டு இனத்தவராக இனங்காணப்படக்கூடாது என்பது பல இளையவர்களினுள் ஊறிப்போன கொள்கை. பிரபல்யமான எடுத்துக்காட்டு ஒன்றின் வழியே, இதை விளங்கிக்கொள்ளலாம்.




அமெரிக்காவின் முன்நாள் First Lady Michelle Obama தனது பதவிக் காலத்தின் போது, straighten பண்ணப் பட்ட முடியுடன், மிக பவ்வியமான நிறங்களிலேயே ஆடை அணிந்தார். இவரது பாவனை, ஒரு போதும் குறிப்பிடப் படத்தக்கதாக இருந்ததில்லை. பேசும்போது கறுப்பு மக்களின் Slang, அதாவது பேச்சுவழக்கு மொழிவரவில்லை. பதவிக்காலம் முடிந்த சிறிய காலப்பொழுதில், உண்மையான இவரது பேச்சு வழக்கு ஒலித்தது.

உடைகளின் நிறங்களும் மாறிக்கொண்டன. முதலில் தான் வளர்ந்த கறுப்பு சுற்றாடலை குறிப்பிடாத இவர், Chicago ன் South-Side இல் பிறந்து

வளர்ந்ததை, வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறிய நாள்தொடங்கி எமக்கு நினைவூட்ட மறந்ததில்லை. தனது சுயசரிதையின் ஒரு வெளியீட்டுவிழாவில் மஞ்சள்நிற சட்டையொன்றுடன், மினுங்கும், துடைவரை போகும் Bootsயை அணிந்திருந்தார் முன்னாள் First Lady. பதவிக்காலத்தில், இப்படித் துணிவான ஆடைத்தெரிவுகளை இவர் செய்திருக்கவில்லை. இந்த புத்தகவெளியீடுகளின் கடைசி விழாவில், தனது இயற்கையான Afro-முடியைக் காட்டியது, தன்னை ஒரு கறுப்புப் பெண்ணாக நிறுவுவதின் உச்சக்கட்டம்.

இனங்களிடையே சர்ச்சைகள் மிகத் தீவிரமாக இருக்கும் அமெரிக்காவில், இவரது (கறுப்பு) நடை, உடை, பாவனை மூலம் கலவரங்களை எழுப்பக்கூடாது என்று அவற்றை வெள்ளை மாளிகை இருட்டடிப்புச் செய்தது ஒரு நிச்சய விளம்பர சூழ்ச்சி.


ஏனெனில், வெள்ளை மேலாதிக்கக்கலாச்சாரம் வகுத்த கலாச்சாரங்களும், நாகரீகங்களுமே மேற்கத்தேய நாடுகள் தொடங்கி பல கீழத்தேச நாடுகள்வரை தகுதியானவையாக விளங்குகின்றன.



ராம் பரமானந்தன்

பள்ளிக்காலம் தொடங்கி இன்றுவரை, நான் என்மேல் உணவு மணங்கள் வராமல் இருப்பதில் மிகக் கவனமாக இருப்பேன். நான் எங்கு உணவுகொண்டு போனாலும், அதில் தமிழ்மணங்கள் இருக்காமல், ஒரு காலத்தில் மிக உன்னிப்பாக கவனம் எடுத்தேன்.

எனது உணவின் „நாற்றத்தினால்“ நாள் முழுதும் உண்ணாது இருந்த ஞாபகங்கள், எனக்கு மட்டுமல்ல, பல தமிழ் இளைஞர்களிடையேயும் இருக்கும். நான் ஜெர்மன் மொழியையோ, பிரெஞ்சு மொழியையோ, ஹிந்தியையோ, நொஸ்க்கையோ பழகும்போது, ஜெர்மன் நாக்கு பேசினால் அதை அனுசரித்து, தமிழ் உச்சரிப்புக்கள் வந்தால் மிகவும் அவமானமாக நினைத்தேன். என் இனத்தையோ வேறு ஜெர்மன் அல்லாத இனங்களை ஜெர்மனியர்கள் இனவாதக் கேலி செய்தால் நானும் சிரித்து அதை அனுசரித்துச்சென்றேன்.



தொடர்ச்சி 26 ம் பக்கம்



15 ம் பக்கத் தொடர்ச்சி



சீரடி விமானநிலையம்

சீரடி கிராமம் செவ்வந்திப்பூக்களின் தோட்டம். அதனை வாகனங்கள் முதல் கடை வாசல் வரை காணலாம். கோவில் சூழல் மிகவும் சுத்தமாகப் பேணப்படுகின்றது. ஒவ்வொருவரும் அதில் மிகுந்த கவனம் எடுக்கின்றனர். வழிபாடு என்பது இருகைகள் கூப்பி வணங்குவதுமட்டுமல்ல அந்த இருகைகள் வழிபாட்டின் பின் என் செய்கின்றன என்பதிலும் வழிபாடு தொடர்கிறது. ஆலய நிர்வாகம் மக்கள் விரைவாகச் சென்று தரிசனம்பெற பிரத்தியேகப்பாஸ் வழங்கப்படுகிறது. 200 இந்தியன் ரூபாய்க்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக விரைவாகச் செல்லும் பாஸ்க்களையும் வழங்குகிறது. இது காலை 6.00 மணிக்குபின்னே நடைமுறையில் உள்ளது. விசேட தினங்களில் அதிகாலை 4.30 மணிக்கு பூசைகளுக்கு கிடையாது. விரும்பினால் சாதரண வரிசையில் நிற்கவேண்டும்.

சீரடி பாபா கோவிலைத் தவிர அதனைச்சுற்றி அமைந்துள்ள இடங்கள் எல்லாம் பாபா பெயரில் நடைபெறும் வர்த்தகமாகவே தெரிகிறது. சில நல்லவற்றை பார்க்கும்போது நாமும் ஏன் இப்படி ஒன்று செய்யமுடியாது என்று தோன்றுவது இயல்பு. ஈழத்தமிழர்கள் சைவமாகட்டும், தமிழாகட்டும் அதற்கு கொடுக்கும் கௌரவம் தனித்துவமானது. நம்மவர்கள் மத்தியிலும் பல பெரியவர்கள் ஞானிகள் வாழ்ந்து சென்று உள்ளனர். யோகர்சுவாமிகள் அவர் எத்துணை ஞானம் பெற்றவர். இவர்களை நாம் மறக்கமுடியாது. காசிக்குபோய் காசி நாதரைக்கண்டேன் என் நெஞ்சுக்குள் என்றார். எதனையும் பகுத்து அறிந்து செய்பவர்கள் வாழ்ந்த மண் எம் தாய் மண். இன்று முகப்புத்தகம் வட்சப் என தொழில் நுட்பம் எமது மண்ணின் பண்பாடுகளின் ஆணிவேரை உலுப்புகின்றது.
சீரடி ஒரு படிப்பினையைத் தந்தது. பாபாவின் கோவில் சூழல் அழகு. கட்டுப்பாடுகளை கனிவுடன் நடைமுறைப்படுத்தும் பண்பு. எனக்குத்தான் தெரியும் என்று இல்லாமல் தெரிந்ததை மட்டும் சொல்லும் மக்கள்(கோவிலுக்குள்)

மனதை மட்டுமல்ல உலகையும் மாசுபடுதும் பொருட்கள் தெருவில் வீசக்கூடாது. (பொலித்தீன் பாக்) முதலாவது தடவை மீறினால் 5.000 இரண்டாவது தடவை மீறினால் 10,000 மூன்றாம் தடவை மீறினால் 25,000. அது மட்டுமல்ல 3 மாத சிறை.

பி.குறிப்பு
மாலை 6 மணிக்கும் 9.00 மணிக்கும் இடையில் பாபா தெருவலம் வருவார் என அங்கு கூறப்பட்டது. 4 மணிநேரம் நின்று உள்ளே மிக அருகில் சென்று ஆராதனைகளைப் பாரத்தோம். அது போதும் என்ற திருப்தியுடன் தங்கியருந்த Hotel க்கு திரும்பிக்கொண்டு இருந்தேன். அப்போது Hotel க்கு சற்று தொலைவில் ஆரம்பமாகிய ஊர்வலம் தற்போது Hotel வாசலை நெருங்கியது. பாபா தரிசனம் போதும் என்று திரும்பினாலும் பாபா என்னைத்தேடி வருகிறார் பார்த்தீர்களா? என இதனை அற்புதமாக்க என் மனம் உடன்படவில்லை. கடவுள் எமக்கு அளித்த வாழ்வே அற்புதமானது அல்லவா! ஒவ்வொரு கணமும் சிறப்பானது, அற்புதமானதே!

## வெள்ளையராக மாற ஆசை

25ம் பக்கத் தொடர்ச்சி

ஒருவிதத்தில் வெள்ளையர்கள் என்னை அவர்களில் ஒருத்தனாக ஏற்றுக்கொள்ள நான் செய்யவேண்டிய நேர்த்திகள் இவையென எண்ணிக்கொண்டேன்.




எமது பெற்றோரும் கூட, மேலாதிக்க இனத்திற்கு எவ்விதத்திலும் குறைந்திடக்கூடாது என்று பணவசதிகளைத் தமை வருத்திப் பெற்றுத் தருகிறார்கள். கலாச்சாரக்கட்டாயங்கள் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். மேலும் சில பெற்றோர்கள் தமிழையும், தமிழ்க்கலாச்சாரத்தையும், அதை சேர்ந்தோரையும் தவிர்த்துக்கொள்வதால் சிறார்களுக்கு சிறந்த ஜெர்மன் மொழியாற்றலும், ஜெர்மன் வாழ்வும் கிடைத்திடும் என நம்புகிறார்கள். ஜெர்மன் வாழ்வு என்றால் என்ன? அதில் சிறந்தது என்ன? என்று MRI-குழாயினுள் எனக்குள் சர்ச்சைகள்.

இச்சர்ச்சைக்கு உட்பட்டவர்களின் கொள்கை, வெள்ளை மனிதராக இனங் காணப்படுவதா? அல்லது „இனம்“ எனும் கூற்றை முழுதாக முறைகேடு செய்வதா என்பது மிக உயிர்ப்புள்ள விவாதம். ஆனால், „உண்மையில் நீ எங்கிருந்து வருகிறாய்“ எனும் வேதனையான கேள்வி வெள்ளையர்களை அண்டவிடுதில்லை. வெள்ளையர்களைக் கண்டால், யாரும் பயம்கொள்வ தில்லை. ஆகவே இன அடையாளத்தைப் புறக்கணிப்பதால், குறிப்பிட்ட அளவு வெள்ளையாவது நிச்சையமான விளைவு.

ஜெனனி „Jenny“ ஆவதும், Mohammed, Moe ஆவதும் இவர்களது தனிப்பட்ட பிரச்சனையில்லாமல், காலாகாலமாக உள்ளூற வைக்கப்பட்ட தாழ்வுமனப்பாங்கின் விளைவு

இன்று எவரேனும் இனவாதமாக இருக்ககூடிய ஒரு நகைச்சுவையை சொன்னால், „நானும் வெளிநாட்டவன் தானே?, நீ சொல்வது தவறு!“ என்று எச்சரித்தால் „ஆனால் நீ அவர்களைப்போலல்ல!“ என்று சொல்வார்கள். எனது வெள்ளைத்தனத்தை மிக பிரசித்தியாக மேடையேற்றியதின் விளைவோ இது? MRI SCAN பரிசோதனை முடிந்து, மீண்டும் பேருந்தில் ஏற, சகபிரயாணிகள் தமது கைப்பைகளை இறுக்கிப்பிடிக்க, நான் போட்ட நாடகம் கேலிக்கூத்தானது.

(தனிப்பட்டவர்களை பாதுக்காக்க உண்மைப்பெயர்கள் மாற்றப்பட்டன.)




# சொல்லும் செயலும் ஒன்றாக வேண்டும்





கௌசி

வார்த்தைக்குள் அரிதாரம் பூசி, அலங்காரம் போட்டு அற்புதமாக யாரும் பேசலாம். ஆசைகளை, எண்ணங்களை அடுக்கி வைத்து நடைமுறைப்படுத்த முயற்சியின்றி மழுங்கிப் போகலாம். பிறர் முயற்சியைப் பார்த்து கொட்டாவி விடலாம். சொல்வதற்கு பலரால் முடியும். அதை செய்து காட்டுவதற்கு ஒரு சிலராலேயே முடிகின்றது. சொல்வது போல் நடத்திக் காட்டுதலே செயலாகப்படுகின்றது. சொல்வது ஒன்று செய்வது ஒன்றாகும் பட்சத்தில் சமுகத்திடையே தவறாக அடையாளப்படுத்தப்படுவர். நாம் வாழும் உலகத்திற்கு சொல் வேண்டாம் செயலே வேண்டும்.

சொன்னதைச் செய்து காட்டிய துரியோதனன், கர்ணன் மனதில் மலையாய் உயர்ந்தான். நீ என் நண்பன் என்று கூறிய ஒரு வார்த்தைக்கு துரியோதனன் கொடுத்த மரியாதை அளவிட முடியாதது. வில்வித்தை வீரன் அர்ச்சுனனுடன் நேருக்கு நேர் நின்று போரிடக் கூடிய தகுதி பெற்ற ஒரே வீரன் கர்ணன். சபையிலே அரசகுமாரர்கள் அரசகுமாரர்களுடனேயே போரிடுவார்கள், உன் குலம் என்ன? என்று துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார் ஆகியோர் கூறிய வார்த்தைகள் கேட்டு உடைந்து போய் நின்றான் கர்ணன். நண்பன் கலங்கி நிற்கும் சமயத்தில் கைகொடுப்பவனே உண்மை நண்பன். சூரர்களுக்கும் நதிகளுக்கும் மூலம் பார்ப்பதில்லை. அசுரர்களைக் கொல்லுகின்ற அஸ்திரம் ஒரு பிராமணனுடைய எலும்பில் இருந்து வந்தது. அக்னி ஜலத்திலிருந்து வந்தது. எனவே எது எங்கிருந்து வந்தது என்பது முக்கியமல்ல. அதனுடைய வீரியமே முக்கியம். அதனால், கர்ணனுடைய வீரத்தைப் பற்றி பேசுங்கள். அவருடைய மூலத்தைப் பற்றிப் பேச யாருக்கும் உரிமையில்லை என்று கூறி, அச்சந்தர்ப்பத்திலேயே கர்ணனுக்கு அங்கத நாட்டைப் பரிசளித்து, இப்போது அங்கத நாட்டுக்கு அரசன் கர்ணன். எனவே இப்போது அரசகுமாரனுடன் போரிடும் தகுதி இவனுக்கு இருக்கிறது என்று கர்ணனை உச்சத்துக்கு உயர்த்தினான். நண்பன் என்று கூறிய வாய்ச் சொல் மட்டுமன்றி அதனை நடத்தியும் காட்டிய செயல் வீரன் துரியோதனன் ஆவான்.
இது போன்று அந்தப்புரத்திலே துரியோதனன் மனைவி பானுமதியுடன் கர்ணன் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் துரியோதனன் வரவு கண்டு பானுமதி திடீரென்று எழுந்தாள். விளையாட்டில் தோற்று விடுவாள் என்று கருதி எழுகின்றாள் என்று நினைத்த கர்ணன் அவளுடைய ஆடையைப் பிடித்து இழுத்தான். கை தவறி பானுமதி இடையிலே இருந்த மேகலையில் கை பட்டு அதில் ஒட்டியிருந்த முத்துக்கள் சிதறின. அச்சம்பவத்தைக் கண்ட துரியோதனன் எவ்வித சந்தேகமும் கொள்ளாது. சிதறிய முத்துக்களை எடுக்கவோ கோர்க்கவோ என்று கேட்கின்றான்.

“மடந்தை பொன் திருமேகலை மணிஉகவே மாசு அறத் திகழும் ஏகாந்த இடந்தனில் புரிந்தே நானயர்ந்து இருப்ப எடுக்கவோ கோர்க்கவோ”

என்றான் என வில்லிபுத்தூராழ்வார் பாடினார். நண்பன் என்று சொல்லுக்கு களங்கம் ஏற்பட கர்ணன் நடந்ததுமில்லை. நண்பன் என்று சொன்ன வார்த்தைகளை மந்திரமாக கொண்டு அது போலவே வாழ்ந்து காட்டியவன் துரியோதனன்.

தன்னுடைய தாய் குந்தி தேவிக்கு கொடுத்த சொல்லைக் காப்பாற்றிய கர்ணன் ஒரு தடவைக்கு மேல் நாகாஸ்திரத்தை செலுத்தாது, தன்னுடைய வாய்ச்சொல்லே பெரிதென மதித்து உயிர் நீத்தான்.
சொல் என்பது மந்திரம். சொல்லும் செயலும் ஒன்றானால் இவ்வுலகம் சொல்லும் உங்கள் செயல்கள். அந்தச் சொல்லில் உண்மை கலந்து வாழ்ந்தவனே அரிச்சந்திரன்.

நீ எனக்கு அரசைத் தரவில்லை என்று ஒரே ஒரு பொய் சொல் என்று கேட்டான் கௌசிகன். அதற்கு அரிச்சந்திரனும்,

“பதிஇ ழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதிஇ ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதிஇ ழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்
மதிஇ ழந்துதன் வாயிழந்(து) அருந்தவன் மறைந்தான்

“எம்முடைய அரசை இழந்து விட்டோம். சொத்து சுகங்களை இழந்து விட்டோம். மகனை இழந்து விட்டோம். இனி எங்களுக்கு ஒன்றே ஒன்று தான் இருக்கிறது என்று நினைக்கும் சொர்க்கத்தை இழந்தாலும் சொன்ன சொல்லை இழக்க மாட்டோம் என்று சொல்ல அதுகேட்ட முனிவர் கௌசிகனும் சொல்ல வார்த்தைகள் இழந்து மறைந்தார். என்று அரிச்சந்திர புராணம் கூறுகிறது. அரிச்சந்திரன் உண்மையைத் தவிர பொய் சொல்ல மாட்டேன் என்ற சொல்லுக்கு ஏற்ப செயற்படுத்திக் காட்டினான்.
என்று வாய்ச்சொல்லில் வீரம் வைத்து நேர்மைத் திறமில்லா நடிப்புச்சுதேசிகள் பற்றி பாரதி,

“நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடீ – கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி”

என்றார்.
எனவே புராணங்களும், இதிகாசங்களும், இலக்கியங்களும் போதித்த சொல்லின் வாய்மை, செயலிலும் இருக்க வேண்டும். நினைத்ததை சொல்வது மாத்திரமில்லாது நடத்தியும் காட்டுவதே வாயிலிருந்து புறப்பட்டு வரும் வார்த்தைகளுக்கு மதிப்பாகப்படுகின்றது.






# உனக்கு தெரியுமா





Krish

**நான் உங்கள் பிரபாலினி பிரபாகரன்.**

இந்த மாத இதழில் எனது 10 வருட கால நண்பர், திறமையான பாடகர், இளமையான இசையமைப்பாளர், வசீகரமான நடிகர், இசைநிகழ்ச்சிகளில் நீதிபதி, பாடல்வரிகள் எழுதும் கவிஞர் இப்படி பல பல திறமைகளை உள்ளடக்கிய ஒரு கலைஞரை உங்களுக்காக நேர்காண போகிறேன்.

திரு. விஜய் பாலகிருஷ்ணன் என்றால் அவரின் நெருங்கிய நண்பர்கள்களுக்கு தான் தெரியும். ஆனால் க்றிஷ் Krish என்றால் எல்லோருக்கும் உடனேயே புரிந்துவிடும். "வேட்டையாடு விளையாடு" உலகநாயகன் கமல்ஹாசன் அவர்கள் நடித்த திரைப்படத்தில், இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் அவர்களால் பாடகராக அறிமுகபடுத்தப்பட்டு, "மஞ்சள் வெய்யில் மாலையிலே" என்று அவர் பாடிய முதல் பாடலிலேயே Krish அவர் குரலை எல்லோர் மனதிலும் பதித்து விட்டார். அவரது இதமான குரலும் அழகிய தோற்றமும் அவரை பலரால் திரும்ப பார்க்க செய்தது. லட்சக்கணக்கான ரசிகர்கள், ரசிகைகளை உலகம் முழுவதும் ஒரே பாடலில் தன்வசப் படுத்தினார். அதை தொடர்ந்து ஜுன் போனால் யூலை காற்றே, உன்னாலே உன்னாலே, அடியே கொல்லுதே, மற்றும் A.R..ரஹ்மான் இசையில் "ஏலே" என்று பல பல பாடல்களை பாடி வெற்றிநடை போட்டார். நடிக்க வாய்ப்புகள் வந்தன, சின்ன சின்ன வேடங்களில் நடிக்கவும் செய்தார். சிங்கம் 3 திரைப்படத்தில் இவரது கதாபாத்திரம் மிகவும் பிரபலமானது. க்ரிஷ்ன் பிரபல நடிகை சங்கீதாவை காதலித்து திருமணம் செய்தார். க்ரிஷ் இன்று இசையமைப்பாளராக பணியாற்றிவருகிறார். எனது இசையமைப்பில் எனது வரிகளில் Queen Cobra album ல் "என்ன செய்தேனெனை திரும்பி பார்த்தாய்" என்று என்னுடன் ஒரு பாடலை பாடியது எனக்கு பெரும் மகிழ்ச்சி.

வணக்கம் Krish நீங்க அமெரிக்காவில் பிறந்தவரா?


வணக்கம் பிரபா, இல்லை நான் 15 வருடங்கள் அமெரிக்காவில் NEW YORK ல் வாழ்ந்திருக்கிறேன். பிறந்தது தமிழ் நாட்டில் தான், திருச்சிறாப்பள்ளியில்.

எப்படி தமிழ் திரைப்பாடல்கள் பாட வந்தீர்கள் ?

நான் நடிக்கும் வாய்ப்புக்காக சென்னை வந்திருந்த பொழுது ஒரு நண்பர் தனது ஆல்பம் ஒன்றுக்கு என்னை பாட வைத்தார். அந்த நண்பரின் நண்பர் மூலமா, அவருக்கு என் குரல் பிடித்துவிட்டதால் என்னை இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் அவர்களுக்கு அறிமுகம் செய்தார். ஒரு மிக பெரிய படத்தில், கௌதம் வாசுதேவ் இயக்கத்தில், கமல்ஹாசன் சார் நடிக்கும் படத்தில் ஹாரிஸ் ஜெயராஜ் அவர்களின் இசையில் எனக்கு பாடுவதற்கு முதல் வாய்ப்பு கிடைத்தது நானே காணாத கனவுதான். அந்த பாடல் மிகப்பெரிய வெற்றியடைந்தது எனது பெரும் அதிஷ்டம்.

நீங்க Hollywood DISNEY அனுபவம் பற்றி சொல்லுங்கள்?

நான் படிச்சது COMPUTER SCIENCE அந்த தொழில்தான் அமெரிக்காவில் செய்தேன், ஆனால் எனக்கு அந்த வேலையில் திருப்தி இருக்கவில்லை. நான் நடிப்பில் மிகவும் ஆர்வத்துடன் இருந்தேன். அமெரிக்காவில் NEW YORK FILM ACADEMYயில் நடிப்பு கற்றும்கொள்ளும்மளவு நடிப்பில் ஆர்வமிருந்தது. பாடும் திறமை கொஞ்சம் இருந்தத, பாடவும் நடிக்கவும் அங்கே கற்றுக் கொடேன். என் மனதுக்கு பிடித்ததை செய்ய விரும்பினேன். அப்பொழுதுதான் FILM ACADEMYல் சேர்ந்து நடிப்பு கற்றுக்கொண்டேன்.



பிரபாலினி பிரபாகரன்

அந்த நேரம் நான் இரண்டாவது வருடம் நடிப்பு கற்றுக்கொண்டிருந்த வருடம். அங்கே MEDIA சம்பந்தப்பட்ட படம் எடுக்கும் நிறுவனங்கள் PRODUCTION COMPANIES வருவார்கள். DISNEY அப்பொழுது Aladdin BROADWAY musical தயாரிப்பதற்காக ஒரு இந்திய தோற்றமுள்ள நடிக்ககூடிய பாடக்கூடிய ஒரு பையனை தேடிக்கொண்டிருந்தார்கள். என்னை தேர்ந் தெடுத்தார்கள். ஒரு 6 மாதங்கள் Broadwayயில் நடிக்கவும் பாடவும் வாய்ப்பு கிடைத்தது, மிகவும் அழகாண அனுபவம் நிறைந்த இனிய நாட்கள். அங்கே நிறைய கற்றுக்கொண்டேன்.

ஒரு நடிகராக இருக்க பிடிக்குமா அல்லது பாடகராக இருக்க பிடிக்குமா ?

எனக்கு அப்பொழுது நடிப்பு தான் முதலில் பிடித்திருந்தது. பாட்டு எனக்கு இப்பொழுது தொழில். என்னதான் நடிப்பில் நான் ஆர்வமாக இருந்தாலும் எனக்கு சோறு போட்டது இசைதான்.

ஒரு இசையமைப்பாளராக உங்கள் அனுபவங்கள் என்ன?

இப்பொழுது நான் இரண்டு படங்களுக்கு இசையமைப்பாளராக பணியாற்றி வருகிறேன். விரைவில் விபரங்கள் வெளிவரும். அடுத்த வருடம் இரு படங்களும் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறேன். எனது ஆல்பங்கள் என் இசையில் வெளிவந்திருக்கின்றன. இப்பொழுது SUN டிவியில் மகராசி எனும் தொடருக்கு இசையமைத்திருக்கிறேன். ஒரு பாடகனாக இருப்பதால் எப்படிபட்ட பாடல்கள் மக்களுக்கு பிடிக்கும் என்று கொஞ்சம் யூகிக்க முடிகிறது. பல ஆயிரம் பாடல்களை கேட்டு வாழும் எனக்கு பாடல்களை பற்றி ஆராய்ச்சி செய்து மக்களின் விருப்பம் என்ன என்று கண்டு பிடிப்பதே ஒரு சுவாரஸ்யமான வேலைதான். இது என் வாழ்க்கையில் புதிய அத்தியாயம். மிகவும் பிடித்திருக்கிறது.

உங்கள் காதல் கல்யாணம் எப்படி அமைந்தது? மனைவி பற்றி சொல்லுங்களேன் ?!

சங்கீதாவை நான் ஒரு ஒரு விருது வழங்கப்பட்ட விழாவில், மேடையில் தான் முதல் முறை கண்டேன். அந்த வருடத்துக்கான சிறந்த அறிமுகபாட கருக்கான விருது எனக்கு கிடைத்தது. அதை சங்கீதா தான் எனக்கு கொடுத்தார். அந்த விழா முடிந்ததின் பின்னால் ஒரு partyயில் கலந்து கொண்டேன். அங்கே சங்கீதாவும் வந்திருந்தாங்க. பேச்சுவார்த்தையில் நண்பர்களாக ஆரம்பித்தது எமது உறவு. காதலாக மலர்ந்த பின் பலதரப்பில் எதிர்ப்பு வந்தது.


எனது அப்பா அம்மா சம்மதமே தரவில்லை. அவர்களின் விருப்பமில்லாமல் தான் கல்யாணம் பண்ணி கொண்டோம். 6 மாதங்கள் பின் அப்பா அம்மா கோவம் குறைந்து எங்களிடம் வந்துவிட்டார்கள் இப்பொழுது வாழ்க்கை எங்கள் மகளுடன் அழகாக அமைதியாக நகர்கிறது. தொடர்ச்சி 30 பக்கம்







# புன்னை மரம் உன் தங்கை !




தனசேகர் பிரபாகரன்

சமூகம் தமிழ்ச்சமூகம். சங்க இலக்கியமான பரிபாடல் மாயோன் உறையும் இடங்களை பட்டியலிடுகிறது. ஆலமரத்திலும், கடம்ப மரத்திலும், ஆற்றிடை அமைந்த துருத்தியிலும், குன்றத்திலும் இன்ன பிறவிடங்களிலும் அந்த இடத்திற்கேற்ற பெயரோடு விளங்கும் மாயோனே

"ஆலமும், கடம்பும், நல் யாற்று நடுவும்,
கால் வழக்கு அறு நிலைக் குன்றமும், பிறவும்,
அவ்வவை மேவிய வேறு வேறு பெயரோய்.. "

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உலகில் வேறு எந்த இலக்கியமும் சொல்லாத மரங்களுக்கும் மக்களுக்கும் இருக்கும் ஓர் அழகான உறவை நற்றிணை சொல்கிறதென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

பொன்னுருகக் காய்ந்து மண்ணுருகப் பெய்யும் மாயப் புரட்டாசியின் இறுதி நாட்கள் அவை, யேர்மனியிலும் ஒல்லாந்திலும் இலையுதிர்காலம் தொடங்கிவிட்டது, பச்சை இலைகள் நீக்கி மஞ்சள் அணிந்து மெல்லே மரங்கள் தங்கள் பனிக்கால தவத்தை ஆரம்பிக்கப் போகின்றன இனி வரும் நாட்களில்.

புலம்பெயர்ந்து யேர்மனியில் வாழும் பல தமிழ்க் குடும்பங்கள் பேசும் தமிழால் மட்டும் தங்கள் அடையாளத்தைப் பேணவில்லை, சுற்றுப்புறத்தையும் தங்களுக்கென தனித்தன்மையுள்ளதாக மாற்றிவைத்துள்ளனர். 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலிருந்து யேர்மனியில் குடியேறி வசித்துவரும் அன்பர் ஒருவரின் வீட்டிற்கு சென்றிருந்த போது சற்றே வியந்து தான் போனேன். வீட்டின் உள்ளேயும் வெளியேயும் அழகான செடிகொடிகள். அதிலென்ன ஆச்சர்யம் என்றால் அவையெல்லாம் தமிழகத்திலேயும் ஈழத்திலேயும் வளரும் செடிகள்.

குறிப்பாக குண்டுமல்லி, துளசியென வீடே அமர்க்களப்பட்டிருக்கிறது. அந்த இல்லத்து அம்மா சொன்னார்கள் அவருக்கு வெகு நாட்களாக இம்மாதிரி ஊரில் கிடைக்கும் செடிகளை வளர்க்க வேண்டுமென்ற ஆசையாம், எப்படியோ செடிகளை வீட்டிற்குள்ளும் வெளியேயும் காலநிலைக்கு ஏற்றவாறு வைத்து கடும்பனி, காற்று இவைகளுக்கிடையே காப்பாற்றி வந்திருக்கிறார். சில செடிகளை ஊருக்குப் போனபோது எடுத்து வந்திருக்கிறார், சில செடிகள் திருவிழாக் காலங்களில் யேர்மனியிலேயே கிடைத்திருக்கிறது.

அவரை பொறுத்தவரை மல்லியும், முல்லையும், துளசியும் சொந்த ஊரின் நினைவுகளை அசைபோடவும், அப்பால் இருக்கும் நாட்டை அருகே காண்பிக்கும் கண்ணாடி போன்றவை.

தமிழருக்கு இவையெல்லாம் மரபு வழி பல ஆண்டுகளாக வந்தவை, தமிழ்ச்சமூகம் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்ட சமூகம், எப்போதுமே மரங்கள் மீதும் செடிகொடிகள் மீதும் அன்பு பாராட்டும் தன்மையினர் நாம். வீட்டிற்கொரு வாழையும், பலாவும் இருக்கும், பனைமரங்கள் நூற்றாண்டுகள் வாழ்ந்தும் பயன் விளைக்கும். கோவில்களில் மரங்களே தெய்வங்களாகவும், தெய்வங்கள் வசிக்கும் இடங்களாகவும் பார்த்த

பகல் வேளையில் காதலியை சந்திக்க காதலன் ஓர் புன்னை மரத்தடிக்கு வருகிறான் காதலியோ வெட்கப்பட்டு விலகுகிறாள். காதலனுக்கு புரியவில்லை ஏன் இப்படி அவள் வெட்கப்பட்டு ஒடுகிறாளென்று. அப்போது காதலியின் தோழி அவனிடம் வந்து சொல்கிறாள். தலைவனே சிறுவயதில் நாங்கள் எல்லாம் ஒன்றாக விளையாடிக்கொண்டிருப்போம் அப்போது உன் காதலி விளையாட்டாக புன்னங்கொட்டையை மணலில் புதைக்க சிலநாட்கள் கழித்து அது முளைத்து வந்தது. அப்போது அவளின் தாய் அவளிடம் இந்த புன்னைமரம் உனக்கு தங்கைப் போன்றவள் என்று கூற அதனை நம்பி அவளும் தான் உண்ணும் பாலையும் நெய்யையும் அதற்கும் கொடுத்து பாசத்தோடு வளர்த்து வந்தாள். அந்த மரம் அவளுக்கு தங்கை போன்றது அதன் அடியில் தான் நீ இப்போது நிற்கிறாய், தங்கையை அருகில் வைத்துக்கொண்டு அவள் எப்படி உன்னோடு நெருங்கிப் பேசுவாள் என்றாள். அதன் வரிகள்

"நும்மினும் சிறந்தது நுநுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே" (நற்றிணை 172)



இன்றைக்கும் வயலில் பயிர்களோடு பேசும் விவசாயியையும், புழக்கடை துளசியிடம் பேசும் தாய்மார்களையும் பார்க்க முடியும்.

இந்த உலகமானது நமக்கு மட்டுமானது அன்று, செடி,கொடி,பறவைகள் மற்றும் விலங்குகளென அனைவருக்குமானது. வாடிய பயிரை கண்ட போது வாடிய பெரியவர்கள் வாழ்ந்த நம் சமூகத்தின் பெருமையை அறிந்து போற்றுவோம்.




# சோஸ்ற் தமிழ் யேர்மன் கலாச்சார அமைப்பு -கலைவிழா 2019










பிரதம விருந்தினர்களாக Christine Mackensen.Stv.Bürgermeister Pfarre.Bernd Heiner Roger கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் வெற்றிமணி பிரதம ஆசிரியர் ஆகியோர் மற்றும் ஆசிரியர் ஜோச் டயாஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்..

28ம் பக்கத் தொடர்ச்சி

## உனக்கு தெரியுமா

வெளிநாடுகளில் பிறந்து வாழும் இசையில் / சினிமாவில் ஆர்வம்கொண்ட இளம் கலைஞர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன ?

நானும் வெளிநாட்டில் வாழ்ந்து பல கஷ்டங்களை தாண்டி ஒரு பாடகனானவன் என்ற விதத்தில் எனக்கு அந்த ஏக்கம், வலி, வேதனைகள் நன்றாகவே உணர முடியும். முயட்சியை மட்டும் கைவிடாதீங்க. உங்கள் மனதுக்கு தெரியும் உங்களை எது மகிழ்ச்சியாக வச்சிருக்குமென்பது. அத தவறாமல் செய்யுங்கள். சில பேரு பயங்கர திறமைசாலியா இருப்பாங்க வாய்ப்பே வராது. சிலர் சுமாரா இருப்பாங்க ஆனால் முன்னுக்கு வந்திடுவாங்க. இதுதான் வாழ்க்கை. முயற்சியை மட்டும் விடாமல் போராடுங்க. நெறய அதை நோக்கி உழையுங்க. வெளிநாட்டில் இருக்கும் பெற்றோர் நிச்சயமாக உங்கள் குழந்தைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்பது அனைத்து வேண்டுகோள். குறிப்பாக பெண்களுக்கு கலைத்துறையில் நீடிப்பது மிகவும் கஷ்டம். திருமணமாகிவிட்டால் சுய ஆசைகளை எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு குடும்பம் குழந்தை என்று பொறுப்புடன் தங்கள் லட்சியங்களை மறந்துவிடுவார்கள்.

அந்த வகையில் நான் என் தோழி பிரபா உன்னை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன். உன் லட்சியத்தை கனவுகளை தொடர்ந்து முயட்சித்து ஈழத்தின் முதல் தமிழ் பெண்ணிசையமைப்பாளராக சாதனை படைத்த நீங்கள், மேலும் பல வெற்றிகளை பெற வேண்டும். நான் பாடிய பாடல்களில் எனக்கு பிடித்த பாடல்களில் உன் இசையில் பாடிய பாடலும் அடங்கும். உன் அப்பாவின் பாடல் "உனக்கு தெரியுமா" எப்படி சாதனை படைத்ததோ அதே போல் உன் பாடல்களும் நிலைக்கும். நிலைக்க வேண்டும். வாழ்த்துக்கள்.

உங்கள் லட்சியம் ? ஒரு கலைஞனாக அளவான புகழ். என் அன்பான குடும்பத்துடன் நிம்மதியான அழகான வாழ்க்கை. வெற்றிமணி பத்திரிக்கை சென்ற மாதம் வெள்ளி விழா கொண்டாடியது தமிழ்நாட்டில் தமிழ் வாழ்வது அற்புதமல்ல உங்களைபோல பொறுப்புள்ள ஊடகங்கள் வெளிநாட்டில் தமிழ் சேவை செய்வது தான் அற்புதம். மிகவும் நன்றி வெற்றிமணி பத்திரிகைக்கு, வாழ்க உங்கள் சேவை. அன்புடன் Krish

மொழிபெயர்ப்புச் சேவை!

V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

Lise-Meitner-Str.20
45144 Essen

SJ SOUTH INDIAN FOOD
0621 33 93 53 64
SOUTH INDIAN & SRI LANKAN
RESTAURANT
G2,21-23
68159 Mannheim
Mobil:0173 68 28 990



மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
Ludwigshafen
Schulstr 7-9
67059 Ludwigshafen
Tel: 0621 545 44 276
Mannheim
S1 -11
68161 Mannheim
Tel: 0621 862 43 212
info@asian-afro.de
S.J ASIAN - AFRO STORE

# நெருங்கியவர்கள் உங்கள் பெயரை மாற்றி அழைப்பதற்கான அறிவியல் காரணங்கள்







உங்களுக்கு ஒன்று தெரியுமா? எனது அம்மா, என்னை ஒரு அறையில் இருந்துகொண்டு அழைக்கும் போது, ஒரு போதுமே உடனடியாக எனது பெயரைச் சொல்லவே மாட்டார். அதற்குப் பதிலாக எனது தம்பி மார்களின் பெயர்களை அழைத்து, அதாவது மயூரன், மிதூரன் என்று அழைத்த பின் தான் நிரோஷன் என்று என் பெயரை அழைப்பார்.

## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

அதற்கு என் அம்மாவிடம் காரணத்தை கேட்டால், உங்கள் மூன்று பேரிலும் எனக்கு அதே அளவில் பாசம் இருப்பதால் உங்கள் மூன்று பேர்களின் பெயர்களையும் அழைக்கின்றேன் என்று சொல்லிவிட்டு என் வாயை அடைத்து விடுவார். இந்த விஷயத்தை எனது அம்மாவிடம் மட்டும் இல்லை, உங்கள் குடும்பத்திலும் கூடக் கண்டிப்பாக அனுபவித்து இருப்பீர்கள். ஏன் உங்களுக்கும் கூட இப்படி பெயர்களை மாற்றி அழைக்கும் பழக்கும் இருக்கலாம், அது சரி தானே? எனவே, உங்களுக்கு நெருக்கமானவர்கள் ஏன் இப்படி பெயர்களை மாற்றி மாற்றி அழைக்கின்றார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

சிலர் நினைப்பது போல், இந்தப் பெயரை மாற்றி அழைப்பது ஒன்றும் வேண்டுமென்றே செய்யும் ஒரு செயலே கிடையாது! இதற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்கவே, ஆராய்ச்சியாளர்கள் சுமார் 1700 மக்களுடன் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டனர். இந்த ஆராய்ச்சிகளில் முக்கியமான விஷயமே யாராவது நமது பெயரை மாற்றி அழைத்தால் அது குறித்து ஆராய்ச்சியாளர்களிடம் தெரிவிக்க வேண்டியதுதான். அப்படி மாற்றி அழைக்கப்பட்ட பெயர்கள் எந்த சமூகக் குழுவினைச் சேர்ந்தது, செல்லப் பிராணிகளின் பெயர்களா அல்லது குடும்ப உறுப்பினர்களா என பல கோணங்களில் அதை அவர்கள் அறிய முயன்றனர்.

இதில் அவர்கள் கண்டறிந்த முதல் விஷயம் என்னவென்றால், மாற்றி அழைக்கப்படும் பெயர்கள் ஒரே சமூகத்தினைச் சேர்ந்தவை என்பது தான். உதாரணமாக நீங்கள் பக்கத்து வீட்டுக்காரர்களின் குழந்தைகளை மாற்றி கூறிய நிகழ்வுகளை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே இரு குழந்தைகள் இருந்தால், அவர்களின் பெயர்களை நீங்கள் அடிக்கடி மாற்றிக்கூறிய அனுபவம் இருந்திருக்கும். ஒரே குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களை பெயர் மாற்றி அழைப்பது அநேகமாக நடக்கும் நிகழ்வுகளில் ஒன்று என்று இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.
எனவே, எங்கள் வீட்டிலும் எனது அம்மா எங்கள் மூன்று பேர்களின் பெயர்களை மாற்றி மாற்றி அழைப்பதற்கும் காரணம் புரிந்துவிட்டது. சரி, இது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா? பெயர்களை மாற்றி அழைப்பதற்கு இன்னும் ஒரு காரணமும் இருக்கிறது. அது என்னவென்றால், ஒரே உச்சரிப்பு வகையில் அமையும் பெயர்களையும் மாற்றி அழைக்கவும் வாய்ப்பு அதிகமுள்ளது என்பதை அந்த ஆராய்ச்சி கூறியிருக்கின்றது.

இந்த ஆய்வுகளில் வெளிவந்த இன்னும் ஒரு உண்மை பற்றியும் கூறுகின்றேன், அது என்னவென்றால், குறைந்த வயதுடையவர்கள் தான் அதிகமாக மாற்றுப் பெயர் கூறி அழைக்கின்றனராம். அதிக வயதுடையவர்களை இவர்களுடன் ஒப்பிடும்போது குறைவான அளவே வேறு பெயர்களைக் கூறி அழைக்கின்றனர்.




எனவே அடுத்த முறை யாராவது ஒருவர் உங்களை வேறு ஒரு பெயருடன் அழைத்தால், அதை நினைத்துக் கோபப்படாமல், கொஞ்சம் பொறுமை யுடன் இருங்கள்.

சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள்? உங்களுக்குத் தெரிந்தவர்களில் யாரெல் லாம் இப்படிப் பெயர்களை மாற்றி மாற்றி அழைப்பார்கள்?

இதற்குரிய பதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிரா யத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook .com/scinirosh

---


தாய் மடியில் 09.05.1961



இறையடியில் 10.12.2018



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் யேர்மனி - டோட்மூண்ட் நகரை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் திருநாவுக்கரசு.திருநந்தகுணாளன். அவர்களின்

ஓராண்டு நினைவு அஞ்சலி

எங்கள் அன்பின் திருவுருவே
அன்பிற்கு இலக்கணமானவரே
உங்கள் திருவுருவம் மறைந்து
ஆண்டு ஒன்று ஆனதையா!
நம்ப முடியவில்லை.
தடுமாறித் தவிக்கின்றோம், உங்கள் அணைப்பிற்கும் ஆதரவிற்கும் ஏங்குகின்றோம்
உருவம் தான் மறைந்தாலும்,உங்கள் ஆத்மா எங்களுடன் வாழ்கிறது
வழி நடத்துகிறது என்ற நம்பிக்கையுடன் உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்பு
மனைவி, உதயகுமாரி ,பிள்ளைகள் திபியன்,திவாரகா,திவாசினி
மற்றும் சகோதர சகோதரிகள்

# இளையவர்கள் விரும்புவது
# வீட்டு உணவா? கடை உணவா?



றஜினா தருமராஜா

மகன் மகள் விடுமுறையில் வருகிறார்கள் என்றால் போதும் அம்மாவிற்கு. அம்மா அப்பாவையும் இருக்கவிடமாட்டா!
அவனுக்கு ஆட்டு இறச்சி என்றால் அலாதி ஆசை! அவளுக்கு நண்டுக்குழம்பு என்றால் போதும், அவர்கள் வந்தால் பின்பு நேரம் இருக்காது, இப்பவே வேண்டித்தாங்கோ நான் நேரம் உள்ளபோது வெட்டி எல்லாம் வைக்கிறேன், என்பா அம்மா.
ஆனால் அப்பாவிற்குத்தெரியும் என்ன நடக்கும் என்று. பிள்ளைகள் வருவார்கள். வந்ததும் போனைச் சாச்சில் போடுவார்கள். அம்மா ஒருவாரமாக பிள்ளைப்பைத்தியத்தில் செய்துவைத்தவற்றை எல்லாம் மேசையில் பரப்பி வைப்பா. பிள்ளைகள் நண்பர்களுடன் சந்திப்பதற்கான நேரத்தை உறுதிப்படுத்திக்கொண்டு என்ன சாப்பிடுகிறோம் என்பது கூடத்தெரியாமல் விழுங்குவார்கள். அவ்வளவுதான் வீட்டுச்சாப்பாடு.

மாலையானதும் நண்பர்களைச் சந்தித்துவிட்டு பிட்சா, கேபாப், அல்லது கொத்துரொட்டி என வயிற்றை ஆசைதீர நிரப்பிக்கொண்டு வீடு வருவார்கள்.



அம்மா இன்னும் குசினிக்குள்ளால் வெளியில் வரவில்லை. பிள்ளைகளுக்கு இரவு உணவினைத் தயார் செய்து முடித்திருப்பா. பிள்ளைகளும் அம்மா பாவம் என்று எண்ணியபடி இருவிரலால் எடுத்து உருசி பார்ப்பதுபோல் எடுத்து உண்பார்கள். கடைச் சாப்பாடு ஆரோக்கியம் அற்றதுதான். ஆனால் கேட்டதும் கிடைக்கும். பசித்ததும் புசிக்கலாம். வீட்டில் அம்மா நாளைக்குத் தோசையடா என்று சொல்வதற்கும், கடையில் ஒரு மசாலாதோசை என்றதும் மேசையில் பூவிழுந்தால்போல் வந்து விழுவதும் வித்தியாசம் அல்லவா. காத்திருக்கப்பிடியாத பருவம் இளமைப்பருவம். அது காதலாக இருந்தாலும் சரி உணவாக இருந்தாலும் சரிதான்.

ஆனால்
பிள்ளைகள் திருமணமானபின் யாரைக் கேட்டாலும் அம்மா நன்றாக சமைப்பா! என்று தானே கூறுவார்கள். ஆகவே வீட்டு உணவு தான் பிடிக்கும் என்பார்கள்.அவர்கள் தாயாக தந்தையாக மாறும்பொழுது வீட்டு உணவின் மகிமைதெரியும்.

வீட்டு உணவு அன்போடும் ஆரோக்கியத்துடனும் தயார் செய்வதல்லவா. எங்களுக்கு பிடித்த உணவு எது எது என்பதை கணமும் சிந்தித்து சிரத்தையுடன் ஆக்கிதருபவள் தாய் அல்லவா!
கடையில் உண்ணும் உணவு துரித உணவு அதாவது fastfood. இவை ஆரோக்கியம் அற்றவை. ஆனால் இன்று உலகம் வேகமாகச் சுற்றுகிறது. வேலையால் இருவரும் வந்து குசினிக்குள் போனால் காலையில் அவர்களால் விரைவாக எழுந்து வேலைக்குச்




செல்வதும் கடினம். இப்படியான சில வலுவான காரணங்களும் இருக்கவே செய்கின்றது. அத்துடன் வயதானவர்கள் இருவருக்கு சமைப்பதிலும் பார்க்க கடையில் ஒரு நேரம் வேண்டி உண்பது மலிவானது. லண்டனை எடுத்துக்கொண்டால் இடியப்பம் வீட்டில் அவிப்பது இல்லை என்றே கூறிவிடலாம். அங்கு தெருவிற்கு தெரு போட்டியுடன் பல கடைகள் உண்டு. யேர்மனியில் அப்படி அல்ல. 100 கி.மீ,150 கி.மீ சென்று 50 இடியப்பம் வாங்குவதிலும் பார்க்க அம்மா வீட்டில் அவித்துவிடுவா.

ஆனால் பலர் கடைகளில் வாங்கி உண்பார்களும் உள். நண்பர்களுடன் நேரம் செலவு செய்யும் போது அதிகமாக கடைகளுக்கு உண்ண செல்வார்கள். கடைகளில் உண்ணும் போது வெளிநாட்டு உணவுகளை தெரிந்து கொள்கிறார்கள். வித்தியாசமான உணவு வகைகளையும் அறிய முடிகிறது. வெளியில் சுவைக்காக மட்டுமே உண்ணுகிறார்கள்.

சில சமயங்களில் சில உணவு வகைகள் வீட்டில் கிடைப்பதில்லை. என்ன செய்வார்கள்? கடையில் வாங்கி உண்பார்கள். மேல் படிப்பு மற்றும் வேலை விடயம் சம்மந்தமாக தனியாகத் தங்கி வருபவர்கள் அதிகமாக வெளியில் உண்பார்கள். உண்ணும்போது உணவு சுவையாக இருந்தால் அதனைப் படம் எடுத்து நண்பர்களுக்கும் பகிர்வார்கள். இது சிறந்த விளம்பரமாகவும் உணவுச்சாலைகளுக்கு அமைகிறது.

தினமும் வெளியில் உண்பதால் உடலுக்கு ஆரோக்கியம் இல்லை ஆகவே முடிந்தவரை வீட்டு உணவை விரும்புங்கள், அதற்கு நீங்கள் ஆணாக இருந்தால் என்ன? பெண்ணாக இருந்தால் என்ன முதலில் சமைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அது நிச்சயம் ஒரு நாள் கைகொடுக்கும். அன்று தனியாக இங்கு வந்த ஆண்களை கேட்டுப்பாருங்கள் அவர்களும் அது சரிஎன்றே சொல்வார்கள்.




# திருமந்திரமும் வாழ்வியலும் 43

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரத்தில் உள்ள சமூக அறிவியல்





திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள சமூக அறிவியலைப் பார்ப்போமானால் உலகில் உள்ள மக்கள் அனைவரும் சாதி, சமய வேறுபாடற்ற ஒரு சமுதாயமாக வாழவேண்டும் என்று மனித குலத்திற்கு நல்வழி காட்டிய திருமூலநாயனாரின் உயர்ந்த சிந்தனையான, திருமந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்னும் தத்துவத்தைக் கூறும் பாடல் எண் 2104

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே."

இப்பாடலின் பொருள் "மனித குலம் முழுமையும் ஒன்றுதான், இறைவனும் ஒருவன்தான். எப்பொழுதும் நல்லதையே நினையுங்கள், எவருக்கும் நல்லதையே செய்யுங்கள் இப்படி வாழ்பவர்கள் இறவாப் புகழுடன் வாழ்வார்கள். வெட்கப்படாமல் துணிந்து நீங்கள் செல்லத்தக்க வழி வேறு இல்லை. எனவே மனத்துள்ளே சிவனை நினைத்து அவனருளுணர்வோடு பொருந்தி, தடுமாற்றம் இன்றி அவன் திருவடி நினைந்து நற்கதி அடையுங்கள்." என்பதாகும்.

இக்கருத்திற்கு பொருத்தமாக கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கணித மேதையும், சங்க காலப் புலவருமான கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் 192 ஆம் பாடலில் யாதும் ஊரே யாவரும் கேளிர் ( எல்லா ஊரும் எம் ஊர், எல்லா மக்களும் எம் உறவினர் ) என பாடியுள்ளார்.

மானிடராய்ப் பிறந்த அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய நாம் பெற்ற இன்பம் அனைவரும் பெறவேண்டும் என்பதைக் கூறும் பாடல் 85 இல்

"நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே."

இப்பாடலின் பொருள் "நான் பெற்றதான இறையருள் கருணையால் உணர்ந்தறிந்த, பேரின்ப ஞானப் பேற்றை, இவ்வுலக மக்களெல்லாம் பெற்றுய்ய வேண்டும். வானம் அளந்து நின்ற வேதவிழுப்பொருளைக் கூற நான் பெற்ற ஞானம் ஊனோடு கலந்து உணர்வோடு ஒன்றி உயிர்ப்படையச் செய்யும் வேத மந்திரம் இதுவாகும். இதை உள்ளம் பற்றி நினைந்து நினைந்து துதிக்க இறைவன் திருவருள் தானே தேடி வந்தடையும்." என்பதாகும்.

மனிதர்கள் யாவரும் நடுவு நிலைமை உடைய வாழ்க்கையை வாழவேண்டும் எனக் கூறும் பாடல் எண் 320

"நடுவு நின்றார்க்குஅன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார்நல்ல தேவரும் ஆவார்
நடுவு நின்றார்வழி நானும்நின் றேனே".

இப்பாடலின் பொருள் "நடுவு நிலைமை தவறாது அறவழியில் நிற்பவர்களுக்கே ஞானம் கிட்டுமே அல்லாமல் மற்றவர்க்கு ஞானம் பெற வழியில்லை. நடுவு நிலையில் நின்றவர்களுக்கு நரகத் துன்பமும் இல்லை. நடுநிலையாளர்கள் உயர்ந்த தேவ நிலையும் அடையப் பெறுவர். எனவே நடுநிலையாளர்கள் மேற்கொண்ட வழியையே நானும் கடைப்பிடிக்கின்றேன்" என்பதாகும்.

நடுவுநிலையே நல்ல ஞானநிலை எனக் கூறும் பாடல் எண் 321
"நடுவு நின்றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவு நின்றான்நல்ல நான்மறை ஓதி
நடுவு நின்றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவு நின்றார்நல்ல நம்பனும் ஆமே"

கரிய மேகம் போன்ற மேனி அழகுடைய திருமாலும் நடுவுநிலை தவறாது நின்றே தனது காக்கும் தொழிலைச் செய்து வருகிறான். நான்கு வேதங்களையும் ஓதித் தனது படைப்புத் தொழிலைத் தொடங்குகின்ற பிரமனும் நடுவுநிலை தவறாமலே செயல்படுகின்றான். ஞானிகளும் இந்த நடுவுநிலைமை தவறாதவர்களே. நடுவுநிலை தவறாதவர்கள் சிவ சொரூபமாகவே விளங்குவர்.

நடுவுநிலை தவறாதவன் ஞானி எனக் கூறி உலகம் நடுவுநிலை தவறாது ஒழுக வேண்டும் என்பதை கூறும் பாடல் எண் 322

"நடுவு நின்றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவு நின்றார்சிலர் தேவரு மாவர்
நடுவு நின்றார்சிலர் நம்பனு மாவர்
நடுவு நின்றாரொடு நானும்நின் றேனே"

நடுவுநிலை தவறாதிருப்பவர்கள் சிலர் ஞானிகளாவார். நடுவுநிலையில் நிற்பவர்களில் சிலர் தேவர்களும் ஆவர். நடுவுநிலை பிறழாது நடப்பவர் சிவசொரூபமே ஆவர். எனவே நானும் நடுவுநிலை தவறாதவர்களோடு சேர்ந்தவன் ஆனேன்.

ஞானத்தவம் நடுவுநிலமை எனக் கூறும் பாடல் எண் 323

"தோன்றிய எல்லாம் துடைப்பன் அவனன்றி
ஏன்று நின்றார்என்றும் ஈசன் இணையடி
மூன்று நின்றார்முதல் வன்திரு நாமத்தை
நான்று நின்றார்நடு வாகிநின் றாரே"

உலகில் தோன்றியுள்ள எல்லாவற்றையும் அழிக்க வல்லவனும் ஈசனே ஆவான். எனவே இறைவன் திருவடிகளே தமக்குத் துணை என்று ஏற்றுக் கொண்டவர்கள் இறைவன் திருப்பெயரைத் தியானித்து, அவனருளைப் பெற முயன்று நின்றார்கள். தவயோகத்தைப் பற்றியும் நின்றவர்கள் நடுவுநிலை நின்றவர்களே. (சிலர் நடுவுநிலை என்பதற்கு நாசிக்கு மேலே இரு புருவ நடுவில்-சுழுமுனையில் நிற்றல் எனவும் பொருள் கூறுவர்)







# விண்வெளியில் ஒரு சின்ன மின்மினி



விண்வெளி என்பது, அன்னையின் மடியில் படுத்து அம்புலி பார்த்த காலம் முதல் அனைவரின் மனதிலும் ஒரு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும் இன்பமான இடம் தான் இந்த விண்வெளி. ஆனால் இந்த விண்வெளியில் ஒரு ஆச்சரியமான புதுமை ஒன்று ஏற்படவுள்ளது, என்று சொன்னாலே நம்புவீர்களா? மனிதன் 1600 ஆம் ஆண்டுகளில் விண்ணைப் பார்த்தான், விண்ணில் மின்னும் பொருட்கள், மின்னாப் பொருட்கள் இருப்பதைக் கண்டான், ஆராய்ந்தான். மின்னும் பொருட்கள் நட்சத்திரம், மின்னாப் பொருட்கள் கோள்கள் என்று கண்டறிந்தான்.

2000 ஆண்டுகளில் நான் விண்ணைப் பார்த்தேன் மின்னும் பொருட்கள் மின்னாப் பொருட்கள் கண்டேன். மின்னாப் பொருட்கள் கோள்கள், மின்னும் பொருட்கள் நட்சத்திரம் அல்லது செய்மதி என்று கற்றுக் கொண்டேன். ஆனால் 3000 ஆண்டுகளில் வானில் இன்னுமொரு பொருள் மிகையாக அதிகரிக்கவுள்ளது. அதாவது 3000க்குப் பின் உள்ள குழந்தைகள் விண்ணைப் பார்க்கும் போது விண்ணில் மின்னும் பொருட்கள், மின்னாப் பொருட்கள் இருக்கும். அவை எவை என்று ஆராய்ந்தால் மின்னும் பொருட்கள் நட்சத்திரமும், செய்மதியும். மின்னாப் பொருட்கள் கோள்களும் குவள் உலகமும் ஆகும். அது என்ன குவள் உலகம்? இதோ ஒரு புதிய பயணத்திற்குத் தயாராகுங்கள்.

மனிதன் அறிவில் விருத்தி கண்டு வருகின்றான். அதே நேரம் உயிர்வாழும் காலத்தையும் அதிகரித்து வருகின்றான். இவை இரண்டும் இயற்கைக்கு சற்று முரண்பாடாகும் வேளையில், இயற்கை சமநிலையைத் தேடி, இயற்கை அனர்த்தங்களை உண்டுபண்ணி மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருகின்றது. இதை எதிர்வுகொள்ளவே மனிதன் வேறு கிரகங்களிற்குச் சென்று வாழலாமா என்று சிந்தித்து செயல்பட்டும் வருகின்றான். ஆனால் ஒவ்வொரு கோள்களிலும் ஒவ்வொரு குறைபாடுள்ளது. பூமியில் வாழ்ந்து பழகிய மனிதனிற்கு பிற கோள்கள் குறையாக உள்ளது. இதை நிவர்த்தி செய்ய ஒரு புதிய முயற்சி செய்யவுள்ளான். எப்படித் தெரியுமா?

வளமான மண்ணில்லா நாடுகள் கடலில் கப்பல் விட்டு அதிலே வளமான மண்ணை பிற நாட்டில் இருந்து பெற்று விவசாயம் செய்து வருவது எத்தனை பெருக்குத் தெரியும்? பாலை வன நாடுகள், அணு குண்டு துளைத்த ஆசிய நாடு என்று பல நாடுகள் இந்த கடல் மேல் விவசாயம் செய்துவருகின்றது. இதேபோலத் தான் பூமி போன்றே உருளை வடிவில் பெரிய குவளை செய்து அதை சிறிது சிறிதாக பகுதி பகுதியாக விண்ணுக்கு அனுப்பி விண்ணில் ஒரு குவளை உலகை உருவாக்கி, அதை குவள் வீடு (புயடயஓல முசடி ர்ழரளந) என்று அழைப்பார்கள். உலகில் நாம் உலகிற்கு வெளியில் நடப்பது போல, அந்த குவள் உலகில் உலகிற்கு உள்ளே நாங்கள், மரம் வளர்த்து வீடு கட்டி வாழ்வோம். அதிலே பண முதலைகள் தங்கள் பரம்பரையை பரப்பவுள்ளது. இதைக் கேட்கும் போது, பார்த்தியா வெள்ளைக் காரனின் அறிவின் விருத்தி! தமிழரால் இதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்று சொல்லும் நபர்களிற்கு ஒரு சிறிய அறிவிப்பு.



சிவவினோபன்.



**கடலில் மிதக்கும் தோட்டம்**

எம் தமிழ் வரலாற்றில் விசுவாமித்திரர் என்ற முனிவர் திரிசங்கு என்ற அரசனிற்காக பூமிக்கு வெளியில் அந்தரத்தில் மிதக்கும் தனி சொர்க்க இராச்சியத்தையே செய்து கொடுத்தார் என்ற வரலாற்றை. எடுத்துக் காட்டினால். இன்று விஞ்ஞானிகள் செய்யும் கண்டுபிடிப்புக்கள் ஒன்றும் பெரிதல்ல மற்றும் புதிதல்ல என்று ஆதாரபூர்வமாக கூறலாம்.


எதிர்காலம் என்றோ அகழ்வாகும். அன்றும்,
நிகழ்காலம் ஒன்றே இடைக்கூறும்.

**வெற்றிமணி வெள்ளிவிழா மலரை வெற்றிமணியின் நடுப்பக்கத்தை அறிவியலால் அலங்கரிக்கும் எழுத்தாளர் சேவியர் அவர்களுக்கு கையளித்தவேளை**




வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களுடன் சேவியர்.


உங்கள் அனைத்து தேவைகளுக்கும்
மலிவு
திருப்தி
பாதுகாப்பு



உங்களிடம் தற்போது இருக்கும்
காப்புறுதியை நாம் இன்னும் மலிவாக
பணம் கட்ட உதவி செய்வோம்.




PERSONAL LOAN
HOUSE CREDITS
- MORGAGES
INVESTMENT FUNDS

01788482965

Srithas Murugapathmarajah

Westfalendamm 188
44141 Dortmund






# ஐரோப்பாவில் யேர்மனியில்தான் அதிகூடிய வைத்திய வசதிகள் காணப்படுகின்றன!



வ.சிவராசா

## யேர்மனிய சுகாதாரச் செய்திகள்...

பெற்றோரின் கவலையீனத்தால் 54 வீதமான குழந்தைகள், சிறுவர்களின் கண்பார்வை குறைந்து வருவதாகத் தெரியவந்துள்ளது. அதாவது சிறுவயதிலே மிக அதிகநேரம் கணனி போன்ற சமூக ஊடகங்களை அளவுக்குமீறிப் பார்க்க விடுவதால் பண்பார்வையை சிறுவயதிலேயே பலர் இழப்பதாக சுகாதாரப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

யேர்மனியில் நோயாளிகள் பலர் வைத்தியசாலைகளுக்குப் போகாமலே வைத்தியம் பார்க்கிறார்களாம். அதாவது 47 வீதமான நோயாளிகள் (Online) இணைய ஊடகங்கள் ஊடாக நோய்கள் பற்றி அறிவதும், வைத்தியர்களிடம் ஆலோசனை கேட்பதுமாக மாற்றமடைந்துள்ளது.

யேர்மனியில் பலவித நோய்களுக்குக் காரணமாகக் காணப்படுவது என்னவெனில் 70 வீதமான சிறுவர்கள் இளையோர் வயதானோர் அளவுக்குமீறிய நிறையைக் கொண்டிருப்பதுதான் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

யேர்மனியிலுள்ள வைத்தியசாலைகளில் கட்டில்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் 1 லட்சம் பேருக்கு 606 கட்டில்கள் என்ற வீதத்தில் உள்ளதாம். ஐரோப்பாவில் யேர்மனியில்தான் கூடிய வைத்திய வசதிகளும் காணப்படுகின்றது.

யேர்மனியில் 47 வீதமான மக்கள் தாம் வசிக்கும் கிராமங்களில் நகரங்களில் வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். ஏனையவர்கள் பிற நகரங்களுக்குச் சென்று வைத்திம் பார்க்கிறார்களாம்.

உடற்பருமனையும் உணவையும் குறைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் பல நோய்களை இல்லாமல் ஆக்கலாம் என வைத்தியத்துறையினர் தெரிவிக்கின்றனர். (Diäten) உடற்பருமனை குறைப்பதற்காக 60 வீதமானோர் சைவ உணவுகளை நாடியுள்ளனர். 12 வீதமான ஆண்கள் பட்டினி கிடக்கிறார்களாம். 28 வீதமான பெண்கள் நிரந்தர உணவுக்கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

(Depression) மனிதருக்கு ஏற்படும் வியாதிகளில் மனஅழுத்தமும் ஒன்றுதான். இன்றைய கணனி உலகில் அதிவேகமாக உலகமயமாக்கலுடன் ஒவ்வொருவரும் ஓடவேண்டிய சூழலில் வாழ்வு ஓடிக்கொண்டிருக்கையில் நோய்களும் பல வந்து சேருகின்றன. இந்த நோய் யேர்மனியில் தற்போது 11 வீதமான பெண்களுக்கும் 5 வீதமான ஆண்களுக்கும் காணப்படுவதாக வைத்தியத் துறையினர் அறிவித்துள்ளனர்.

யேர்மனியில் குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவடைந்து வருவதாகத் தெரியவந்துள்ளது. அதாவது 2017ம் ஆண்டில் 1.59 வீதமாகக்காணப்பட்டது 2018ம் ஆண்டில் 1.57 வீமாகக் குறைவடைந்துள்ளது. அதே வேளை குழந்தைகளின் வைத்தியச் செலவு 2.49 வீதத்திலிருந்து 2.54 வீதமாக உயர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறுநீர் கழித்தலில் பலர் அசட்டையீனம் காட்டுவதால் பல நோய்கள் வந்து சேருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ,தனால் சிலருக்குப் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களும் வந்து சேருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. யேர்மனியில் 38 வீதமான பெண்களுக்கும் 12 வீதமான ஆண்களுக்கும் இதனால் பல வியாதிகள் வந்துள்ளதாகச் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

சுற்றாடல் சூழல் விரைவாக மாசுபட்டு வருவதால் பல நோய்களும் அதிகரித்து வருவதாகத் தெரியவந்துள்ளது. இதன் பாதிப்பால் யேர்மனியில் 30 வீதமான சிறுவர்கள் குழந்தைகள் அஸ்த்மா, ஒவ்வாமை போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டிருப்பதாக சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர். இத்துடன் 80 90 வீதமான பெற்றோர் சுற்றாடலைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

யேர்மனிய அரசு அண்மையில் எடுத்த புள்ளிவிபரத்தின்படி 14 17 வயது பால்ய வயதினர் 32 வீதமான ஆண்களும் 35 வீதமான பெண்களும் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களாம். இதனால் பல பிரச்சனைகளை அரசு சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





பால்ய வயதினர்




உங்கள் அபிமான வியாபார
ஸ்தாபனங்களில் கிடைக்கும்
NEW
ARRIVAL
AGAM
Healthy and tasty Foods
அகம்
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
StaR-Impex
www.star-impex.de



# இயக்குநர் சிகரம்
# கே.பாலசந்தர்
## வாழ்வும் படைப்பும்





தமிழ்நாடு தோழமை பூபதி என பதிப்புலகில் அன்புடன் அழைக்கப்படும் திரு பூபதி அவர்கள் தமிழகத்தின் முன்னணி பதிப்பாளர்களில் ஒருவர். தோழமை, அருவி, நீர் , சோழன் படைப்பகம் போன்ற பதிப்பகங்களின் உரிமையாளர்.

தீவிர இலக்கியம் முதல் திரை வரலாறு வரை பரந்து பட்ட தளத்தில் இதுவரை சுமார் 400 புத்தகங்கள் வெளியிட்டுள்ளார்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக பதிப்பகத் துறையில் தீவிர ஆர்வம் காட்டி வரும் இவர் , இவன் ஒரு வரலாறு, மாவீரர் உரைகள் நேர்காணல் - துவங்கி எராளமான ஈழம் சார்ந்த வரலாற்றுப் பதிவுகளை பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கொண்டு வந்திருக்கிறார். கரிகாலன் எனும் புனைப் பெயரிலும் இயங்கிவரும் இவர் பல திரைப்படங்களுக்கு இணை இயக்குநராகவும் பணியாற்றியிருக்கிறார்,

இவரது வெளியீடாக வெளிவந்த உலக அளவில் இந்திய சினிமாவிற்கு பெருமை சேர்த்த இயக்குநர் சிகரம் பாலசந்தர் அவர்களின் சரித்திரம் புதிய தலைமுறையினருக்கு பாடமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த அரிய சரித்திரத்தை வெற்றிமணிக்கு தருபவர் வெற்றி மைந்தன் அவர்கள்.

**வெற்றி மைந்தன்**

## என்னால் முடியும் தம்பி

தஞ்சாவூர் மாவட்டத்தில் நல்லமாங்குடி எனும் கிராமத்தில் 1930ம் ஆண்டு ஜூலை 9ம் தியதி ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்த போது அது தமிழ்த் திரையுலக வரலாற்றில் ஒரு சகாப்தத்தை எழுதப்போகிறது என்றோ, இந்தியத் திரையுலகில் தனது சுவடை அழுத்தமாய்ப் பதிக்கப் போகிறது என்றோ யாரும் நினைத்திருக்கவில்லை. காரணம் அவருடைய பெற்றோர்.

கிராம அலுவலகத்தில் ஊழியம் செய்து வந்தவர் தான் அந்தக் குழந்தையின் தந்தை. தந்தை பெயர் கைலாசம். தாயார் காமாட்சியம்மாள். திரைப்படத் துறை கிலோ என்ன விலை என்று கேட்குமளவுக்கு தான் இவர்களுடைய திரைப்பட அறிவு இருந்தது.


பிறந்த குழந்தைக்கு பாலசந்தர் என்று பெயரிட்டார்கள். பிறந்த குழந்தை அழுதது. சிரித்தது, குப்புறப் படுத்து தலை நிமிர்ந்தது, தவழ்ந்தது, மெல்ல மெல்ல எழும்பி நின்றது, சுவர் பிடித்து நடந்தது, கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்தது. பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் வயதும் வந்தது. எந்த கட்டத்திலும் பாலசந்தர் ஒரு திரைப்பட இயக்குனராக மாறுவார் எனும் சாயல் தெரியவே இல்லை.ஊரில் இருந்த வினாயகர் கோயில் இவருடைய பிரியத்துரிய பட்டியலில் இருந்தது. அந்த கோயிலுக்கு அடிக்கடி போவார். தனியே ஒரு பாய் கூட இல்லாத அளவுக்கு சின்ன வயதில் அவர் வீட்டில் வறுமை பாய் போட்டுப் படுத்திருந்தது.

ஊருக்கு அருகே இருந்த நன்னிலம் என்னுமிடத்தில் பள்ளிப்படிப்பை எல்லோரையும் போல தான் பாலசந்தர் படித்தார். திருவாரூரிலுள்ள ஒரு பேரூராட்சியே நன்னிலம். ஆனால் பள்ளிக்கூட காலத்தில் அவருடைய கலை ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவர ஆரம்பித்தது. சின்னச் சின்ன விஷயங்களை நண்பர்கள் மத்தியில் நடித்துக் காட்டுவது அவருடைய சுவாரஸ்யமான பொழுதுபோக்காக இருந்தது.

தொடர்ச்சி 38 ம் பக்கம்







திரு.திருமதி பாலசந்தர்

இவருடைய நடிப்புக்கே இவருக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். அந்த நண்பர்களை அழைத்துக் கொண்டு சின்னச் சின்ன நாடகங்களை உருவாக்கி நடிக்கத் துவங்கினார். திண்ணை நாடகங்கள் இவருடைய கலை ஆர்வத்தைத் தட்டி எழுப்பின. இவருடைய கைவண்ணத்தில் பல திண்ணை நாடகங்கள் உருவாகின. பையனை கலக்டர் ஆக்கவேண்டும் எனும் ஆசையில் திரிந்த தந்தைக்கு இவருடைய நாடக மோகம் கவலையைக் கொடுத்தது.

நாடகங்கள் மீதான ஆர்வம் அவரை நாடகங்கள் நடக்கும் அரங்குகள் நோக்கி ஓட வைத்தது. நண்பர்களையும் அழைத்துக் கொண்டு நாடகங்கள் பார்க்கக் கிளம்பி விடுவது அவருக்குப் பிடித்தமான பொழுதுபோக்காய் இருந்தது.

நாடக ஆர்வம் அப்படியே சினிமா ஆர்வமாகவும் மாறிப்போனது. நாடகமும் சினிமாவும் பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாதது படி மாறியிருந்த காலகட்டம் அது. நாற்பதுகளின் ஆரம்பகாலம். நாடகத்தை அப்படியே படம்பிடித்து சினிமாவாய் காட்டுவது போலவே இருந்தன அன்றைய திரைப்படங்கள். அதிலும் அப்போது கொடிகட்டிப் பறந்த தியாகராஜ பாகவதரின் நாடகங்களின் மீது இவருக்கு தணியாத தாகம்.. பாகவதரின் நாடகங்கள் நடக்கிறதென்றால் எத்தனை தடைகளையும் தாண்டி பார்த்து விடவேண்டும் எனும் ஆர்வம் அவருடைய பதின் வயதுகளின் ஆரம்பத்திலேயே இருந்தது. சினிமா ஆர்வம் ஒரு விதை மாதிரி. அதை மனதில் ஆழமாய்ப் புதைத்து விட்டால் நம்மை அறியாமலேயே உள்ளுக்குள் வேர்விடும். வேர்கள் ஆழமாய் சென்றபின் அதன் கிளைகள் வெளியேறும். வேர் ஆழமாய்ப் பிடித்துக் கொண்டபின் வெளிவரும் கிளைகள் செழிப்பாகவே இருக்கும்

கிளைகளை வெட்டி விடுவதன் மூலம் வேர்களை அழித்து விட முடியாது என்பது தான் கலை ஆர்வத்தின் அடிப்படை தத்துவம். பூக்களை நிராகரிக்கலாம், இலைகளை விலக்கலாம், கிளைகளைக் கூட தறிக்கலாம். ஆனாலும் சாம்பலில் இருந்தும் புறப்படும் ஃபீனிக்ஸ் பறவை போல, விறகுகளிலிருந்து கூட சினிமா ஆசை பச்சையம் பெற்றுக் கொள்ளும்.
கதகதப்பான சினிமா உணர்வுடனேயே பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரியில் நுழைந்தார். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி படிப்பு. வாழ்க்கை நமது விருப்பங்களை எப்போதுமே கல்வியாய்த் தருவதில்லை. வெள்ளித்திரையின் மீது ஆசை கொண்ட பாலசந்தருக்கு வாய்த்தது விலங்கியல் பாடம். அதுவும் அப்பாவின் கண்டிப்பினால் தான் கல்லூரியில் போய் சேர்ந்தார்.

கல்லூரி காலம் எல்லோருக்குமே ஒரு பொற்காலம் தான். திறமை உடையவர்கள் அந்தத் திறமையை வளர்த்தெடுக்கலாம். அல்லது கிடைக்கும் வாய்ப்புகளை வீணடித்து வாழ்க்கையைச் சிதறடிக்கவும் செய்யலாம். கல்லூரி காலத்தில் கண்டிப்புகள் கதவடைப்பு செய்யும். எதையும் தீர்மானிக்கும் பொறுப்பு பெரும்பாலும் மாணவர்களிடமே விடப்படும். எதைத் தேர்ந்தெடுக்கிறாயோ அது தான் நாளை உனது தோழன் என்பது தான் கல்லூரி காலத்தின் நிலமை.

கல்வி என்பது சுதந்திரத்தின் தங்கக் கதவைத் திறக்கும் சாவி என்பார் ஜார்ஜ் வாஷிங்டன். பாலசந்தருடைய கலைக் கதவைத் திறக்கும் சாவி அந்தக் கல்லூரிக் காலத்தில் தான் கிடைத்தது.

கல்லூரி விழாவா, பாலசந்தரைக் கூப்பிடு எனும் நிலமை கல்லூரியில். பாலசந்தரின் நாடகம் இல்லாமல் ஒரு விழா நடக்காது என்பது கல்லூரியில் புதிய பாடம்.
கிடைக்கும் நேரத்திலெல்லாம் கதைகள் எழுதுவது அவருடைய பொழுது போக்குகளில் முக்கியமானது. எந்தக் கதை எழுதினாலும் அதில் ஒரு சின்ன புதுமையைப் புகுத்துவது பாலசந்தர் பாணி எனும் பேச்சு கல்லூரி காலத்திலேயே உண்டு.

வருடங்கள் ஓடின.. கல்லூரி காலம் முடிவுக்கு வந்தது. வெற்றிகரமான கல்லூரி காலத்துக்குப் பின் கலைப்பயணம் எனும் கனவுடன் வெளியே வந்தவருக்குக் கிடைத்தது சினிமா அல்ல ! பள்ளிக்கூடம். !
முத்துப்பேட்டை எனுமிடத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் துவங்கினார். ஏதோ ஒருவகையில் கல்வியோடும், எழுத்தோடும் தொடர்புடைய வேலை என்பதில் அவர் மகிழ்ச்சியடைந்தார்.
வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பார்கள். அடடா.. சினிமா கிடைக்காமல் ஆசிரியர் பணி செய்ய வந்தோமே என நொந்து கொள்ளவில்லை. "தென்றல் தாலாட்டிய காலம்" என அதை ஆனந்தமாய் எடுத்துக் கொண்டார். பள்ளிக்கூடத்தை தனது கலைக்கான இன்னொரு தளமாக பயன்படுத்திக் கொண்டார்.
பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் இவருடைய கதாபாத்திரங்களாக மாறினார்கள். ஆசிரியரின் இயக்கத்தில் மாணவர்களின் நாடகங்கள் பள்ளிக்கூடத்தில் பிரபலமானது. ஆனாலும் அந்தப் பணியை அவர் தொடர விரும்பவில்லை.

விதை எவ்வளவு தான் சிறப்பானதாக இருந்தாலும் அது பத்தாயத்துக்குள்ளே இருக்கும் வரை முளைக்காது. மீனுக்கு எவ்வளவு தான் நீச்சல் தெரிந்திருந்தாலும் அதை ஹார்லிக்ஸ் பாட்டிலில் போட்டால் வட்டமடிப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடிவதில்லை.
தளம் முக்கியம். இடம் முக்கியம். கலைப்பயணம் சிறகடிக்க வேண்டுமென்றால் பறவை இருக்க வேண்டிய இடம் தஞ்சாவூர் அல்ல, சென்னை என்பது அவருக்குப் புரிந்தது.
மூட்டை முடிச்சுகளுடன் அவர் சென்னைக்குக் கிளம்பியபோது அவருக்கு வயது 20 ! அடுத்த இதழில் **தப்பாத தாளங்கள்**




வெற்றிமணி வெள்ளிவிழா சிறக்க பல வழிகளிலும் முன்னின்று உழைத்த திரு.ஸ்ரீ.கோபிநாத் ( AKR Visualizers) அவர்கள் கௌரம் பெறும் வேளை



# தலைவன் இருக்கின்றான்








தலைவன் இருக்கின்றான் உலக நாயகன் கமல் ஹாசன் இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் பணியாற்றி தானே நாயகனாக நடிக்கும் அரசியல் திரைப்படம். இத்திரைப்படத்தினை கமல்ஹாசன் தனது தயாரிப்பு நிறுவனத் துடன், தயாரிப்பாளர் சுபாஷ்கரன்-ன் லைக்கா புரொடக்ஷன் என்னும் திரைப்பட தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கிறார். இப்படத்திற்கு இசையமைப்பாளர் ஏ ஆர் ரஹ்மான் இசையமைக்கிறார்.

தலைவன் இருக்கின்றான் திரைப்படம் பற்றி வெளிவந்துள்ள தகவல்கள் முழுக்க முழுக்க இந்திய அரசியலமைப்பை சார்ந்தும், அரசியலில் சமீபகாலமாக பெரிதாக பேசப்பட்டுள்ள பிரச்சனைகளை உள்ளடக்கிய ஒரு வலுவான திரைக்கதையினை கொண்டு உலக நாயகன் கமல் ஹாசன் இத்திரைப்படத்தினை அரசியல் மற்றும் அதிரடி திரில்லர் படமாக உருவாக்குகிறார்.

தலைவன் இருகின்றான் திரைப்படத்தில் நாயகனாக நடிக்கும் கமலுடன் நடிகர் சைப் அலி கான் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளிவந்ததை தொடர்ந்து, இத்திரைப்படத்தில் நடிகர் வடிவேலு நகைச்சுவையாளராக நடிக்கவுள்ளார்.

தலைவன் இருக்கிறான் திரைப்படம் கமல் ஹாசன் நடிப்பில் 1992-ம் ஆண்டு வெளியாகி மாபெரும் வெற்றியடைந்த தேவர் மகன் திரைப்படத்தின் தொடர்ச்சியாக இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேவர் மகன் திரைப்படத்தில் ஒரு சிறிய நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடித்திருந்த வடிவேலு இத்திரைப்படத்திலும் அதே கதாபாத்திரத்தினை தொடர்ந்து நடிக்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது.







## செஞ்சுட்டா போச்சுன்னு சொன்ன அட்லி..

அதிக பட்ஜெட்டில் வெளியாகியுள்ள படம் பிகில். இந்த படத்தில் விஜய், நயன்தாரா, விவேக், யோகி பாபு உள்ளிட்டோர் நடித்துள்ளனர். தீபாவளியை முன்னிட்டு கடந்த 25.10.2019 வெள்ளிக்கிழமை வெளியான பிகில் திரைப்படம் 100 கோடி வசூலை தாண்டி வெற்றி நடைபோடுகிறது.

இந்நிலையில், பிகில் 2 உருவாகுமா என்ற கேள்வியும் அதற்கு அட்லியின் அதிரடி பதிலும் ரசிகர்களுக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாக்ஸ் ஆபிஸ் சுமார் 1500 திரையரங்குகளுக்கு மேல் விஜய்யின் பிகில் திரைப்படம் வெளியானது. பிகில் வெளியான இரண்டாவது நாளிலே 100 கோடி வசூல் சாதனை செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது

## கைதி 2

இந்த தீபாவளிக்கு விஜய்யின் பிகில் திரைப்படத்திற்கு போட்டியாக கார்த்தியின் கைதி படமும் வெளியானது. லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள கார்த்தியின் கைதி படத்திற்கு பாசிட்டிவ் விமர்சனங்கள் குவிந்துள்ள நிலையில், கைதி 2 வருமா என்ற ரசிகர்கள் எதிர்பார்ப்பு எகிறியது. லோகேஷ் கனகராஜ் மற்றும் கார்த்தி ஆகிய இருவரும் கைதி 2 வரும் என தெரிவித்துள்ளனர்.

பிகில் 2 ராயப்பன், மைக்கேல் மற்றும் பிகில் என தளபதி விஜய் மூன்று கெட்டப்புகளில் சுமார் 3 மணி நேரம் பிகில் படத்தில் நடித்து தள்ளியுள்ளார்.

இந்நிலையில், கைதி 2 போலவே பிகில் 2வும் வருமா என்ற எதிர்பார்ப்பு விஜய் ரசிகர்களிடம் கிளம்பியுள்ளது. ராயப்பன் அசாருதின் எனும் விஜய் ரசிகர், நேரடியாக அட்லியின் ட்விட்டர் பக்கத்தில், பிகில் படத்தில் பலரையும் கவர்ந்த விஜய்யின் வயசான அப்பா கெட்டப்பான ராயப்பன் கதாபாத்திரத்தின் ப்ரீக்குவல் வருமா என கேட்டுள்ளார்.

அதற்கு உடனடியாக, செஞ்சுட்டா போச்சு என இயக்குநர் அட்லி பதிலளித்துள்ளார். இதன்மூலமாக பிகில் 2 திரைப்படம் உருவானால், அதில், ராயப்பனின், இளமையான நாட்களையும் அவர் ஏன் தாதாவானார் என்ற கதையும், அவருக்கான ஜோடி யார் என்ற ரகசியமும் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
எப்படி பார்த்தாலும் சூர்யாவை எவரும் வெல்லமுடியாது. சிங்கம் படம் சிங்கம் 4 வரை சென்றுவிட்டதே.




ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
தரமும் மலிவும் நிரந்தரம்!

ஆசிய ஆபிரிக்க மற்றும், இலங்கை, இந்திய
பலசரக்குப் பொருட்கள்,மரக்கறி வகைகள்,
கடல் உணவுவகைகள், அனைத்திற்கும், எம்மை நாடுங்கள்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven



உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!



Jasmine Silk House
நேரில் வந்து பாருங்கள்
பட்டுச்சேலை, பஞ்சாபி, குருதார்
மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்
அனைத்தும் வகை வகையாக உண்டு.
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen



ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவும் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கனேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282



Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976



Photography Cinematography Album Making Graphic Designing
AKR Visualizers
PHOTOGRAPHY AND CINEMATOGRAPHY
professional photography & cinematography
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
+49 231 1087 6361
+49 162 803 1647
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com
Rheinische Str. 72
44137 Dortmund

SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.



Dortmund மாநகரில்
Franziusstrasse 150 (Tor 3)
DE:44147 Dortmund
Tel:0231 860 2696
Fax:0231 860 2698
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
FOR SHOPS ONLY